www.padippakam.com



நந்தினி சேவியர்

# நெல்லிமரப் பள்ளிக்கூடம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நெல்லிமரப் பள்ளிக்கூடம்

படிப்பகம்

www.padippakam.com

## நூலாசிரியரின் பிற நூல்

அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் (1993)

படிப்பகம்

www.padippakam.com

# நெல்லிமரப் பள்ளிக்கூடம்

நந்தினி சேவியர்

எஸ். கொடகே சகோதரர்கள்
அரச விருதுபெற்ற வெளியீட்டாளர்
675, பீ. டீ எஸ். குலரத்ன மாவத
கொழும்பு 10

படிப்பகம்

www.padippakam.com

முதற் பதிப்பு - 2011

நெல்லிமரப் பள்ளிக்கூடம்

© நந்தினி சேவியர்

அட்டை வடிவமைப்பு
மேமன்கவி

வெளியிடுபவர்
எஸ். கொடகே சகோதரர்கள்
675, பி. டி எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு 10.

அச்சிட்டோர்
சத்துர அச்சகம்
69, குமாரதாஸ பிளேஸ், வெல்லம்பிட்டிய.

First Print - 2011

Nellimarap Pallikkoodam

© Nanthiny Xavier (T.Xavier)

ISBN 978-955-30-3146-4

*Cover Designed by:*
Memonkavi

*Published by:*
S. Godage & Brothers
675, P. de S. Kularatne Mawatha, Colombo 10.

*Printed by:*
Chathura Printers
69, Kumaradasa Place, Wellampitiya.

14018/2095/350

படிப்பகம்

www.padippakam.com

**என் மகன்**

டானிரெஜினோல்ட்டுக்கு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ரவிக்குமார்

டானியலுக்குப் பிறகு இலங்கைத் தலித் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவராகக் கருதப்படும் நந்தினி சேவியர், 1967ல் படைப்புலகுக்கு அறிமுகமானவர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனச்சார்பு) வாலிப இயக்கத்தில் இணைந்து செயற்பட்டு, அதன் தொடர்ச்சியாக தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு மாவிட்டபுரம், பன்றித் தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்.

க.கைலாசபதி, சிவத்தம்பி போன்ற மார்க்சிய விமர்சகர்களின் தொடர்போ, முற்போக்கு அணியினரின் தொடர்போ இன்றி சுயமான தேடலில் இலக்கியத்தைப் பயின்ற நந்தினி சேவியர் "படைப்பு முதலில் படைப்பாக இருக்க வேண்டும்" என்பதில் தீவிரமான பிடிப்பு கொண்டவர்.

மல்லிகை, அலை, புதுசு, தாயகம், வாகை, சுதந்திரன் முதலிய பத்திரிகைகளில் எழுதியுள்ளார். இவரது "மேகங்கள்" எனும் நாவல் ஈழநாடு நடத்திய நாவல் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது. பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்க குறுநாவல் போட்டியில் முதல் பரிசாக தங்கப்பதக்கத்தைப் பெற்றவர். 1993ல் தனது "அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" என்ற சிறுகதைத் தொகுதிக்காக முதற் பரிசும் பெற்றவர்.

குரலை உயர்த்தாமலேயே கொதிப்பை வாசகனுக்குக் கடத்த முடியும் என நிரூபிப்பவை இவரது சிறுகதைகள்.

**தலித் இதழ் ஜூன் – ௨௦௦௩**

படிப்பகம்

www.padippakam.com

# பேச்சுக்கும், எழுத்துக்கும், வாழ்க்கைக்கும் இடையே வித்தியாசமில்லாதவரான நந்தினி சேவியர்

-செ.யோகராசா

இம்மாத மல்லிகை முகப்பில் வெளிப்பட்டுள்ள நந்தினி சேவியர், என்ற புனைப்பெயருக்குச் சொந்தக்காரரான சேவியர் படைப்புலகைப் பொறுத்தளவில் சிறுகதை, நாவல், ஆய்வு, கவிதை (இளந்தலைமுறைக்கான) அறிமுகக் கட்டுரைகள், விமர்சனம் எனப் பல்வேறு முயற்சிகளில் ஏறத்தாழ 1966ஆம் ஆண்டு தொடக்கம் ஈடுபட்டு வந்துள்ளார். எனினும் நந்தினிசேவியர் என்றவுடன் அவரது சிறுகதை முயற்சியும் கூடவே அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் (1993) என்ற சிறுகதைத் தொகுதியுமே உடனடியாக நினைவிற்கு வருகின்றன. ஏனைய இலக்கிய முயற்சிகள் நூலுருப்பெறவில்லை என்பது ஒருபுறமிருக்க, அன்னாரது சிறுகதை முயற்சிகளே வாசகர்களினதும், விமர்சகர் களினதும் கவனத்தை ஈர்த்து, ஈழத்துச் சிறுகதை வரலாற்றிலே அவருக்கென்று ஓர் இடத்தை வழங்கக் கூடியனவாகவுமுள்ளன. ஆகவே, அவ்விதத்திலான அவரது முகத்தை முதலிலே வெளிக்காட்டுவதே பொருத்தமானதென்று கருதுகின்றேன்.

நந்தினிசேவியரின் முதற் சிறுகதையான 'பாரம்' 1967 இல் 'சுதந்திரன்' பத்திரிகையில் வெளியாயிற்று. தொடர்ந்து அவ்வப்போது மல்லிகை, அலை, புதிசு, தாயகம் முதலானவற்றிலும், அண்மைக் காலங்களில் சுட்டும்விழி, பெயர், தூண்டி, கண்ணில் தெரியுது வானம் முதலானவற்றிலும் அவரது படைப்புகள் பிரசுரமாகின. ஏறத்தாழ 30க்கு மேற்பட்ட சிறுகதைகள் இன்றுவரை எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் எட்டுச் சிறுகதைகள் மட்டுமே 'அயல் கிராமங்களைச் சேர்ந்தவர்கள்' (1993) தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இவ்வேளை இவற்றை அடிப்படையாகக் கொண்டே நந்தினி சேவியரது சிறுகதைகள் பற்றிய அபிப்பிராயங்களைக் கூற முற்படுகின்றேன். இச்சிறுகதைகள் 1969 ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வெளிவந்தன என்பதனை முதலில் மனங்கொள்வது அவசியமாகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி ஓட்டம் பற்றிக் கூர்ந்து கவனிக்குமொருவர் ஈழத்து முற்போக்கு அணிசார்ந்த எழுத்தாளர்கள் பலரதும் சிறுகதைகள் பிரச்சாரப் பண்பு வாய்ப்பாட்டுத் தன்மை, உருவ அமைதி பேணப்படாமை என்ற பண்புகள் பெற்றமைந்திருப்பதை அவதானிப்பர். மாறாக, அதே முற்போக்கு அணிசார்ந்த நந்தினி சேவியரது சிறுகதைகள் கலாபூர்வமான சிறுகதைகளாகத் திகழ்வதைக் கண்டிருப்பர். நந்தினிசேவியரது சிறுகதைகள் தொடர்பாக முதலிற் கூற வேண்டிய விடயம் இதுவென்றே எண்ணுகின்றேன்.

அதேவேளை, இன்று பின்நோக்கி ஆழமாக நோக்குகின்ற போது சிறுகதைகள் வேறு சில சிறப்பியல்புகள் பெற்றிருப்பது தெரிய வருகின்றது. அவற்றுள் இரு விடயங்கள் பற்றி இவ்வேளை குறிப்பிடுவதவசியம்.

ஒன்று இவரது சிறுகதைகள் பெரும்பாலானவை விளிம்பு நிலை மக்கள் பற்றிய சிறுகதைகளே. முற்போக்கு அணிசார்ந்த வேறு சில எழுத்தாளர்களும், முற்போக்கு அணிசாராத பித்தன் போன்ற எழுத்தாளர்களும் எழுதியிருக்கின்றனர் என்று ஒருவர் வினவலாம். அது உண்மைதான். எனினும், நந்தினிசேவியரது சிறுகதைகள் அவர்களது படைப்புகளிலிருந்து வேறுபட்டு, வித்தியாசமான பாத்திரங்களையோ, களங்களையோ கொண்டனவாக அமைந்துள்ளன என்பதே கவனத்திற்குரியது.

மேற்கூறிய அம்சத்தை விடவும் முக்கியமான மற்றொரு விடயம், ஈழத்துத் தமிழ் இடதுசாரிக் கட்சியின் ஒரு கால கட்ட வரலாற்றை (ஏறத்தாழ 1960 தொடக்கம் 1985 வரை) நந்தினி சேவியரது சிறுகதைகள் பிரதிபலிப்பது. இவ்விதத்தில் 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' 'ஒரு பகற்பொழுது' 'தொலைந்து போனவர்கள்' ஆகிய மூன்று சிறுகதைகளையும் கவனத்திற் கெடுப்பதே போதுமானது. அவற்றுள் முதலிற் குறிப்பிடப் பட்டுள்ள 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்'சிறுகதையை, தீண்டாமை

படிப்பகம்

www.padippakam.com



ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடத்திய ஆரம்பகாலப் போராட்ட வெற்றிகளின் பின்புலத்தில் வைத்துப் பார்க்க வேண்டும். இச்சிறுகதையிலே கிராமமொன்றிலுள்ள மக்களனைவருமே போராடுகின்றனர். (அடுத்து வரும் சிறுகதைகளிலே மக்களுக்குப் பதிலாக கட்சி உறுப்பினர்கள், தனிநபர்கள், காட்டிக் கொடுப்பவர்கள், ஒதுங்கிச் செல்பவர்கள் என எண்ணிக்கை குறைந்து செல்கின்றது) 'ஒரு பகற் பொழுது' சிறுகதையில் வரும் செல்வமும் அவளது கணவனும் புரட்சி குறித்துப் பயந்து சாகின்றார்கள். இத்தகைய நிலைமை ஏனைய சிறுகதைகளில் வெவ்வேறு பரிமாணங்களிலே வளர்ந்து செல்கின்றது. ஆரம்பத்தில் கவனியாது விடப்பட்ட தமிழ்த்தேசியஇனப்பிரச்சினை முற்றி ஆயுதப்போராட்டமாக வெடித்தபோது, இடதுசாரிக் கட்சியினர் பலர் பேசாமடந்தை களாகின்றனர். மாறாக, பொதுமக்கள் பலர் சாதி, வர்க்க, பிரதேச வேறுபாடுகள் கடந்து ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கினர். இப் பின்னணியிலேயே 'தொலைந்து போனவர்கள்' சிறுகதையை நோக்குதல் வேண்டும். இச்சிறுகதையிலே இடம் பெறுகின்ற 'மணியம்' முக்கியமான தொரு பாத்திரம். முன்னைய சிறுகதைகளில் இடதுசாரி அரசியலிலே ஈடுபட்டவர்களின் தொடர்ச்சியாக விளங்கும் மணியம் தான் ஏற்றுக் கொண்ட அரசியலில் இப்போது ஈடுபட முடியாதவர். தன்னிடம் படித்தவர்கள், உறவினர்கள் எனப்பலரும் ஆயுதப் போராட்ட இயக்கங்களில் இணை வதற்காகத் தொலைந்து போவதை வியப்புடனும், மகிழ்ச்சியுடனும் அங்கீகரிப்பதைத் தவிர, அவரால் வேறெதுதான் செய்யமுடியும்? அவரின் காலில் பட்ட ஊனம் உண்மையில் ஒரு குறியீடுதான்! தமிழ் இடதுசாரிகளுக்கு ஏற்பட்ட ஊனமே அது என்பதில் தவறில்லை. (இவ்விதத்தில் ஈழத்து அரசியல் சிறுகதை வரலாற்றுப் பின்புலத்தில் முக்கியமான தொரு பாத்திரம் மணியம் என்பதில் தவறில்லை)

ஆக மேற்கூறிய விதத்தில் அவதானிக்கின்ற போது நந்தினி சேவியரின் சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில

படிப்பகம்

www.padippakam.com

பெறுகின்ற முக்கியத்துவம் விதந்துரைக்கப்பட வேண்டிய தாகின்றது. இவ்விதத்தில். ஏனைய முற்போக்கு அணிசார்ந்த எழுத்தாளர்களின் சிறுகதைகளிலிருந்து வேறுபட்டும், தனித்துவம் பெற்றும் விளங்குவது கண்கூடு.

மேற்கூறிய பண்பு, நந்தினிசேவியரது முக்கியமான பிறிதொரு ஆளுமையைப் புலப்படுத்தி நிற்கின்றது. அதாவது நந்தினி சேவியர் தமிழ் இடதுசாரிக் கட்சியினர் (சீன சார்பு) அறுபது களில் நடத்திய வெகுஜன போராட்டங்கள் பலவற்றில் ஈடுபட்டவர். இவ்விதத்தில் அவர் இயக்க எழுத்தாளராக மட்டுமன்றி போராட்டங்களிலீடுபட்டு செயற்பாட்டாளராகவும் உள்ளமை முக்கிய கவனிப்பிற்குரிய தொன்றாகிறது. கூடவே, இடதுசாரிக் கட்சியினரது போராட்டம் பற்றிய பலம், பலவீனம், பற்றிய நடுநிலை நோக்குடைய தீவிரமான விமர்சகரென்பதும் குறிக்கப்பட வேண்டியதாகின்றது! நந்தினி சேவியரின் இத்தகைய முகமும் பரவலாக அறியப்படாததொன்றன்றோ.மேற்கூறிய அளவிற்கு முதன்மை பெறாவிடினும், நந்தினிசேவியரிடம் வேறு பல முகங்களுமுள்ளன.

'ஈழநாடு' நடத்திய நாவல் போட்டியில் (1969) இரண்டாம் பரிசு பெற்ற நாவல், பேராதனைத் தமிழ்ச்சங்கம் நடத்திய போட்டியில் (1974) தங்கப்பதக்கம் பெற்ற குறுநாவல் ஆகியவற்றின் சொந்தக்காரர் அவர். (பரிசு என்கின்ற போதுதான் 1993 இல் சிறந்த சிறுகதைத் தொகுப்பிற்காகப் பெற்றுக் கொண்ட 'விபவி' விருதும், யாழ் கூட்டுறவுத் திணைக்கள "தமிழின்பக்கண்காட்சி" விருதும் நினைவிற்கு வருகின்றன.) இந்நாவல்களும் அன்னாரது படைப்பாளுமைகளைப்பற்றி வெளிப்படுத்தக் கூடுமாயினும், அவற்றை வாசிக்கும் வாய்ப்புக் கிடைக்காதபடியால் அவை பற்றி எதுவும் கூறமுடியவில்லை. அவ்வப்போது அவர் எழுதி வந்துள்ள கவிதைகள்பற்றிய நிலையும் இதுதான். (இவற்றோடு 'கடற்கரையில் தென்னை

படிப்பகம்

www.padippakam.com

மரங்களும் நிற்கின்றன' என்ற பெயரில் சிந்தாமணிக்கு அனுப்பி நின்று போய்விட்ட நாவல். 1986 இல் இடம்பெற்ற 'ஒப்பிறேசன் லிபறேசன்' பற்றி 'வல்லையிலிருந்து வல்லிபுரம் வரை' என்ற பெயரில் எழுதி இடையில் நிறுத்தப்பட்ட நேரடி றிப்போட் ஆகியனவற்றின் சொந்தக்காரருமாவார்.)

காத்திரமான கட்டுரைகளும் அவ்வப்போது நந்தினிசேவியரால் எழுதப்பட்டுள்ளன என்பதை நான் நன்கறிவேன். ஆயினும், அவற்றுள் முற்போக்கு இலக்கிய வளர்ச்சி(?) பற்றிஅண்மையில் பத்திரிகையொன்றில் எழுதி வெளிவந்த கட்டுரைத்தொடரும் 'தமிழ் இனி – 2000' தமிழ்நாட்டுக் கருத்தரங்கிலே 'இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து மார்க்சிய இலக்கியம்' பற்றிஅவர் சமர்ப்பித்த கட்டுரையும் மட்டுமே இவ்வேளை நினைவிற்கு வருகின்றன. தேசிய கலைஇலக்கியப்பேரவை முதலான இலக்கிய அமைப்புகள் வாகை, சமர் முதலான சஞ்சிகைகள் முதலானவற்றோடும் அவ்வப்போது நந்தினிசேவியருக்குத் தொடர்புகளிருந்து வந்துள்ளன. வடக்கு கிழக்கு மாகாண கலை பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அண்மைக் காலங்களில் சிறந்த நூல்களைப் பரிசிற்குரியனவாகத் தேர்ந்தெடுத்து வந்துள்ளதில் அங்கு கடமையாற்றி வந்த நந்தினி சேவியருக்கும் மறைமுகமானதொரு பங்களிப்பு இருந்திருக்குமென்று ஊகிக்கத் தோன்றுகிறது.

ஈழத்து இலக்கிய உலகில் இவ்வாறெல்லாம் முக்கியம் பெறினும் நந்தினிசேவியர் நன்கறியப்படாதவராக இருந்து வருகின்றார். விமர்சகர்களால் கவனிக்கப்படாதவராக விளங்குகின்றார். யாரோடும் ஒத்தோடும் தன்மை இல்லாமையும், பேச்சுக்கும் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் வித்தியாசமில்லாத வாழ்க்கை நிலையும் இதற்கான காரணங்கள் போலும். தனிப்பட்ட வாழ்க்கையில் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு இளமைக்காலம் தொடக்கம் முகங்கொடுத்து வந்துள்ள நந்தினி சேவியர் 40 வருட எழுத்துலக வாழ்விலும், தான் பல தடவைகள்

படிப்பகம்

www.padippakam.com

பல்வேறு இருட்டடிப்புகளுக்குட்பட்டதாகவும் கருதுகின்றார். செங்கை ஆழியான் தொகுத்த சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பு, மல்லிகைச் சிறுகதைத் தொகுப்புகள், (வடமராட்சி, கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் தொகுத்த) 'உயிர்ப்புகள்' சிறு கதைத் தொகுப்பு ஆகியவற்றில் தனது சிறுகதைகள் தவிர்க்கப்பட்டுள்ளமை முதலான செயற்பாடுகள் அத்தகையனவே என்பது நந்தினி சேவியரது உறுதியான கருத்தாகின்றது.

அது எவ்வாறாயினும் நந்தினிசேவியரிடமிருந்து சிறந்த சிறுகதைகள், நாவல்கள் என்பவற்றோடு ஈழத்து தமிழ் இடது சாரிகளின் வரலாறு முதலான பலவற்றையும் ஆர்வமுள்ள வாசகர்கள் எதிர்பார்த்தவாறுதான் உள்ளனர். இதுவரை அவர் செய்தவற்றைவிட, இன்றும் பலவற்றை இன்னும் வலுவோடும் வனப்போடும் செய்யக் கூடியளவிற்கான தேடலும், வாசிப்பும் வாழ்க்கை கொடுத்து வந்த அடிகளும் பாடங்களும் நிறைய அவரிடமுள்ளமையே அதற்கான காரணங்களாகின்றன. அண்மைக்காலத்தில் இருதய நோயின் கொடுமையிலிருந்து நல்ல விதத்திலே அவர் மீண்டு வந்துள்ளமை அதனாற் போலும்,ஈழத்து இலக்கிய உலகில் இவ்வாறெல்லாம் பன்முகங்களுடன் இருந்து வருகின்ற நந்திநிசேவியர், சாதாரண தொழிலாளரொருவரின் மகனாக 1949இல் மட்டுவிலில் பிறந்தவர். தேவசகாயம் - றோசம்மா தம்பதிகளின் மூன்றாவது புதல்வர். க.பொ.த.சாதாரண தரம் வரை கற்றவர்.

சொந்தப் பெயரிலெழுதிப் பிரசுரமாகாத நிலையில் நந்தினி என்ற பெண் பெயரைப் புனைப் பெயராகக் கொண்டு எழுதி பிரசுரரீதியில் வெற்றி பெற்றார். இதனால் தொடர்ந்து நந்தினிசேவியர் என்ற பெயரில் எழுதி வந்தார். சில சந்தர்ப்பங்களில் சகாயபுத்திரன், தாவீதுகிறிஸ்ரோ என்ற பெயர்களையும் தரித்துக் கொண்டவர்.

***'மல்லிகை' ஒக்டோபர் 2007**

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே........

மேய்ப்பன்........................15

ஒற்றைத் தென்னை...............22

கடலோரத்துக் குடிசைகள்......29

மனிதம்..........................40

நெல்லிமரப் பள்ளிக்கூடம்.......42

தவனம்..........................47

எதிர்வு...............................56

விருட்சம்.........................73

படிப்பகம்

www.padippakam.com

# மேய்ப்பன்

"டாண்... டாண்! டாண்!"

புனித தோமையார் ஆலய திருந்தாதி மணி இடையிடையே ஒலிக்கிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை தான்.

ஆனால் இந்தக் கோவிலில் பூசை நடக்காது.

பூசை நடைபெற்று இரு வருடங்களாகி விட்டன. கோவிலில் பூசை மட்டும் நடைபெறுவதில்லையே தவிர, காலந்தப்பாது திருந்தாதிமணி மட்டும் ஒலிக்கும்.

இந்த ஒழுங்கின் காரணகர்த்தா சங்கிலித்தாம் அவர்கள்.

அவர் இல்லாவிட்டால்...?

அவ்வூரின் கேந்திரப் பகுதியாக உள்ள கடற்கரைப் பிராந்தியத்தில் விரிந்து இருக்கும் கடற்கரையின் எதிர்ப்புறத்தில் அஞ்சல் அகத்தை அண்மித்து நிமிர்ந்து நிற்கின்றது தோமையார் ஆலயம்.

அது அப்பிராந்திய கடற்கரை வாழ் மக்களின் சொத்தாகும்.

புனித தோமையார் ஆலயத்தை நினைப்பவர்கள் சங்கிலித்தாம் கிறகோரியை மறக்க மாட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



கோவிலின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் ஒழுங்குக்கும் பொறுப்பாளி அவர்தான். இதனால் அவருக்கு ஊரில் நல்ல மரியாதையும் இருந்தது.

சங்கிலித்தாம் கிறகோரி நல்ல தேகக்கட்டுடையவர். வயது சுமார் அறுபதுக்கு மேல் இருக்கும். ஆனால் இன்று கூட தனியே கடலுக்குப் போக அஞ்சாதவர்.

கரைவலை... விடுவலை... கொண்டோடி வலை.... தூண்டி வலை... படகுவலை...

இப்படி எத்தனையோ நுணுக்கமான தொழிற்பாடுகளை அறிந்தவர்.

தோமையார் ஆலயத்திருநாள் தொடங்கி விட்டால் அவர் கடலுக்குப் போவதே கிடையாது.

அவ்வேளையில் அவருடைய கட்டுமரமும் வலையும் கரையேறி பிணையல் கழன்று வெயிலில் ஓய்வெடுக்கும்.

அவர் தான் கோவில், கோவில் தான் அவர்.

அந்தக் காலம் பொற்காலம்......?

திருந்தாதிமணி விட்டு விட்டுக் கேட்கிறது. கிறகோரியின் ஞானமகன் பிரான்சிஸ் மணியின் தேய்வொலி கேட்டுச் சிலிர்க்கின்றான்.

கோவில் மணி ஒலி அவனை தூண்டில் போட்டு கோவிலுக்கு இழுக்கின்றது.

ஞானத்தந்தையின் நினைவு வலை இழுவையாக இழுக்க ....

அவன் கோவிலை அடையவும் திருந்தாதிமணி அடிப்பதும் நின்று விடுகிறது.

ஆனாலும் அந்த மணியின் தொனி அலை அலையாகத் தேய்வது மட்டும் நிற்கவில்லை

கிறகோரி கோவில் விறாந்தையில் உட்கார்ந்து இருக்கின்றார். அவர் கண்கள் சற்றுத் தொலைவில் உள்ள கடற்பரப்பில் எதையோ தேடிக்கொண்டிருக்கின்றன.

மிதப்புக் கட்டையின் அசைவை வெறிக்கும் விரக்திப் பார்வை...

ஏதோ ஆழ்ந்த யோசனை.

படிப்பகம்

www.padippakam.com



தவிர்க்கவோ... எடுத்து எறிந்து விடவோ முடியாத சிந்தனை...

வலைக்குள் சிக்கிக் கொண்ட மீனின் அவலம், நிர்ப்பந்தத்தின் பிடிக்குள் முடங்கி விட்ட ஒரு நிலை...

"தொட்டையா"

பிரான்சிஸ் மெதுவாக அழைத்தான். அவர் சிந்தனை இடம்பெயர்கிறது.

"என்ன தொட்டையா யோசனை?"

அவர் அவனை நிமிர்ந்து பார்த்தார். வாய் திறக்கவில்லை. மௌனமாக இருக்கிறார்.

"சாப்பிட்டியளா தொட்டையா?"

பிரான்சிஸ் மீண்டும் கேட்டான்.

"அதுக்கென்ன குறைச்சல்" இவ்வார்த்தைகளில் சலிப்பு பிரதி பலிக்கின்றது. மீண்டும் அமைதியாக அவர் வாய் திறக்க...

"சாப்பாடு மட்டும் இருந்தால் போதும்... எனக்கு.... இந்த... இதை... நிம்மதி வேண்டாமோ...?"

கிறகோரியின் குரல் கரகரத்தது.

"நீங்கள் என்ன செய்யேலும் தொட்டையா"

பிரான்சிஸ் மெதுவாக முனகினான்.

"மகன் உனக்குத் தெரியாது... நீ குழந்தை... இந்தக் கோயிலைக் கட்டுறதுக்கு நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டம்."

சங்கிலித்தாமுக்கு இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது உணர்ச்சியால் உடல் நடுங்கியது.

"இந்தக்கோயிலுக்கு ஒருத்தருமே வாறதில்லை..... நான் முன்னுக்கு நிண்டு கட்டின கோயில். என்ரை கண்ணுக்கு முன்னாலேயே சீரழியுது...."

தொடர்ந்து பேசிய அவர் தலையைக் கவிழ்ந்து கொண்டார்.

அவர் அழுகையை அடக்க முயல்வது

பிரான்சிஸுக்குப் புரிந்தது.

அவரது மகன் சக்கரியாஸ் காணாமற்போனபோதுகூட அவர் இவ்வளவு கவலைப்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



இதற்கு அடிப்படை ஒரு சிறு சம்பவமே. கத்தோலிக்கர்களின் மேய்ப்பன் என்று பெஞ்சமின் குருவானவரால் போற்றப்பட்ட அவனின் ஞானத்தந்தை இப்போது மந்தைகள் இல்லாத மேய்ப்பன்.

அவரைப் பார்க்க விரும்பாத பிரான்சிஸ் தனது பார்வையைக் கோவில் சுவரை நோக்கித் திருப்பினான்.

கோவில் மிகவும் பழுதாகி விட்டிருந்தது. அதன் தேஜஸ் மங்கி இன்னும் இரண்டு வருடம் இப்படியே இருந்தால் அது நிச்சயம் அழிந்துதான் போய்விடும்.

"நான் எதுக்கும் பயப்பிடவில்லை மகன். கும்பாகூட என்னாலை கோயிலுக்குவாறதில்லை எண்ணிறதை நினைக்க..."

கிறகோரி விம்மினார்.

"கும்பா" என்கிற உறவு முறை பிரான்சிஸின் தந்தையைப் பற்றியது.

பிரான்சிஸுக்கு கிறகோரியோடு கதைக்கக்கூடாதென்று அவன் தந்தை கட்டளையிட்டிருந்தார். ஆனாலும் அவன் அதை மிகவும் பயத்துடனேயே மீறிக்கொண்டிருந்தான்.

அவனால் தன் ஞானத்தந்தையைப் புறக்கணிக்க முடியவில்லை. அவர் நியாயத்தைத்தான் செய்திருப்பதாக அவன் நம்பியிருந்தான்.

"நீங்கள் சுவாமியிட்டை போனனீங்களோ?"

"ஓம்... போனனான்..."

"என்ன சொன்னவர்...?"

"எல்லாரும் ஒற்றுமையாய் வந்தால் தானும் வாறாராம். மேற்றிராணியாரும் அதைத்தான் சொன்னவராம்."

"இது நடக்கக் கூடியதா?" பிரான்சிஸ் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான்.

அங்குள்ளவர்களுக்குள் இரண்டு பிரிவு. இதைத் தீர்த்து வைக்கக் கூடிய சங்கிலித்தாமே இருபகுதியினருக்கும் எதிரி. இந்நிலையில்...

தீர்வு...?

படிப்பகம்

www.padippakam.com



பிரான்சிஸ் தன் ஞானத்தந்தையை வெறிக்கப் பார்க்கிறான். அவர் நிலத்தில் ஏதோ கைகளால் கீறிக் கொண்டிருக்கிறார். அவர் சிந்தனை வலை பின்னுகிறது. அது அவர் முகத்தில் அப்பட்டமாகத் தெரிகிறது. சென்றவருடம் அடித்த புயலில் மகன் அள்ளுண்டுபோகாதிருந்தால் அவர் இப்போதும் மதிப்பானவராகத்தான் இருந்திருப்பார்.

அவரது மகனின் மனைவியாகிய தெரேசாவை அவர் கந்தசாமிக்கு மறுமணம் செய்து கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும், சங்கிலித்தாமின் மதிப்புக் குறைந்ததும் இதனால்தான்.

அவர் தெரேசாவை..... அத்திருமணத்தை முடிக்காதிருந்தால்....

இழிவேதும் ஏற்படாமலிருக்கவே கிறகோரி இருவரையும் நேர்மையான விதத்தில் இணைத்தார்.

சங்கிலித்தாமின் நேர்மை மற்றவர்களுக்கு சகிக்கமுடியாத கோபத்தை உண்டு பண்ணுமென எதிர்பார்க்கவில்லை.

சங்கிலித்தாம் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டார்.

முன்பே பல பிரச்சினைகளால் கோவிலுக்கு வராமல் இருந்தவர்கள் இப்பிரச்சினையையும் அழுங்குப்பிடியாகப் பிடித்து கோவிலுக்கு வருவதை நிறுத்திக்கொண்டு விட்டார்கள்.

கோவிலில் பூசை இல்லை.

திருந்தாதி மட்டும் அடிக்கிறது. கிறகோரியும் இல்லாவிட்டால்...? கிறகோரி பிரான்சிஸை நிமிர்ந்து பார்த்தார்.

"மகன்! கோயில் சிலவுக்கு ஒரு ஐம்பதுரூபா வேணும். தேவநற்கருணைக்கூட்டுச்சீலையும்... பெரிய கூட்டை மூடியிருந்தசீலையும் நல்லாய்க் கிழிஞ்சுபோச்சுது... இப்பிடியே விட்டுட்டால் இரண்டும் உக்கிப்போயிடும்..."

கிறகோரி எட்டாத் தண்ணியில் தத்தளிக்கும் நீச்சல் தெரியாத மனிதனின் அவஸ்தையில் முக்கி முனகினார்.

பிரான்சிஸிடம் ஏது பணம் ?

அவன் தனது முகத்தை மறுபுறம் திருப்பி வைத்துக் கொண்டான். கிறகோரிக்கு அவன் நிலை புரிந்திருக்கவேண்டும். அவர்பேசுவதை நிறுத்திக் கொண்டு, கடலை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

படிப்பகம்

இருட்டில் சீறும் அலைகளின் பேரோசை கேட்கிறது. கிறகோரியின் இதயமும் அடித்துப் புரண்டு அலையோசை காட்டுகிறது.

பிரான்சிஸ் அங்கு வந்தபோது இருந்த அதேநிலை. ஐஸ் போட்ட மீனின் மரத்தன்மையது.

பிரான்சிஸுக்கு அவர் அப்போதும் இதைத்தான் சிந்தித்துக் கொண்டிருந்தார் என்பது பட்டவர்த்தனமாகிவிட்டது.

திடீரென கிறகோரி விம்மி அழுதார்.

“மகன் எனக்கொரு உதவி செய்வியளே?”

“என்ன தொட்டையா”?

“இண்டைக்குக் கடல்லை போகலாமெண்டிருக்கிறன்... வந்து அந்த மரத்தைப் பிணைச்சுத் தாறியளே...? “

அவன் தலையசைத்தான்.

கிறகோரி கடலுக்குப் போய் இரண்டு வருடங்கள். சக்கரியாஸ் இறந்த பிறகு அவர் கடலுக்கே போகவில்லை. ஆனால் இன்று... ஒரு நிர்ப்பந்தம். பிரான்சிசுக்குப் புரிந்தது.

அவரது குடிலிலிருந்து கொண்டுவந்த ஏதனங்கள் அனைத்தையும் பிணைத்துவிட்ட மரத்தில் வைத்துவிட்டு கைகளால் மரத்தை நீரினுள் தள்ளினான் பிரான்சிஸ்.

ஏனோ அவன் கை நடுங்கியது.

கிறகோரி அவனைப்பாடும்படி வற்புறுத்தினார்.

பிரான்சிஸ் மெதுவாகப் பாடினான்.

“எங்கே சுமந்து போகிறீர். என் யேசுநாதா – எங்கே சுமந்து போகிறீர்”.

கிறகோரியும் மெதுவாகப் பாடியபடி சவளால் நீரை வலித்து முன்னேறிக்கொண்டிருந்தார். இருளில் மரம் வானைக் கடந்து அலைகளைப் பிளந்து முன்னேறிக் கொண்டிருந்தது.

பிரான்சிஸ் நெடுநேரம் கடற்கரையில் நின்று கொண்டிருந்தான்.

இடி இடித்தது. மின்னல் மின்னியது.

இரவுமுழுக்க நல்ல மழை. தொடர்ந்து பகலுமிரவுமாக இரண்டுநாட்களாக மழை.

அன்றிரவு கடலுக்குப் போன அனேகர் ஏதேச்சையாகத் தப்பிவந்தார்கள்.

வராத சிலருள் சங்கிலித்தாம் கிறகோரியும் ஒருவர்.

டாண்....டாண்....டாண்!

தோமையார் கோவில் மணி தேய்வாக ஒலிக்கிறது.

அது திருந்தாதியல்ல...

இறந்துவிட்ட கிறகோரிக்காகவும் மற்றவர்களுக்காகவும் அடிக்கப்படும் துக்கமணி.

அடிப்பவன் பிரான்சிஸ்.

இன்று இதுவும் நின்று விடும்.

திருந்தாதி...?

***-ஈழநாடு 1970**

படிப்பகம்

www.padippakam.com

# ஒற்றைத் தென்னை

பிரபஞ்சவெளியை ஊடுருவிக் கொண்டு நிமிர்ந்து நிற்கிறது அந்த ஒற்றைத்தென்னை.

தொலைதுாரத்தில் தெரியும் தீவுக்கூட்டங்களுக் கும், எட்டத்திலேவரும் இயந்திர வள்ளங்களுக்கும், பாய்கட்டி ஓடும் படகுகளுக்கும் குருநகர் ஜெட்டி இறங்கு துறையைக்காட்டும் கலங்கரை விளக்கம் அந்த ஒற்றைத்தென்னை.

வரிசையாக இறங்குதுறையோரம் நிற்கும் இயந்திர வள்ளங்கள் நீர்ச் சுழிப்பில் நர்த்தனமிட்டுக் கொண்டிருந்தன.

கடலின் முள்ளந்தண்டாக நீண்டு கிளைவிட்டு சுட்டியல் அமைப்பில் மல்லாந்து கிடக்கும் அந்த இறங்குதுறை ரோட்டின மருங்கில் குவிக்கப்பட்டு இருக்கும் மீனை ஒருவன் பிளந்து பிளந்து எறிய, குடல்களையும் கழிவுப்பதார்த்தங்களையும் அலசி அலசி வீசுகிறான் மற்றொருவன்.

எறியப்படும் மீனை ரோட்டில் சாக்கைப் பிரித்துக் கொட்டியிருக்கும் உப்புக் குவியலில் பிரட்டி எடுத்து அடுக்குகிறான் இன்னொருவன்.

படிப்பகம்

www.padippakam.com



தொலைதூரம் நீரைக் கிழித்துக்கொண்டுவரும் ஒரு வள்ளம் இறங்கு துறையை அண்மித்து நிற்கிறது.

கயிற்றை எறிந்து இறங்குதுறையின் குத்துக் கல்லில் கட்டும் சந்தியாக் கிழவன்,

"மருமோன்....மருமோன்" என்று குரல் கொடுத்தான்.

அவன் முகத்தில் பூரணதிருப்தியின் சாயல்.

செவத்தி என்கிற செபஸ்தியாம்பிள்ளையும் அவனோடு வள்ளத்தை விட்டு வெளியில் வந்தான்.

"மிச்சம் நல்லாய் இருக்கு... செவத்திக்கு நல்ல மலிவு"

இறங்குதுறையில் மீன்பிடிக்கும் அல்போண்சனைப் பார்த்து முனகினான் சந்தியாக்கிழவன்.

அந்த வள்ளத்தை அவர்கள் பருத்தித்துறையிலிருந்து வாங்கியிருந்தார்கள். வெள்ளோட்டத்திற்காக அந்த வள்ளத்தை கௌதாரிமுனைவரை ஓட்டிச் சென்று அவர்கள் இருவரும் திரும்பியிருந்தார்கள்.

வள்ளத்தின் அமைப்பும் இயந்திரங்களின் பாவனையும் சந்தியாக்கிழவனுக்கு நன்றாகப்புரியும்.

அல்போண்சன் சந்தியாக் கிழவனைப் பார்த்து,

"அம்மான்... நீ போனால் சும்மா சாதாரணமே... எடுப்பாய்!"

என்று சிரித்தான்.

வெய்யிலின் அகோர எறிப்பிலும் கிழவன் அவர்களோடு தொழிற்பாடுகளைப் பற்றியே பேசிக்கொண்டு இருக்கிறான்.

செவத்தியின் மனைவி தூரத்தில் நின்று குரல் கொடுப்பது கேட்கிறது.

"ஓ... அம்மான்... உந்தாளையும் கூட்டிக்கொண்டு தேத்தண்ணி குடிக்க வா..."

அவளின் குரல் மெதுவாக ஒலித்தடங்குகிறது.

"அம்மான் தான் இந்த நேரம் தேத்தண்ணிக் குடிக்கும். அக்கை சும்மா சாட்டுக்கு கூப்பிடுது...." என்றான் நீருள் மீனை அலசியபடி நிற்கும் றொபேட்.

படிப்பகம்

www.padippakam.com



அவன் கூறியதில் நியாயம் இருப்பது போல் சிரித்த சந்தியா தலைப்பாகையை அவிழ்த்து முகத்தைத் துடைத்தபடி பிரதான வீதியை நோக்கி நடக்கத்தொடங்கினான்.

இறங்குதுறையில் நிற்கும் அநேக கண்கள் அவனை அனுதாபத்தோடு நோக்கின.

பெருமூச்சுக்கள் வெடித்துச் சிதறுகின்றன. அவன் நடக்கிறான்.

சந்தியாவுக்கு அறுபத்தைந்து வயது இருக்கும். ஆனாலும் கட்டுமஸ்தான தேகமும், வலிமை மிக்க மன உறுதியும் அவனை இன்னும் உசுப்பவில்லை.

குருநகர் வாழ் மீனவர்களுக்கும், மற்றைய சமூகத்தினருக்கும் அவனைப்பற்றி நன்றாகத்தெரியும்.

இன்றுவரை அவன் யாருக்குமே பயந்ததுமில்லை. இனியும் பணியப்போவதுமில்லை.

சிறுவயதிலிருந்தே சுறாக்குட்டியைப்போல் சுறுசுறுப்பாக எதிர்நீச்சல்போட்டுப் பழகியவன் அவன்.

இன்றுவரை அவனை அசரப்பண்ணியவர்கள் எவருமில்லை.

பெரிய சம்மாட்டிகள் முதலாளிகள் எத்தனையோ பேரை எதிர்த்து நின்ற ஒரேஒரு நேர்மையான தொழிலாளி குருநகரில் உண்டென்றால் அது சந்தியாக்கிழவனேதான்.

எத்தனையோமுறை பொலிசாரைக்கொண்டு அவனுக்கு எதிராகப் பலவித நடவடிக்கைகளைப் பணமுதலைகள் செய்தன.

ஆனால் அவைகளினால் அவனை ஒன்றுமே செய்யமுடியவில்லை.

நெஞ்சுரம் பெற்றவன் சந்தியாக்கிழவன்.

அவனது குடும்பமே அழிந்தொழிந்தபோதும் அவன் அசராதவன்.

சுமார் ஒரு வருடத்திற்கு முன் நிகழ்ந்து விட்ட அந்த நிகழ்ச்சி....?

அவன் இப்போது இருப்பது போலத்தான் அப்போதும் கலகலப்பாக இருந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



மீன்களைப்பிளந்தெறியும் கைங்கரியத்தில் லாவகமாக அவன் ஈடுபடும் போது அதைப்பார்க்க சிலருக்கு ஆச்சரியமாகக்கூட இருக்கும்.

என்ன வேகம்.... என்ன வேகம்!

இன்றும் அவன் இறங்குதுறையில் நிற்கிறான். ஆனால் அவனோடு கூட வேலைசெய்தவர்கள்...?

விக்டர், டேவிட், அதிரியார்...?

விக்ரரும் டேவிட்டனும் இன்று உயிரோடு இல்லை.

அதிரியார் ...?

"அம்மான்... அம்மான்.! ஐயாவைக் கண்டியளே..."

வேகமாக நடக்கும் சந்தியாக்கிழவன்முன் அலங்க மலங்க ஓடி வந்தாள் மாகிரற்.

"ஏனடி பிள்ளை... எங்கை போனவன்...?"

பதறினான் கிழவன்

"நான் கைவேலையாய் இருந்தன்.. அப்ப அந்தாள் படலையைத் திறந்து கொண்டு வெளியிலை வந்திட்டுது..."

தூணடிலில் சிக்கிய மீனைப்போல் அவள் துடித்தாள்.

"பயப்பிடாதை. உங்கைகிட்டடியிலை... எங்கையேனும் நிப்பான் நான் பாத்து கூட்டி வாறன்..."

சந்தியா திரும்பி நடந்தான்.

அவன் நினைத்தது வீண்போகவில்லை.

கடற்கரையின் கிழக்குப்புற ஒற்றைத் தென்னையில் சாய்ந்து கொண்டு கடலை வெறிக்கப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் அதிரியார்க் கிழவன்.

சந்தியா அவனை அனுதாபத்தோடு பார்த்தான்.

அதிரியாரின் எலும்புகள் துருந்தும் உடலம், மேலும்காய்ந்து கருவாடாகியும் இருப்பது அவனுக்குப்புரிகிறது.

அதிரியாருக்குச் சந்தியாவை விட மூன்று நான்கு வயது குறைவாகத்தான் இருக்கும்.

சந்தியாவுக்கும் அவனுக்கும் உள்ள வித்தியாசம்...?

படிப்பகம்

www.padippakam.com



முன்பு அதிரியாரும் நல்லவாளிப்பான தேகக்கட்டு உடையவனாகத்தான் இருந்தான்.

அதெல்லாம் சிதைந்து உருக்குலைந்தது..! அந்த ஒரு வருடத்திற்கு முன் நடந்த நிகழ்ச்சியினால்தான்...

அந்த நிகழ்ச்சி...?

"என்னடா இப்படியே... நெடுகலும் யோசிச்சு.. கவலைப்பட்டு..! சும்மா மனதை அலட்டாதே. பொடிச்சி உன்னைக்காணாமல் தவிக்கிறாள் எழும்பு"

குரலில் சற்று அனுதாபமும் கண்டிப்பும் தொனிக்க அலையாக அடித்தான் சந்தியா.

உப்பு நீரைக் குடித்துவிட்டதுபோல் முகம் சுருங்கிக்கிடக்கும் அதிரியார் விம்மினான்.

"அண்ணை.... அண்ணை."

அவனுக்குக் குரல் அடைக்கிறது.

"யோசியாதை மேனை. யோசியாதை.. நடந்தது நடந்திட்டுது....இனி என்ன...?'

குரலில் எந்தவித சலனமுமின்றி உரத்த தொனியில் பேசினான் சந்தியாக்கிழவன்.

இரண்டு கிழங்களும் ஒரேதாக்கத்துள் சிக்குண்டவைதான். ஆனால் இரண்டும் இப்போது இருக்கும் நிலை மிகமிக வித்தியாசமானது.

பெரிய கோயில் சவுக்காலையை வெறிக்கப்பார்க்கும் அதிரியார் பலத்து அழுதான்.

பாலைத்தீவு படகுவிபத்தில் அவனது மகன் விக்ரர் இறந்து போகாதிருந்தால் அவன் இப்படி இருப்பானா...?

"அழாதையெடா... தம்பி... அழாதை..."

அதிரியாரைத் தேற்றும் சந்தியாவுக்கும் சற்று உடல் நடுங்குகிறது. ஆனால் அதை அவன் சமாளிக்கிறான்.

ஒரு மகனை இழந்து பயித்தியமாகிவிட்ட அதிரியாருக்கு அந்த விபத்திலே தனது குடும்பத்தையே இழந்து நிற்கும். அசையாது நிற்கும் அந்தத் தனி மரம் ஒற்றை மரம் ஆறுதல் கூறுகிறது.

www.padippakam.com



படகு விபத்தில் அவரது மனைவி, மக்கள், பேரக்குழந்தைகள் அனைத்தையும் இழந்து விட்ட அந்த மனிதன் மற்றவனுக்கு ஆறுதல் கூறுகிறான்.

கல்லூரிக்குச்செல்லும் சிறுவர்களைக்காணும் போதும், கணவன் மனைவியாக சோடியாக நடக்கும் தம்பதிகளைக் காணும் போதும் சந்தியாவுக்கு மக்களின் மருமக்களின் பேரக் குழந்தைகளின் நினைவு வரத்தான் செய்யும். அவன் சமாளித்துக்கொள்வான்.

"உவற்றை நினைவுக்குத்தான் உப்பிடி வந்தது... ஆள்பாடுதொப்பி...!"

சந்தியாவின் பழைய கம்பீரிய நடவடிக்கைகளைப் பார்த்து பொறாமை வலை பின்னிய சிலர் கூறத்தான் செய்தார்கள். ஆனால் கிழவன் இன்றும் பழைய சந்தியாவே!

பெரியகோயில் சவுக்காலையைத் தாண்டி சாராயத் தவறணையை நோக்கி நடக்கும் போது கிழவன் கவலையோடு நடப்பதுண்டு. அதற்குள் உறங்கும் அவனது குடும்பம் சில வேளை அவனை கெதிகலக்கும். ஆனால் கண நேரம்...! தவறணையிலிருந்து திரும்பும்போது சந்தியாக்கிழவன் பழைய மனிதனாகி விடுவான்.

தனிச்சமையல். தனித் தொழில். எல்லாருக்கும் உதவி... தொழில் ஆசான். மதிப்பிற்குரிய சீவன்.

"அம்மான்"

சிறு தோல்விகளைக்கண்டு கலங்கி தற்கொலை செய்பவர்களும், தம் தோல்விகளால் விரக்தியுறுபவர்களுமான இளம் சந்ததியினருக்கு ஒரு உதாரணம் காட்டக்கூடிய மனவலிமை மிக்க, சலிக்காத உழைப்பாளியான நேர்மைத் தொழிலாளவர்க்க வாரிசுதான் சந்தியாக்கிழவன்.

ஆனால் அதிரியார்...?

"ம்... எழும்பு... வீட்டை போ. பொடிச்சி அந்தரப்படுவள்..."

மீண்டும் உலுப்பினான் சந்தியா.

ஒற்றைத் தென்னையில் கையை ஊன்றி எழுந்திருக்கும் அதிரியார் சந்தியாவின் பின்னே தள்ளாடி நடக்கிறான்.

பன்னிரண்டுமணி வெய்யில் நெருப்பைக் கக்கிக்கொண்டு இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



ஓடிவரும் மாகிரற் தகப்பனை கையில் பிடித்து வீட்டுக்குள் கொண்டு செல்கிறாள்.

"அம்மான் சாப்பிட வாருங்கோவன்..."

"வேண்டாம் பிள்ளை. நான் சோறு காய்ச்சின்னான். உதிலை போட்டு வந்துதான் சாப்பிட வேணும்"

மாகிரற்றைப் பார்த்துக்கூறும் சந்தியாக்கிழவன் தவறணையை நோக்கி கம்பீரமாக நடக்கிறான்.

மாகிரற் தொலைவில் தெரியும் ஒற்றைத்தென்னையை வெறிக்கப்பார்க்கிறாள்.

அந்தத்தென்னை...அது...?

எத்தனையோ மழைபுயலுக்கும்அசையாது நிலைத்து நிற்கும் அத்தனிமரம்...?

குருநகரில் எதற்குமே அசையாத இரண்டு தென்னைகள்...!

ஒன்று அது. மற்றது...?

சந்தியாக்கிழவன்!

அவளுக்கு உடல் சிலிர்க்கிறது.

*- இதயம்

1971 -

படிப்பகம்

www.padippakam.com

# கடலோரத்துக் குடிசைகள்

**கோ**விலின் மேற்குப்புறமாக அமைந்திருக்கும் அந்த அறை வீட்டின் முன்புற விறாந்தையில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி கோவிற்காணிக்குள் தலை நிமிர்ந்து நிற்கும் தென்னை மரங்களின் இடைவெளிக்குள்ளால் தெரியும் ரோட்டையும், ஐஸ் கொட்டில்களையும், விரிந்து கிடக்கும் கடலையும் சலனமற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார் வணக்கத்திற்குரிய மரியசேவியர் சுவாமியார்.

சமையல்காரன் ஞானம் ஆசனக் கோவிலுக்கு சற்று முன்னர் தான் போயிருந்தான். இரவு நோவினைக்கு முன் அவன் வந்து விடுவான்.

"பாட்டுப் பழக்கத்திற்காக யேசுதாசன் மாஸ்டரை வரச் சொல்லும்" என்று அவர்தான் ஞானத்தை அனுப்பியிருந்தார்.

முதல் நன்மை பெறும் சிறுவர்களுக்கு செபம் படிப்பிக்க இருப்பதனால் பாட்டுப் பழக்குவதற்கு அவரால் முடியாதிருந்தது.

பங்குனித் திருநாள் ஆரம்பத்தை முன்னிட்டு அவர் முதல் தினம் தான் அந்த மீசாம் கோவிலுக்கு வந்திருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



நீண்ட பதினாறு வருடங்களுக்குப் பிறகு அவரது காலடி அந்த மண்ணில் பதிந்திருக்கிறது. தான் பிறந்து வளர்ந்த அந்த மண்ணையும், உருண்டு புரண்ட அந்தக் கடற்கரையையும், நீந்தி விளையாடிய அந்தக் கடலையும் மெய்மறந்து பார்த்துக் கொண்டிருப்பதில் ஒரு ஆத்ம திருப்தியை அவர் அனுபவித்துக் கொண்டிருந்தார்.

அந்த புனித சவேரியார் கோவிலில் தான் அவருக்கு 'ஞானஸ்நானம்' கொடுக்கப்பட்டது. அவர் முதல் நன்மை பெற்றதும், உறுதி பூசுதல் பெற்றுக் கொண்டதும் அதே கோவிலில்தான். இப்போது ஒரு குருவானவராக அவர் அந்தக் கோவிலுக்கு வந்திருக்கிறார்.

பங்குனி வெய்யிலைக் கிழித்தபடி உப்புக்காற்று கடலிலிருந்து மெல்ல வீசுகிறது. அறை வீட்டின் பக்கத்தில் சடைத்து நிற்கும் வேப்பமரத்தின் இலைகள் சலசலத்து ஓய்கின்றன.

"இந்த அகோர வெய்யிலுக்கு வேப்பமரமும் கடல்க்காத்தும் இல்லாது விட்டால் பெரிய கரைச்சலாய்த் தானிருக்கும். சா... தேவனே. என்ன வெய்யில் என்ன வெய்யில்" அவர் மெதுவாக முனகிக் கொண்டார்.

"இந்த வேப்பமரத்துக்கு ஒரு நூறு வயதாவது இருக்கும்"

முற்றி வெடித்துப் பட்டைகள் விரிந்து கிளைகளை நீட்டியிருக்கும் அந்த மரத்தைப் பாாத்தபடி அவர் தமக்குள் பேசிக்கொண்டார்.

யாரோ பிசின் எடுப்பதற்காக வேப்பமரத்தின் பட்டைகளை வெட்டியிருந்தார்கள். அதன் இடுக்குகளுக்குள்ளால் பூசைப்பாத்திர நிறத்தில் பிசின் கசிந்து.... இறுகி காய்ந்து...அதைப் பார்க்கும் போது சிறுவயதில் அவரும், அவரது தம்பி எட்வேட்டும் அம்மரத்தில் பிசின் எடுக்க கத்தியுடன் வந்து கத்தியினால் பிசினைக் கொத்திக் கொத்தி எடுத்த ஞாபகம் துளிர்விட மெல்லப் புன்முறுவல் பூத்தார் அடிகளார்.

அவரது இளமைக் காலத்தின் பசுமையில் தான் எவ்வளவு ரம்மியமான நினைவுகள்.

"பின்னேரம் எலிசபெத்தின் பிள்ளைக்கு ஞானஸ்நானம் வாற தெண்டு சொன்னவை"

ஞானம் கூறிய வார்த்தைகள் அவருள் நுரைத்து வந்தன.

படிப்பகம்

www.padippakam.com



"நான் தூக்கித் திரிஞ்ச பிள்ளை... இண்டைக்கு ஒரு பிள்ளைக்குத் தாய். திருச்சபைக்குக் கட்டுப்படாமல் விக்கினமுள்ள உறவுக்காரனை கலியாணம் முடிச்சு... இப்ப பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், விரும்பி வந்திருக்கினம்... ம்... இப்ப... ஆர்தான் திருச்சபைக்குக் கட்டுப்படுகினம்..." அவர் நெடுமூச்செறிந்தார்.

காலையில் வீடு தரிசிக்கச் சென்ற இடத்தில் தான் அவரது தம்பி எட்வேட் பற்றிய செய்திகள் கிடைத்தன. சம்மாட்டியார் நீக்கிலாஸ் அதனை அழுத்தமாகவும் கேலியாகவும் கூறினார்.

"அவன் கடவுள் நம்பிக்கை இல்லாதவன்... ஊரிலை கலாதியள். செய்யிறான்... எளிய சாதியளோடை எல்லாம் கூட்டும்... கூட்டமும்..."

சுவாமியாரால் அதனை நம்ப முடியாதிருந்தது. கோவிலின் பழைய சங்கிலித்தாம் தேவசகாயத்தின் மகன்... ஒரு வணக்கத்திற்குரிய பிதாவின் தம்பி கோவிலுக்கு வராதிருப்பதுவும் கடவுள் இல்லை என்பதுவும்... அவருக்கு மிகவும் சங்கடமாக இருந்தது.

"சத்தியமாய்ப் பாருங்கோ... உங்களுக்காகப் பாக்கிறம் இல்லாட்டிப் பொலிசிலை பிடிச்சுக் குடுத்துப் போடுவம்... வோட்டுப் போடாதை எண்ணிறதும்... சங்கம் வைக்கிறதும்... கூலிப் பிரச்சனை கிளப்பிறதும்... நான் ஒரு இந்தியாக்காரப் பொடியனை என்ரை வள்ளத்திலையிருந்து விலத்திப் போட்டன் எண்ணிறதுக்காக தானும் விலத்தியிட்டான்.. இப்ப வேறை ஆக்களும் என்னட்டை வாறாங்களில்லை... அவன் சொல்லுறான்... விலத்தின பொடியனை எடுத்தால் தானாம் வருவன் எண்டு... நீங்கள் அவனுக்கு புத்தி சொல்ல வேணும் சுவாமி"

சம்மாட்டியாரின் பேச்சு மரியசேவியர்சுவாமியாருக்கு எட்வேட்டின்மீது மிகுந்த கோபத்தையும், ஆத்திரத்தையும் கிளறியது.

சிறுவயதில் சுவாமியாரைவிட மிகப் பொறுமைசாலியாக எட்வேட் இருந்தது அவருக்குத் தெரியும். இப்போது....?

"நான் தம்பியைக் கண்டு கதைக்கிறன்..."

சம்மாட்டியாரை சமாதானப்படுத்தினார் சுவாமியார்.

படிப்பகம்

www.padippakam.com



வீடு தரிசிப்புக்கென எவ்வளவு களிகூர்ந்த எண்ணத்துடன் அவர் புறப்பட்டார். யாவும்... வியாகுலவாதையாக மாற... அவர் ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கினார்.

நீண்ட நெடு வருடங்களின் பின் அவர் தம் சொந்த மண்ணில் கால் பதித்திருக்கிறார். அவர் செமினறிக்குப் போய்... குருவாகி... ரோம்... பரிஸ்... என்று வெளிநாடுகள் சென்று... ஒரு நரை கண்ட அரைக்கிழமாக, மூக்குக் கண்ணாடியும்... முகச்சுருக்கத்துடனும்... புனித சவேரியார் கோவில் பங்குக்கு வந்துள்ளார்.

பலருக்கு அவரை சட்டென அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை... "நான் சகாயத்தின்ரை மகன்" என்று அவர் தம்மை அறிமுகப்படுத்தவேண்டியிருந்தது.

பல கிழவர்கள் அவரைச் சந்தோசத்தோடு பார்த்து அளவளாவினார்கள்.

"தோத்திரம் சுவாமி" என்று அவர்கள் கூறும் போது அவர் மிகுந்த சங்கோசப்பட்டார்.

தமது உறவினன் ஒருவன்... தாம் தூக்கி வளர்த்த பிள்ளை தமது கோவிலுக்கு பங்குக்குருவாக வந்திருந்தமை அவர்களுக்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்திருந்தது.

பலர் அவரது தாயையும், தந்தையையும் நினைவு கூர்ந்து கண்கலங்கினார்கள்.

அவர் ரோம் நகரில் இருந்த காலத்தில்தான்... அவருடைய தகப்பனார் இறந்து போன தந்தி கிடைத்தது... அவர் வராமலேயே... அவரது தகப்பனாரின் நல்லடக்கம் முடிந்து போயிற்று.

சொந்த மண்ணில் காலடி வைத்த அன்று மாலையே தமது தகப்பனாரின் கல்லறைக்குச் சென்று அவருக்காக ஜெபித்து விட்டு அவர் வந்திருந்தார்.

தம்பி எட்வேட் பற்றிய நினைவுகள் அவருள் எழுந்தாலும் அவர் அவனைச் சந்திக்கும் வாய்ப்பு இதுவரை கிட்டவில்லை.

அவரது மாமாவின் மகள் சாந்தாவைத்தான் அவன் திருமணம் செய்திருப்பதாக அவர் அங்கு வைத்து அறிந்து கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



பதினாறு வருடத்திற்கு முந்தைய அவர்களது வாழ்க்கை பற்றிய நினைவு அவருள்... கிளர்ந்து வந்தது.

"மாமா... வருத்தக்காரன்... அப்பு தானே... அவர்களுக்கு அடிக்கடி உதவி வந்தவர்... சாந்தா... நல்ல பிள்ளை..."

அவர் ஏக்கப் பெருமூச்சு விட்டார்.

காலையில் எட்வேட்டின் வீட்டினுள் அவர் புகுந்த போது ஒரு பரவசம் அவருக்குள் பொங்கியது. அது அவர்களின் பரம்பரையான வீடு. தேவசகாயம் தமக்காகவும், இரண்டு பிள்ளைகளுக்காகவும் கஸ்டப்பட்டுக் கட்டிய வீடு. படலையில் நின்று தமது வீட்டை கணநேரம் பார்த்த அவருக்கு பெருமூச்சு ஒன்று வெடித்துக் கிளம்பியது.

வீடு மிக மாறித்தான் போய் விட்டது. கடற்கரைப்புறமாக அமைந்திருந்த வேலிகள் யாவும் விழுந்து... நிலம் சுவர் யாவும் பிளந்து, கூரை உக்கி குடத்தடியில் நட்டிருந்த தென்னை... மரமாகி குலைகளுடன்...

அவர் கடப்பைக் கடந்து அங்கியை இழுத்து விட்டபடி முற்றத்திற்குப் போனார். கடதாசியில் நூலைக் கட்டிப் பட்டம் விட்டுக்கொண்டிருந்த ஒரு சிறுவன் அவரைக் கண்டு மிரண்டபடி உள்ளே ஓடினான்.

அழுக்கான தூளியொன்று இறப்பில் மெதுவாக ஆடிக் கொண்டிருந்தது.

"வீட்டில் ஒருத்தரும் இல்லையா?" என்று மெல்லக் குரல் கொடுத்தார் சுவாமியார்.வெளியே குரல் கேட்டதும் பையன் ஓடிவந்து கட்டிப்பிடித்த அவசரமும்... குசினியிலிருந்து விரைவாக ஒரு பெண் வெளியில் வந்தாள். ஓடியல் மாவை நீரில் நனைத்துப் பிழிந்த கையை சேலையில் துடைத்தபடி... "வாங்கோ... சுவாமி..." என்று அவள் அவரை வரவேற்றாள்.

அவர் திண்ணையின் குத்துச் சுவரில் அமர்ந்து கொண்டு அந்தப் பெண்ணைப் பார்த்தார்.

"நீங்கள்... எட்வேட்டின்ரை... மனைவி... சாந்தா தானே..."

அவள் ஓம் என்பதுபோல தலையசைத்தாள்.

சிறுவயதில் அவளைக் கண்டது. இன்று வளர்ந்து இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகி... மெலிந்து...

"உங்கடை அவர் இல்லையோ..."

படிப்பகம்

www.padippakam.com



"அவர் வீசிறதுக்குப் போட்டார். வரக் கொஞ்ச நேரம் செல்லும்..."

"உங்கடை அவர் கோயிலுக்கு வாறதில்லையாம்... நீங்களும் வாறதில்லையோ"?

அவர் மெதுவாகவும் நிதானமாகவும் கேட்டார்.

"அவர் வாறதில்லைத் தான்... ஆனால் என்னைப் போக வேண்டாம் எண்டு மறிக்கிறேல்லை..."

அவர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

பையன் தாயின் கால்களைக் கட்டிப்பிடித்தபடி... சேலைக்குள்ளால் சுவாமியாரை எட்டி எட்டிப் பார்த்துச் சிரித்தபடி நின்றான்.

"மகனுக்கு என்ன பெயர்...?"

அவர் பையனைப் பார்த்தபடி கேட்டார்.

"ஞானஸ்நானப் பெயர் மரியசேவியர். நாங்கள்... ராசா எண்டுதான் கூப்பிடிறனாங்கள்..."

அவருக்கு உடம்பு புல்லரித்தது. பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்தது மாத்திரமல்லாது... சுவாமியாரின் பெயரையே மகனுக்கும் சூட்டியுள்ளார்கள்.

குரலில் நெகிழ்ச்சிபின்ன... "என்னை ஆரெண்டு தெரியுதா?" என்று கேட்டார் சுவாமியார்.

அவள் சுவாமியாரை உற்றுப் பார்த்தாள். எங்கோ பார்த்தது போன்ற சலனம்... யோசனை...

"நான் தான் எட்வேட்டின்ரை... அண்ணன்... மரியசேவியர்..." அவர் நிதானமாகக் கூறினார்.

சாந்தாவுக்கு மகிழ்ச்சியான பரபரப்புத் தோன்றியது. அதோடு ஏதோ ஒரு மனக்குமைச்சலும் அழுகையாகப் பரிணமிக்க... கண்கள் வழியாக நீர் மெல்லத் துளிர்த்து முத்தாகத் தெறித்தது. என்ன பேசுவதென்றே தெரியாமல் அவள் அழுதாள்.

"ஏன் அழுகிறியள்... நான்... சாக இல்லை... நல்லாய்த்தான் இருக்கிறன்... தேவ கிருபையாலை எந்தக் குறையும்... இல்லை..."

அவர் ஆறுதலாகப் பேசினார். தூளிக்குள் கிடந்த குழந்தை மெல்லச் சிணுங்கியது. அதை மெதுவாக ஆட்டியபடி அவள் பரபரப்பாகப் பேசினாள்.

படிப்பகம்

www.padippakam.com



தங்களது இரண்டாவது பெண் குழந்தை பற்றியும், தங்களது வறுமை பற்றியும், மதியச் சாப்பாட்டிற்காக ஒடியல் புட்டு அவிக்கும் தாற்பரியம் பற்றியும், தனது கணவன் படும் கஸ்டங்கள் பற்றியும், அந்தக் கடலோரத்துக் குடிசை வாழ் மக்களின் அவலங்கள் பற்றியும் அவள் பேசினாள்.

சம்மாட்டியார் எட்வேட் பற்றிக் கூறிய எதைப்பற்றியும் சுவாமியார் அவளிடம் கேட்கவில்லை.

பிள்ளைகள் இரண்டையும் சிலுவையிட்டு ஆசீர்வதித்து... வீட்டிற்கு புனித நீர் தெளித்து... அவர் கூறினார்.

"ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார். மத்தியானம் தம்பி வந்ததும்... கோவிலுக்கு வரச் சொல்லுங்கோ... கனக்கக் கதைக்க வேணும்..."

பையனைத் தூக்கி உச்சிமோந்து அவனைக் கீழே இறக்கி விட்டு நகர்ந்தார் சுவாமியார்.

பகல் சரியும் நேரம்...

இதுவரை எட்வேட் அவரைக்காண வரவில்லை.

"வரமாட்டானோ...?" கைக் கடிகாரத்தைப் பார்த்தார் சுவாமியார் இரண்டு... பதினைந்து...

"ஆண்டவரே உங்கள் மக்கள் அனைவரையும்... காப்பாற்றியருளும்..."

மனதுள் முணுமுணுத்தார் சுவாமியார்.

பஸ் ஒன்று ரோட்டில் தரிக்கும் ஓசை...

"ஞானம் வந்திருப்பானோ...? சாய்... இப்பதானே போனவன்..."

பசி எடுப்பது போன்ற பிரமை.

ஐஸ்பழ வானொன்று ஒலி பெருக்கியை அலறவிட்டபடி ரோட்டில் நகர்வது தெரிந்தது.

மேசையில் ஞானம் சமைத்து வைத்த உணவுகள். கையலம்பி மேசையில் குந்தினார்.

இறைச்சி... முட்டை... மரக்கறி... ஊர் அரிசிச் சோறு... கப்பல் வாழைப்பழம்...

அவருக்குத் தொண்டைக்குழி அடைப்பது போன்ற தவிப்பு.

படிப்பகம்

www.padippakam.com



எட்வேட் வீட்டிலும், அந்தக் கடலோரக் குடிசைகள் அனைத்திலும் ஒடியல்புட்டு... மரவள்ளிக்கிழங்கு... கியுவில் நின்று பெற்ற பாண்... பச்சைத் தண்ணி பட்டினி...

கொஞ்சநேரம் அவர் அந்த உணவை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். சாப்பிட மனமேயில்லாதிருந்தது.

சாப்பிடுவதற்கு முன்னர் கூறும் செபத்தை முனகிவிட்டு சாட்டிற்காக கொஞ்சம் வாயில் வைத்து விட்டு கைகளைக் கழுவி எழுந்தார் சுவாமியார்.

அவர் மனம் ஏதேதோ எண்ணங்களை வலைவீசிக் கொண்டிருந்தது. மெதுவாக நடந்து அறைவீட்டின் பின்புறம் போனார் அவர்.

“ஆண்டவரே.... இரக்கமாயிரும்... கிறீஸ்துவே இரக்கமாயிரும்... ஆண்டவரே இரக்கமாயிரும்...”

வேப்பமரக்காற்று சற்று இதமூட்ட, கண் மூடி... நிஸ்டையில்...

வெளியில் யாரோ செருமும் ஓசை அறை வீட்டைக் கடந்து பின் விறாந்தை வரை கேட்டது

எழுந்து முன்புறம் வந்தார் சுவாமியார்.

“நீங்கள் வரச் சொன்னனீங்களாம்... சாந்தா சொல்லிச்சுது... அதுதான் வந்தனான்...”

அவரது தம்பி எட்வேட் எதிரில் நின்று கொண்டிருந்தான்.

பரட்டைத் தலையும், உரமேறிய உடற்கட்டும்... முகத்தில் குத்திடும் மீசையும் தாடியுமாக... அவனைத் தன் மூக்குக் கண்ணாடிக்குள்ளால் பார்த்தார் சுவாமியார்.

“எவ்வளவு வளர்ந்திட்டான். ஒரு இருபத்தெட்டு வயதெண்டாலும் இருக்கும். தம்பி... ஒரு பதினொருமணிபோலை வீட்டுக்கு வந்தனான், குழந்தையளைப் பாத்தன்... நேற்றே நான் இங்கை வந்திட்டன்... ஒருத்தருக்கும் என்னைத் தெரியேல்லை... நீ... கூட நல்லாய் வளர்ந்திட்டாய்... உந்தத் தாடி மீசையை எடுத்தால் என்ன...? தலையெல்லாம்... பரட்டையாய் இருக்கு. நல்லாய் கறுத்துப் போனாய்...?”

அவர் அன்போடு பேசிக் கொண்டே போனார்.

எட்வேட் எதுவுமே பேசவில்லை. அவன் சலனமற்று நின்றான்.

படிப்பகம்

www.padippakam.com



"உந்தக் கதிரையிலை இரு... ஏதேனும் கதையன்... எத்தினை வரிசத்துக்குப் பிறகு சந்திக்கிறம்... உந்த வேம்பைப்பார்... உதிலை நீயும் நானும் முந்திப் பிசினெடுக்கிறது நினைவிருக்கோ..."

எட்வேட் கதிரையில் அமராது நின்றபடியே கதைத்தான். சுவாமியார் சம்மாட்டியாரின் குற்றச்சாட்டைப் பற்றிக் கூறிய போது எட்வேட் சற்றுச் சூடாகவே பதிலிறுத்தான்.

"பெற்றோல் விலை ஏறியிட்டுது, டீசல் விலை ஏறியிட்டுதெண்டு பங்குக் காசிலை பிடிக்கிறவரிட்டை நாங்கள் எப்படி நிக்கிறது...? அந்த மலை நாட்டுப்பொடியனை களவெடுத்ததெண்டு அநியாயமாய் அடிச்சுத் துரத்திப் போட்டு இப்ப நியாயம் சொல்லுறார்... எம்.பி மாருக்கும் பொலிசுக்கும் அவர் வால் பிடிக்கலாம்... எங்களுக்கு உது சரிவராது. நாங்கள் நியாயத்தின்ரை பக்கந்தான் நிப்பம்..."

சுவாமியார் அதிர்ந்துபோய் இருந்தார்.

அமைதியான சிறுவனாக இருந்த தம்பியா இவன்?

பேரலை கிளப்பிய எட்வேட்டின் வாய் சற்று ஓய்ந்தது.

சுவாமியார் சிறிது நேரம் அவனை வெறிக்கப் பார்த்தார்.

"நியாயம் உன்ரை பக்கமெண்டால் நான் என்ன சொல்லுறது? நீக்கிலாஸ் காசுக்காரன்..."

எட்வேட் அலட்சியமாகச் சிரித்தான்.

"நீ... கடவுளில்லை எண்ணிறியாம்... உண்மையா...?

அவர் திடீரெனக் கேட்டார்.

"உண்மைதான்..."

சுவாமிக்கு வாயடைத்தது.

"ஏன்... அப்படிச் சொல்லுறாய்?"

"மதம்... அபின் எண்ணிறதை உணர்ந்ததாலே..."

"அப்ப நீ... நீ... அந்தக் கட்சியைச் சேர்ந்தவனோ...?"

கோபத்தோடு கேட்டார் சுவாமியார்.

"ஓம், நான் அந்தக் கட்சிதான்... அந்தக் கட்சியின்ரை கொள்கையிலை எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கு..."

படிப்பகம்

www.padippakam.com



"நீ... என்ரை தம்பிதானோ... இல்லைக் கேக்கிறன்... நீ... ஒரு சுவாமியாற்றை தம்பிதானோ...?"

ஆவேசமாகக் கேட்ட சுவாமியார் எழுந்து நின்றார்.

"நான் ஒரு சுவாமியாற்றை தம்பிதான்... ஆனால்... சுவாமி இல்லை..."

அவன் கிண்டலாகப் பேசினான்.

"அப்ப பைபிள்ளை இருக்கிறதெல்லம் பிழையெண்டு சொல்லிறியோ...?"

சுவாமியார் சற்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்.

அவன் உடனடியாகப் பதில் பேசவில்லை. சுவரை வெறித்தபடி நின்று பின் நிதானமாகக் கூறினான்.

"நீங்கள் செத்தபிறகு வாற சொர்க்கத்தைப் பற்றிப் பேசிறியள்... நாங்கள் இப்ப இருக்கிற நரகத்தைப் பற்றிப் பேசிறம்... அதை மாத்தப் பாக்கிறம்..."

"உதுகளைப் பேசிறபடியாலைதான் உங்கடை வீட்டிலை வறுமை பஞ்சம்..."

சுவாமியார் இடைமறித்தார். எட்வேட் சிரித்தான்.

"ஒவ்வொரு நாளும் கோயில்லையே பழிகிடக்கிற சந்தியா அண்ணை, பேதுறு அம்மான்... எல்லோருக்கும் இதாலையே வறுமையும் கஸ்டமும்...? மா இல்லை... சீனி இல்லை... பாணுக்கு கியூ.. இது அண்டண்டாடு உழைக்கிற ஆக்களுக்கு மட்டுந்தான். இது... விதி இல்லை... சதி. நீங்களும்... நீங்கள் கும்பிடிற தெய்வமும்... காசுக்காரர் பக்கந்தான்..."

அவன் மூச்சு வாங்கப்பேசினான்.

"உங்கடை பாதை வேறை எங்கடை பாதை வேறை... எங்களைத் தடுக்காதையுங்கோ. தடுத்தாலும் நாங்கள் கேக்கப் போறேல்லை"

அவன் ஆவேசம் தணிந்து குரலைச் சற்றுத் தாழ்த்திக் கொண்டு பேசினான்.

சற்று நேரம் மௌனமாக நின்ற சுவாமியார் சடுதியாகக் கேட்டார்.

"அப்ப... நீ... என்னதான்... சொல்லுறாய்...?"

படிப்பகம்

www.padippakam.com



"பைபிள்ளை ஒரே ஒரு வசனம் மட்டும்தான் எனக்குப் பிடிச்சிருக்குது... அதுதான் எனக்கு விருப்பமும்... அதைச் சொல்லுறன் கேளுங்கோ... மரங்களின் வேர்களினருகே கோடரிகள் போடப்பட்டுள்ளன... நற்கனி கொடாத மரங்கள் அத்தனையும் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்... இது தான் இஞ்சையும் கெதியிலை நடக்கும்... நம்புங்கோ நான் வாறன்..."

எட்வேட் படியிறங்கி நடந்தான்.

சுவாமியார் அவன் போவதைப் பார்த்தபடி விக்கித்து நின்றார். கடலில் அலைகள் பேரோசையோடு மோதுமொலி பெரிதாகக் கேட்டது.

*1975*பரிசுக்கதைகள்- 1994

படிப்பகம்

www.padippakam.com

# மனிதம்

அவன் இறந்து போனான்...

பழங்கோவிலின் உருக்குலைந்து போன கரும் கட்டிடம் போல அவனது உடலும் சிதறி சின்னாபின்னப்பட்டுப் போய்விட்டது.

கடற்கரை இருந்து ஆவேசத்தோடு திசையற்றுச் சீறிவரும் குண்டுகளின் வெறித்தனத்திற்குத் தப்பிக்கொள்வதற்காக புகலிடம் தேடிவந்த தருணத்தில் அவனும் அவனது குடும்பத்தில் சிலரும் இப்படியாக மரணித்துப்போனார்கள்.

சவக்காலையின் தென்புறத்து ஆலமரத்திற்கு இடப்புறம் வெள்ளம் ஓடும் பனை வடலிக்கரைச் செம்மண் தரையில் அவனதும், அவனது மனைவியதும்,அவனது இரண்டு பிள்ளைகளினதும் சடலங்கள் பரவிக்கிடந்தன.

முன்தினம் பகல் அந்த விபரீதம் நடக்கமுன் அவர்கள் அறுவராக புறப்பட்டிருந்தார்கள். அவன், அவனது மனைவி, மூன்று பிள்ளைகள், தொழில் உதவிக்கென தன்னிடம் வைத்திருக்கும் வவுனியாவிலிருந்து கூட்டி வந்த மலையகத்துச் சிறுவன்.

இப்போது மீதம் அந்தசிறுவனும், அக்குடும்பத்தின் ஒரு வாரிசுவும்.

படிப்பகம்

www.padippakam.com



வடக்கிலிருந்து காற்றைக் கிழித்து வந்து சிதறி வெடித்து உயிர்களைப் பறித்துக் கொண்ட அந்த குண்டு வெடித்து ஒரு இரவு கழிந்து நெடு நேரம்.

அந்தக் கணமுதல்... சூரியன் மறைந்து தோன்றிய இந்த நேரம் வரை அந்த இரண்டு சீவன்களும் அதே ஆலமரத்தின் கீழ்...

ஊர் பதுங்கிக் கிடந்தது.

அழுதழுது கண்ணீர் வற்றி... பசி... சோர்வு நித்திரைக் களைப்புடன் அந்த பிஞ்சுவும் அந்த சிறுவனும்...

சிதைவுற்ற உடல்களை வெறித்ததென ஒரு பார்வை.

குண்டுச் சத்தங்கள் ஓய... ஊரில் சில சலசலப்பு... குசுகுசுப்பு...

"முத்துவும்... பெண்டிலும்... செத்துப் போச்சுதுகளாம்"

பயம்... வெருட்சி, துயரம்...

"ஆர் போய்ப் பாக்கிறது? என்னெண்டு பாக்கிறது...?" நெடுநேரம் கழித்து துணிந்த கிழடு ஒன்று புறப்பட்டது.

தனிமை, வெறுமை... பயம்...

ஆலமரத்தின் கீழ் அதே நிலையில் அந்தச் சிறுவனும், பிஞ்சுவும்...

விரைவாக நடந்த அந்த கிழம், பரபரப்போடு அவர்களை நெருங்கி... சிறுவனின் மடியிலிருந்த சிசுவை ஆதரவோடு வாங்கியது.

தலையைச்சரித்து துவளும் குழந்தையின் களைப்பில் கிழவன் சகலதையும் புரிந்து கொள்ள...

"தம்பி... பிள்ளைக்கு பசி... நான் கொண்டு போய் தேத்தண்ணியாவது பருக்கிறன். உமக்கும் பசி... நீரும்... வாரும்..."

சோர்ந்து இருந்த சிறுவனின் குரல் தளதளத்தது. விம்மினான்.

"எனக்கும் பசிக்குது தான்... நானும் உங்களோட வந்திட்டாக்கா ஐயாவையும், அம்மாவையும் காகம் கொத்திப்போடும்... நீங்க தங்கச்சியை கொண்டுபோங்க..."

*ஈழமுரசு 1987

படிப்பகம்

# நெல்லிமரப் பள்ளிக்கூடம்

அந்தப் பள்ளிக்கூடம் கட்டப்பட்ட காலம் பற்றி இவனுக்கு எதுவும் தெரியாது.

இவனது அம்மா அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்ததாகவும், இவனது மாமா, குஞ்சியப்புமார் எல்லாம் அந்த பள்ளிக்கூடத்தில் படித்தாகவும் இவன் அறிந்திருந்தான்.

மருதமரங்கள் சூழப் பெற்ற வயல்வெளித் தாமரைக் குளத்தைத் தாண்டி வரம்புகளால் நடந்து ஒரு மண் ஒழுங்கையால் ஏறி இவன் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போயிருக்கிறான்.

பெரிய தாட்டான் குரங்குகள் வாகைமரங்களில் தாவுகின்ற குழைக்கடைச் சந்தியால் திரும்பி கேணியடியால் செல்லும் பிறிதொரு பாதையாலும் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு இவன் போயிருக்கிறான்.

சுற்றிவர மாமரங்கள் சூழப்பெற்ற கிடுகால் வேயப்பெற்ற இரண்டு மடுவங்கள் கொண்டதுதான் அந்தப் பள்ளிக்கூடம்.

இவனது அப்பு இவனைத் தோளில் உட்காரவைத்து ஒரு சரஸ்வதி பூசைக்கு மறுதினம் அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தது இவனுக்கு ஞாபகம்.கந்தசாமி, செல்வம், சபாரத்தினம், சந்தியப்பிள்ளை, பூமணி,

www.padippakam.com



கோயிலம்மா, ராசலிங்கம், சின்னான் என்கின்ற கதிரவேலு ஆகியோருக்கு ஏடு திறந்ததும் அதே நாள் தான்.

தொய்வுக்கார மீனாட்சியம்மா என்கிற ரீச்சர்தான் இவனுக்கு ஆனா,ஆவன்னா சொல்லிக் கொடுத்த முதல் ரீச்சர்.

பள்ளிக்கூட வாயிலில் நெடுத்து வளர்ந்திருந்த சர்க்கரை நெல்லி மரத்தின் கீழ் வட்டமாக இருந்து 'அறஞ்செய விரும்பு' என்று கத்திக்கத்தி ஆத்திசூடி வரிகளைப் படித்ததும் இவனுக்கு நினைவிருந்தது.

வேறு பாடசாலை மாணவர்கள் 'உமா வாசகம்' படிக்க, இவனும் நெல்லிமரப் பள்ளிக்கூட மாணவர்களும் 'பாலபாடம்', 'பாலபோதினி' படித்ததும் இவனுக்கு ஞாபகத்திலிருக்கிறது.

மிக நோஞ்சானாக இருந்த இவனை நாலாம் வகுப்பு காசிநாதன் 'கடுகர்' என்று செல்லமாகக் கூப்பிட்டதும் இவனுக்கு நினைவிருக்கிறது.

முரடனான காசிநாதன் பின் நாட்களில் 'சண்டியன் காசி' யாகியதும் இவனது நினைவிலில்லாமலில்லை.

நெல்லிமரப் பள்ளிக்கூடத்தில் இவன் படித்த காலத்தில் பெரிய சூரிய கிரகணம் ஒன்று வந்ததும் அவனுக்கு நினைவிருக்கிறது.

பொன்னையா வாத்தியார் கண்ணாடி ஒன்றில் கரும்புகை பிடித்து அதற்குள்ளால் மாணவர்களைச் சூரியன் பார்க்கவைத்ததும் இவன் நினைவில் உண்டு.

பொன்னையா வாத்தியார் கரும்பலகையில் கீறும் பூனைக்குட்டிகளின் படமும் இவனுக்கு ஞாபகமிருக்கிறது.

பொன்னையா வாத்தியாரின் மோட்டார் சைக்கிள், அச் சைக்கிளின் பின்புறமுள்ள மருந்துகள் உள்ள பெட்டி எல்லாம் அவனது ஞாபகத்திலுண்டு. பொன்னையா வாத்தியார் ஒரு முறிவு நெரிவு வைத்தியரும் விஷக்கடி வைத்தியருங்கூட.

நெல்லிமரப்பள்ளிக்கூடத்தின் பொறுப்பாளராக - பொறுப்பாளர்போல் - அவர் இருந்தாலும் தலைமை ஆசிரியர் பொறுப்பு மீனாட்சியம்மா ரீச்சருக்குத்தான்.

இவன் முதலாம் வகுப்பில் படித்த காலத்தில்தான் தாமரைக்குளத்தடியில் நன்னியரின் மகன் செல்லையன் கண்டங்கருவளலைப் பாம்பு கடித்து மரணித்துப்போனான்.

படிப்பகம்

www.padippakam.com



பொன்னையா வாத்தியாரின் விஷக்கடி வைத்தியம் சரிவராமல் நீலம் பரிந்து சின்னானின் அண்ணன் செத்துப்போனான்.

சரஸ்வதி பூசைக்கு பூ பிடுங்குவதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும் இவனும் இவனைச் சேர்ந்தவர்களும், பல நாட்கள் தாமரைக்குளத்தடிக்குப் போகாதிருந்ததும் இவனுக்கு நினைவிலிருந்தது.

சபாரத்தினம் தண்ணீர் அள்ளி வைக்கும் கறள் பிடித்த வாளியும் பால்பேணியும், அது வைக்கப்படும் குச்சுச் சுவரும் இவனுக்கு நினைவிலேயே இருந்தது.

பூமணி தண்ணீரள்ளி வார்க்கக் காசியும், கந்தசாமியும், இவனும் கைமண்டையில் தண்ணீர் குடித்தமையும் ஞாபகத்திலேயே இருந்தது.

இவன் அரிவரி முடித்து வகுப்பேறி முதலாம் வகுப்புக்கு வந்த சிலநாட்களின் பின்பு நெல்லிமரப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு புது வாத்தியாரும், ஆங்கிலம் படிப்பிக்கவென பெரிய தோடு போட்ட ரீச்சரும் வந்திருந்தனர்.

காசிநாதன் புதுவாத்தியாருக்கு 'முட்டுக்காய்த் தலையர்' என்று பட்டப் பெயர் வைத்து கதைத்ததுவும் இவனுக்கு ஞாபகம்.

குண்டான அந்த வாத்தியார் மாணவர்களை பிரம்பால் விளாசியதை இவன் அறிவான்.

பொன்னையா வாத்தியாரின் சாந்த குணத்திற்கு நேர் விரோதம் முட்டுக்காயத் தலைப் பஞ்சாட்சர வாத்தியார்.

நெல்லிமரப்பள்ளிக்கூடத்திற்கு மேற்கேயுள்ள வேதக்கோவில் கிராமத்தின் மாணவர்களில் பலர் இந்தப் பள்ளிக்கூடத்திலேயே படித்தவர்கள்.

ஐந்தாம் வகுப்புவரையேயுள்ள இந்தப் பள்ளிக்கூடத்தில் மிகக் குறைவான மாணவர் உள்ள வகுப்பு ஐந்தாம் வகுப்புத்தான். அதில் ஐந்துபேரே படித்தனர்.

நெல்லிமரப் பள்ளிக்கூடத்தை உருவாக்கியவர் ஒரு சைவப் பெரியார் என்பதை இவன் அப்போது அறிந்திருக்கவில்லை. இவனது அம்மா இராமு வாத்தியார் என்கிற ஒருவரைப்பற்றி அடிக்கடி கூறியிருப்பதும் இவனுக்குத் தெரியும்.

படிப்பகம்

www.padippakam.com



இவனது அப்பு வேதக்கோவில் கிராமத்திற்கு பெண் எடுக்க வந்தமையால் வேதக் கோவில் கிராமத்தவரானவர்.

இவனது அம்மாவும், மாமாவும், குஞ்சியப்புமாரும் நெல்லிமரப் பள்ளிக்கூடத்தில்தான் படித்தார்கள் என இவன் அறிந்திருந்தான். இவனது மாமாவும், சின்னக்குஞ்சியப்புவும் மூன்றாம் வகுப்பில் மூன்று வருடங்கள் படித்து பின், படிப்பை விட்டதுவும் இவனது அம்மா மூலம் இவன் அறிந்தேயிருந்தான்.

இவனது மாமாவுடன் சேர்ந்து ஆரம்பநாட்களில் தாமரைக்குளத்தில் தூண்டில் போட்டு கெழுத்தி மீன் பிடித்தமையும், நுளம்புக்காக மருதங்காய்கள் பொறுக்கியமையும், செல்லையன் செத்த பிறகு தாமரைக்குளத்துப் பாதையை மறந்தமையும்கூட இவனுக்கு நினைவிலிருந்தது.

பள்ளிக்கூடம் விட்ட பிறகு வயல் வெளியில் சின்னான் கதிரவேலுவும், சபாரத்தினமும் மல்யுத்தம் புரியும்போது கந்தசாமியே மத்தியஸ்தம் செய்வதும், கந்தசாமி சின்னானின் பக்கச்சார்பாக நிற்பதுவும், தான் சபாவின் பக்கம் நிற்பதுவும் இவனுக்கு ஞாபகம்.

ஒரு தடவை செல்வம் தன் கல்லுச் சிலேற்றால் இவனை அடித்தபோது சபாதான் இவனுக்காக செல்வத்தின் சிலேற்றை வாங்கி உடைத்தமையும், இதற்காக இவனது அப்பு செல்வத்திற்கு ஒரு புதுச் சிலேற் வாங்கிக் கொடுத்தமையும் இவனுக்கு ஞாபகம்.

சின்னச்சின்னச் சண்டைகளில் சபாவும், காசியும் இவனுக்குத் துணையாக இருந்தமையை இவன் மறந்திடவில்லை. ஆனால் முட்டுக்காய்த் தலையர் இவனை அடித்தபோது சபாவும், காசியும், கந்தசாமியும், செல்வமும் துணைக்கு வரவேமுடியாமல் போனமை இவனுக்கு ஞாபகத்திலிருந்தது.

"வாத்தியாா! இவன் கிணத்துக்கட்டிலை ஏறி துலாக்கயித்தைப் பிடிச்சவன்"

ஜீவகாருண்யம்தான் இந்த விசயத்தைப் பஞ்சாட்சர வாத்தியாருக்குச் சொல்லி வைத்தான்.இரண்டாம் வகுப்பில் படிக்கும் கடுகரென்ற நோஞ்சானுக்கு அன்று விழுந்த அந்த அடிகள். இரண்டு பிரம்புகள் முறிந்து தும்பு தும்பாக...

அடுத்து வந்த நாட்களில் வேதக்கோவில் கிராமத்து மாணவர்கள் எவரும் பள்ளிக்கூடம் போகவில்லை. கிராமமே உறுதியாக இருந்தது. பொன்னையா வாத்தியாரின் மோட்டார்

படிப்பகம்

www.padippakam.com



சைக்கிள் பல தடவைகள் வேதக்கோயில் கிராமத்திற்கு வந்து போனதைப் பலர் பார்த்தார்கள். ஒருதடவை தொய்வுகார மீனாட்சியம்மா ரீச்சரும் அவரது கணவரும் வந்து போனார்கள்.

பஞ்சாட்சர வாத்தியாருக்கு மாற்றம் கிடைத்து கிழக்கு ஊர் போனதாக ஒரு வதந்தியும் சிலகாலம் கிராமத்தில் உலாவியது. யாரும் அதை காதுகொடுத்துக் கேட்கவேயில்லை.

வேதக்கோவில் கிராமத்தில் திடீரெனப் பள்ளிக்கூடம் ஒன்று உருவாகியது.

தென்னங்குற்றிகளில் பலகை அடிக்கப்பட்ட வாங்கு மேசைகளில் மாணவர்கள் படிக்கத் தொடங்கினார்கள்.

காசிநாதன் சண்டியனாக அறியப்பட்டது போலல்லாமல், சின்னான் கதிரவேலுவின் பெயர் வேதக்கோவில் கிராமத்திற்குமப்பால் பெருமையோடு பேசப்படும் வண்ணம் அவன் இறந்து போனான்.

நெல்லிமரப்பள்ளிக்கூடம் சிலகாலம் நெசவுசாலையாகவும்... ஒரு தற்காலிக அச்சுக்கூடமாகவும் இயங்கிப் பின்னர் வெற்று நிலமாகிவிட்டதாக இவன் அறிந்து கொண்டான்.

இவனது நண்பர்கள் சபா, ராசலிங்கம், சந்தியாப்பிள்ளை, காசி, சின்னான்கதிரவேலு ஆகியவர்களைப்போல... இவனது நினைவுகளில் இன்னும் பொன்னையா வாத்தியார், மீனாட்சியம்மா ரீச்சர், பஞ்சாட்சர வாத்தியார் - அதோடு சிதைந்துபோன... நெல்லிமரப்பள்ளிக்கூடமும்.

***கண்ணில் தெரியுதுவானம் - 2001**

***தீண்டத்தகாதவன் - 2007**

படிப்பகம்

www.padippakam.com

# தவனம்

எம்..எல் வசந்தகுமாரியின் கச்சேரி நடந்து கொண்டிருந்த போது பாத்றூம் போய் வந்த சிவகுமார் காதுக்குள் மெல்ல கிசுகிசுத்தான்.

"நிலமை சரியில்லை... போவது நல்லது...."

சன்னமான இருளில், மேடைப் பிரகாசத்தில் எல்.வி. "கொஞ்சம் புறாவே" யை அட்டகாசமாக ஆரம்பித்திருந்தார்.

ரவியின் கையைப் பிடித்து மெல்ல இழுத்துக் கொண்டு இராமகிருஸ்ணமிசன் மண்டபத்தை விட்டு, அவசரமாக மூவரும் வெளியேறினார்கள்.

வெள்ளவத்தையிலிருந்து கல்ஸ்ரொப் வரும் வரையில் எதுவித பதற்றமும் தெரியவில்லை.

புதிய சோனகத் தெரு 79ம் நம்பர் ஒவிசின் மேல்மாடியில் அமைந்த ரூமுக்குள் போய் சேட்டைக் கழற்றும் வரை நெஞ்சில் கனத்த சுமை விலகவேயில்லை.

மூன்றாம் மாடியின் மேல்புற கம்பிக்கிராதியில் நின்று தொலைதூரம் பார்த்தான்.

படிப்பகம்

www.padippakam.com



சுகததாச ஸ்டேடிய விளக்குகளின் பிரகாசமும்... விரைந்து செல்லும் வாகனங்களின் பொட்டு வெளிச்சங்களும்... நகரத்தின் பரபரப்புகளும் சந்தோசத்தைக் கொடுப்பதை இன்று தவிர்த்திருந்தன.

இடியப்பப்பார்சலும்... சொதிப்பைக்கற்றுமாக வந்த செல்வம். பரபரப்போடு இவனைத் தாண்டி தனது அறைக்குள் விரைந்தான். "யாழ்ப்பாணத்தில் 13 ஆமி... அவுட்டாம்... தின்னை வேலியிலாம்..."

எக்கவுண்டன், ஜி.எம். வெள்ளை, பிறேமசிறி, நளிம்... எல்லோரும் வந்துவிட்டார்கள்.

ஜி.எம் மின் கறுப்பு வெள்ளை T.V 9 மணி ஆங்கிலச் செய்தியில் சாதாரண செய்திகளை மட்டும் ஒளிபரப்பிய போது சற்று நிம்மதியாகவே இருந்தது.

இரவு நெடுநேரம் இவன் விழித்திருந்தான். காலையில் பிலிங்வத்தையில் கொன்சோட்டியம் போய்... கொள்வனவு செய்யும் வேலைக்கு இவனை பணித்திருந்தார்கள்.

நாகராணி, லட்சுமி, காமல், பற்றிசியா, மல்காந்தியோடு ஐந்து அரைப் பரல்கள்... ஐஸ்கட்டிகளோடும், கிருஸ்ணனோடும் "சடாச்சரண" எனப் பெயர் குறிப்பிட்ட அவர்களது கம்பனி லொறியை விக்ரர் செலுத்தும் போது கூறினான்.

"தொரை... நெலமை என்னவோ சரியில்லைதான். எம்.டிக்கு... இது வெளங்க மாட்டேங்குதே..."

ஆமர் வீதியால் திரும்பி, சுகததாச ஸ்டேடியப் பின்புறமாக பிலிங்வத்தை பேச்சசிங் சென்ரருக்குள் லொறி நுழையும்போது யாருமே அங்கு வந்திருக்கவில்லை.

காவலாளி அகலமான கதவை விரிய திறந்து விட்டான்.

நேரம் செல்லச்செல்ல பதற்றம் கூடியது.

சுந்தரம் ஜிந்துப்பிட்டியிலிருந்து... குறுக்குப்பாதையால் வேகமாக வந்தான். "ஐயா... நிலமை சரியில்லை... உடனே... வெளிக்கிடுங்க... யாரும் நிக்காதையுங்க..."

தராசில் போடப்பட்டிருந்த C.P யின் 20 கிலோ இறால் மட்டும் நிறுக்கப்பட்டிருந்தது.

இறாலை பரலில் கொட்டி கிருஸ்ணன் லொறியில் தூக்கி எறிந்தான். மல்காந்தியும்... லட்சுமியும் அழுவதற்கு தயார்.

படிப்பகம்

www.padippakam.com



விக்ரர் வேகமாக லொறியை எடுத்தான். ஆமர் வீதி... எரிய ஆரம்பித்திருந்தது. ரோட்டில் ரயர்கள் குவிக்கப்பட்டிருந்தன. பொல்லுகளும் போத்தல்களும்... கல்லுகளும்... பறவைகளாகி சிதற ஆரம்பித்து விட்டன

விக்ரரின் சாதுரியமான சாரத்தியத்தால் லொறி சப்பாத்து வீதிக்குள் நுழைந்து ஜெம்பட்டாவீதியை ஊடறுத்து விவேகானந்தாமேட்டைத் தாண்டி புதிய சோனகத் தெருவுக்குள்ளால் 79ம் நம்பருள் நுழைந்தது.

கலவரம்... நெருப்பு... வீடுகள்... கண்ணாடிகள் நொறுங்கும் ஓசை.

79ம் நம்பரின் கதவுகள் இறுகச்சாத்தப்பட்டன.

ஜீ.எம், வெள்ளை, எக்கவுண்டன், பிரேமசிறி, சிவகுமார், ரவி எல்லோரும் 3ம் மாடி கம்பிக் கிறாதியில்.

எட்டிய தொலைவு புகைமண்டலம்...

கொலன்னாவ... களனி... தொட்லங்கை...

பிரேமசிறி அவசரமாக ஓடி வந்தான்.

எம்.டி யின்ரை கோல்.

ஜி.எம் கீழே இறங்கி பின் மேலே வந்தார்.

“லொறி..... பத்திரமாக வந்து விட்டதா... என்று விசாரித்தார். வெள்ளவத்தைப் பக்கமும்... பதட்டமாம்...”

எவரும் எதுவும் பேசவில்லை. மெஸன்சர் வீதியில் குழப்பம் ஆரம்பமாகியது. வானத்தில் போத்தல்களும், கல்லுகளும் பறக்கத்தொடங்கிவிட்டன.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக தகவல்கள் கசியத் தொடங்கிவிட்டன.

எம்.எல்.வி ஆக்களின் நிலைமை. இவனுக்குள் அந்தச்சிந்தனை இப்போது தலை தூக்கியது. கதவுகள் சாத்தப்பட்டே கிடந்தன. ரவிக்கு தாய் தகப்பனின் நினைவு. அவனுக்கு அழுகை பொத்துக் கொண்டு பீரிட்டது.

சிவகுமாருக்கும் கவலை... பயம். அழுகையை மரியாதைக்காக கட்டுப்பாட்டுக்குள் வைக்க முயற்சித்துக் கொண்டான்.

படிப்பகம்

www.padippakam.com



இவனுக்கு பயமும், கவலையும் அற்றதான ஒரு நிலை. யார் பற்றியோ, யாரைப் பற்றியோ நினைக்க மனதில்லை.

படித்து முடித்து வேலை தேடி விரக்தியுற்று உறவுகளால் வெறுப்பேறி மனம் மரத்துப் போயிருந்தது.

ஒரு தேநீருக்காக கூப்பிடும்வரை காத்திருந்த அந்நியமாக்கப்பட்ட தன்மை. தற்கொலை செய்து மாய்ந்து கொள்ள முனைந்து தோல்வியுற்ற அனுபவச் சூடுகள்...

சகோதர சகோதரிகளின் புறக்கணிப்பு. பெருநாள் கொண்டாட்டங்களில் தூரமாக்கப்பட்ட தவிப்பு.

ஊர்... உறவு... யாவும் வெறுத்துப்போய்... மனதை விட்டு தூக்கியெறிந்த நிலை.

யாழ்ப்பாணத்தின் பிரபல்யமில்லாத ஒரு கிராமத்தைச் சேர்ந்த இவனுக்கு யாழ்ப்பாணம் நாகவிகாரை, "சிற்றி பேக்கரிப்பாணும் பருப்புக்கறியும்" இவையே சிங்களம் பற்றிய பூரண புரிதலாயிருந்தது.

பின்னர் அற்லஸ் ஹோலில் தபால் மூலம் சிங்களம் 1ம் வகுப்புக்குரிய 4 பாடங்கள் படித்ததோடு அந்த அறிவும் முற்றுப் பெற்றது.

சிவப்புச் சிந்தனை வசப்பட்ட காலத்தில் வாட்சன் பெனான்டோ, கிக்கொடதர்மசேன, காந்திஒபயசேகரா... என சிங்களத்தோழர்களின் பேச்சுக்களை மொழிபெயர்ப்பின் மூலம் கேட்டு கைதட்டிய அனுபவம் பின்னர் சித்தித்தது.

கொழும்பு ரயிலில் முதலில் பயணப்பட்டது: தாயாரின் புற்றுநோய் காரணமாக மகரகமைக்கானது. பின் கொழும்பு இறால் ஏற்றுமதி தனியார் நிறுவனத்தில் கஸ்டப்பட்டு வேலை பெற்று... அப்போது பல சிங்கள நண்பர்கள்... ஊழியர்கள்- ஆண்கள், பெண்கள்.

சிங்களம் வாயில் நுழைய மறுத்து, தமிழ் போல பேசும். ஒரு தகுதி வாய்த்த நாட்களிலேயே இந்நிகழ்வு.

செல்வராசா- நிறம் வெள்ளை, நிறம் மட்டுமே வெள்ளை. மனம் கறுப்பு- கண்கள் பச்சை. எம்.டி யின் உறவு சில நேரம் எரிச்சல் ஏற்படும் வார்த்தைகளும்... அதிருப்தியும்...

பிரேமசிறி வெள்ளை மாத்தையாவுக்கு மிக நெருக்கம். தினசரி அரைப்போத்தல் கறுப்பு அவனது கடமை. மேலதிக கட்டாய கடமை.

படிப்பகம்

www.padippakam.com



தொலைபேசி அடிக்கும் ஓசை.

வெள்ளை கீழிருந்து கதைக்கும் குரல்

"என்ன... கண்ணாஸ்பத்திரியடியிலை ஒரு ஆளை வானோடை போட்டுக் கொழுத்தியிட்டாங்களோ..."

"வேறை..."

"வானுக்கு ஏதேனும் டமேச்சே..."

"வெலிக்கடையிலையும் குளப்பமோ... என்ன...? கனபேரைக் கொண்டிட்டாங்களோ..."

வெள்ளை போனை வைத்து விட்டு பரபரப்பாக ஓடி வந்தான்.

பச்சை நிறக் கண்கள் சுருங்கியிருந்தன.

மெஸஞ்சர் வீதி என்கின்ற புதிய சோனகத் தெருக் கடைகள் பெரிதாக எரிய ஆரம்பித்திருந்தன.

மேலே ஹெலிகள் பறப்பது காதில் விழுந்தது. 3ம் மாடி கம்பிக் கிராதியை விட்டு இவர்கள் நகராதிருந்தார்கள்.

பகல் கழிந்தும் பசியே வரவில்லை.

ஊரடங்கு...

பிரேமசிறி தேநீர் போட்டுக் கொண்டு வந்தான். வெள்ளை, லோங்ஸ்கும் சேட்டுமாக அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்க பிரேமசிறி அவனின் காதைக் கடித்தான்.

"சாமான் வாங்க முடியும்... ஆனால் சாப்பாடுதான் இல்லை..."

தொலைபேசியும் செயலற்றுப் போய்... மின்சாரம் இல்லாது... இருள் கவிந்து வந்து 79ம் நம்பரை நிறைத்தது.

"போர் என்றால் போர்... சமாதானம் என்றால் சமாதானம்"

ஜே.ஆரின் பட்டியல்... எரிந்தவையைவிட எரியாதவையை எரி யூட்டத் தொடங்கியது. ஜி.எம், ரவி, சிவகுமார் இவர்கள் மௌனத்தில் தள்ளப்பட்டார்கள்...

முன்னரே முரண்பட்ட முகங்கள் சற்று சிநேகித பாவத்துடன் பேச காலம் உதவிற்று.

என்ன செய்வது?

மெஸஞ்சர் வீதி ரேடேஸ் உடைபடும் ஓசை... தமிழன்கடை,

படிப்பகம்

www.padippakam.com



"நான் தான் ஒடைக்கச் சொன்னேன்... ஒரு இறாத்தல் சுவிப்பிங் மா கேட்டேன் கொடுக்கல்லை... நான் தான் ஒடைக்கச் சொன்னேன்."

சாரத்தை உயர்த்திப் பிடித்தபடி மெஸஞ்சர் வீதி சண்டியன் நிஸ்தார் கத்திக் கொண்டிருந்தான்.

நிஸ்தார் கத்தக் கத்த வெள்ளைக்கு உதறல் எடுத்தது. ஜி.எம் சினத்தோடு கூறினாார்...

"வெள்ளை, அயலோட ஒத்துப்போக வேணும்... எண்டெல்லாம் சொல்லேக்கை சண்டித்தனம் காட்டுவாய். பாத்தியா... நிலமையை..."

பதற்றம்... பதற்றம்... பயம்... பாணில்லை, சோறில்லை, கறியில்லை, தேனீர்மட்டும்...

பயத்தோடும், பசியோடும் பகல் கழிந்து இரவு வந்து மீண்டும் பகல் வந்தது.

பயம் விலகாத... ஒரு அமைதிச் சூழல்...

எப்படியோ மின்சாரம் மீள வந்தது. மீண்டும்... சலசலப்பு.

திரும்பவும் கலவரம் உருக் கொண்டது. 'கொட்டி' கொழும்புக்கு வந்து விட்டதான பரபரப்பு. கம்பிக் கிராதியில்... இவனும் வெள்ளையும், ரவியும்... செல்வமும்.

ரவி கேட்டான்... "கொலன்னாவைப் பக்கம் தெரியிறது புதுப் புகையோ... பழம் புகையோ...?"

கிடைத்த அமைதிச்சூழல் குழம்பி மனங்களில் இருந்த நம்பிக்கைத் துளிர்கள்... கருகிச் சருகாகிப் போய்விட...

என்ன செய்வது?

யாரிடம் போவது?

புதினப் பத்திரிகை நண்பன் போனில் பேசினான்.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் முகாம்... அங்கிருந்து கப்பலில் யாழ்ப்பாணம்... செல்ல முடியும்."

இவனது இரண்டு நண்பர்கள் எரியுண்டதும், வெட்டுப்பட்டதும் செய்தியாகக் கிடைத்தது.

மனம் சூனியப்பட்டது. யாழ் செல்ல விருப்பமற்ற... தவிர்ப்பு.

படிப்பகம்

www.padippakam.com



கடந்தகால அனுபவத்தின் சூட்டுக் காயங்கள் ஆறாமல் தழும்புகளாக இதயத்தில்...

கலவரம் வெடித்து மூன்று நாட்களாகியும் ஒரு வித ஆறுதலுமற்ற... தனிமை உணர்வு.

இறந்தோர் பட்டியல்களில் பட்டியலாக பலரின் பெயர்களில் இவனது பெயரும் இருந்திருக்கலாம்.

பிரேமசிறி... மால்பொறா பைக்கற் ஒன்றை நீட்டினான். புதுப்பழக்கம், புதுப்புகை.

தொண்டை வரண்டு கண்டசாலாவின் குரலில் இவன் பேசத் தொடங்க...

டன்கில்... றிபிள்வைவ்... பிரிஸ்டல்... கோல்ட்லீவ்... பிரேமசிறி எப்படியோ கொண்டு வந்து விடுவான்.

ஜி.எம்மும், எக்கவுண்டனும் கிடைத்த சந்தர்ப்பத்தில் எங்கோ சென்று யாழ் போனதாக யாரோ சொன்னார்கள். அதுபோலவே செல்வம் உட்பட பலர்...

வெள்ளை, ரவி, சிவகுமார், இவன், பிரேமசிறி.

நிலமை வழமைக்குத் திரும்பியதாக வானொலி மட்டும் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தது. ஐலெண்ட் லொஜ் வாசலில் இருந்து வான்கள் - மினிபஸ்கள் யாழ் போவதாகத் தகவல்கள் கிடைத்தன.

கோல்ட் லீவ்... இப்போது மனதுக்கும் உதட்டுக்கும் பழக்கப்பட... தொடர் சீகரெட் ஊதல்.

ஒன்றரை ரூபாய்... ஒரு சிகரெட்.

எம்.எல்.வி ஆட்கள் மிகுந்த சிரமத்துடன் தென்னிந்தியாவுக்கு கட்டுநாயக்காவிலிருந்து பயணப்பட்டதாக ஐந்து நாள் கழிந்து வெளிவரத் தொடங்கியிருந்த ஒரு தமிழ் தினசரி கூறியது.

வெள்ளை குடும்பத்தைக் காண யாழ் புறப்பட ஆயத்தப்பட்ட போது பிரேமசிறி கவலையோடு கறுப்பு அரையுடன் வந்தான்.

எரிந்த மனமும்... கடைகளும் மனிதர்களும் இவன் சலிப்போடு தனித்தான். "ஏய். எம்.டி கேக்கிறார்... நீ... யாழ்ப்பாணம் போகவில்லையா?"

படிப்பகம்

www.padippakam.com



இவனுக்கு மெல்லச் சிரிப்பு வந்தது. Cold Room இல் இருந்த இறாலையும், கணவாயையும் இவர்கள் பசியில் கிடைத்த அரிசியைப் போட்டுக் கஞ்சி காச்சி சாப்பிட்டதை அறிந்து, அவர் கூறிய வார்த்தைகள் இப்போதும் அவனுக்கு நினைவில் வந்தது.

"வெள்ளை. நீங்கள் சாப்பிட்டது... உண்மையில் என்னைச் சாப்பிட்டது மாதிரித்தான்..."

ஜி.எம் யாழிலிருந்து ரெலிபோனில் பேசினார்.

"சுகமாய் இருக்கிறியா? ரவியும்... சிவகுமாரும்... ஊருக்கு வந்து விட்டார்கள். திரும்பி வருவாங்களோ தெரியாது... நீ வரவில்லையா...?"

"இல்லை"

ஒரே வசனத்தில் விடைசொல்லி போனை வைத்தான்.

இறால் கோது எடுபடாமல் கிடந்த கழிவறையிலிருந்து நாற்றம் மூன்றாம் மாடி றூம் வரை எட்டி வந்தது.

பிரேமசிறியும், இவனும் கழிவறையில் மண்ணெண்ணை ஊற்றி நெருப்பு வைத்தார்கள். பிண நாற்றம்.

பிரேமசிறி குமட்டலோடு வாந்தி எடுத்தான்.

இதே போல்... நாறி எரிந்த மனிதர்கள்... எத்தனை பேர்...?

கட்டிலில் சாய்ந்தபடி இவன் யோசித்தான்.

புயலடித்து ஓய்ந்த பத்தாவது நாள்.

வானொலி கூறாமலேயே நகரம் வழமைக்குத் திரும்பத் தொடங்கியிருந்தது.

"தொரைக்கு இரவுச் சாப்பாடு என்ன?" கேட்டபடி பிரேமசிறி அறைக்குள் வந்தான்.

பலபேர் தங்கிய 3ம் மாடி. இவன் மட்டும் தனியே "பத்து இடியப்பம் சொதி... இரண்டு கோல்ட்லீவ். ஒண்ட நீ எடு..."

லோங்சின் பின்பக்கமிருந்து ஒரு பத்து ரூபா நோட்டும்... சில்லறைகளும்... கை மாற...

பிரேமசிறி கீழ் இறங்கினான். இவன் மூன்றாம் மாடி கம்பிக் கிராதிக்கு வந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



சீதளக்காற்று முகத்தில் அறைய எம்.எல்.வி யின் ஐயா சாமி... பாடல்... கீழ்த்தோட்ட வீடொன்றிலிருந்து காற்றோடு இழைந்தது.

உடம்பும்... மனமும்... சில்லிட்டது.

தூர சுகததாச விளையாட்டரங்கு,

ஒளி விளக்குகள். பொட்டுகளாக ஊரும் வாகன வெளிச்சங்கள்.

வாய் சிகரெட்டுக்குத் தவனப்பட்டது.

பிரேமசிறி வரும்வரை இவன் காத்திருந்தான்.

*பெயர் - 2002

படிப்பகம்

www.padippakam.com

# எதிர்வு

அவனது மனைவியின் அப்புச்சி சடுதியாய் இறந்து போனார். ஒரு காலம் தனிக்காட்டு ராஜாவாக பட்டினத்தில் உலாவி வந்த அவர் நொந்துபட்டு ஏக்கத்துடன் இறந்து போனார். பல தடவைகள் நெருக்குதல் வந்த போது பிடிவாதத்துடன் பெயர மறுத்த அவர் ஒருவித நிர்ப்பந்தமும் இல்லாமல் அவனது மனைவியுடனும் அவனுடனும் புறப்பட்டு கால்நடையாக இரவோடு இரவாக வெளியேறி, நிலாவெளி கள்ளம்பத்தை திரியாய் ஊடாக புடவைக்கட்டுக்கு நடந்து வள்ளமேறி முல்லைத்தீவுக்கு ஊடாக கொம்படிவெளி தாண்டி தனது ஆச்சியின் ஊருக்கு வந்திருந்தார்.

இருளின் பெருக்கு வற்றிவரும் அதிகாலைப்பொழுதில் அது நிகழ்ந்தது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அவனை பெரும் குரலெடுத்து அழுதபடி அவனதுமனைவிஉலுப்பி எழுப்பியபோதுதான் அவனுக்கு அது புரிந்தது.

பொறுப்பு என வந்த பின் அவன் எதிர் கொள்ளும் முதல் மரணத்தையும், அதன் சுமையைத் தாங்கிக் கொள்ளும் கடப்பாட்டையும் அவன் இருள் விலகாக் காலையில் எதிர்வு கொண்டான்.

படிப்பகம்

www.padippakam.com



அரச உத்தியோகம் என்னும் வெறும் கௌரவத்தை நிகழ்ந்து விட்ட அனர்த்தங்கள் துச்சமாக்கிவிட்ட சூழல். சடங்குகள் சம்பிரதாயங்கள் எல்லாமே தலைகீழாகப் புரட்டிவிடப்பட்டு வாழ்வு இன்னதுதான் என அடையாளப்படுத்தப்படாது வீம்புடன் கழியும் கணங்கள்.

அவனது அப்புவின் அப்புவின் மரண நிகழ்வுகளை இவன் நினைத்துப்பார்த்தான். யாழ்ப்பாணத்தின் ஒரு குக்கிராமத்தில் சில கத்தோலிக்க குடும்பங்கள். அவர்களுக்கென அமைக்கப்பட்ட ஒரு சிற்றாலயம். வீட்டிலிருந்து எட்டிப்பார்த்தால் தெரியும் ஒரு நாவல் மரங்கள் சூழப்பெற்ற, மாரிகாலத்துத்தவளைகள் கூச்சலிடும் துரவுடன்கூடிய சவக்காலை.

ஆயினும் பளபளக்கும் குஞ்சத்துடன் சிலுவை பொறிக்கப்பட்ட வாசனை வீசும் மஞ்சள் நிற சவப்பெட்டி, அதனுடன் அப்புவின் அப்புவை சுமந்து செல்ல சுற்றிலும் கருநிறத்துறுப்பாளினால் மூடப்பெற்ற சாம்பல் குதிரை பூட்டிய பிரேத வண்டில், இடிமேளம் என அழைக்கப்பட்ட பாண்ட் வாத்தியம்...

அவன் தன்னுள் சிரித்துக்கொண்டான்.

எவ்வளவு ஆடம்பரம்... எவ்வளவு வீம்புத்தனம்.

அப்புவின் அப்பு தனது குடுமியை இறுக முடிந்தபடி மிருதங்கத்திற்கு வார் போடுவதை பக்கத்தில் குந்தியிருந்தபடி அவனும், அவனது அண்ணனும் பார்த்துக்கொண்டிருப்பார்கள். மத்தளத்தை மூட்டி முடிந்ததும் அவர் விரல்கள் மத்தளத்தில் மீட்டும் ஒலியின்லாவகம். அதேபோல் ஆர்மோனியப்பெட்டியில் இழையும் விரல்களின் நளினம். அண்ணாவிச் செல்லப்பு செல்லப்புதான்.

ஒரு காலம் பேரன் அவன் நாட்டுக்கூத்துக்காரனாக வருவான் என அடிக்கடி அப்பப்பு கூறிக்கொண்டிருந்தார். அப்பப்புவின் மரணத்துடன் அவர் விளையாடிய நாட்டுக்கூத்துகளும், ஆர்மோனியப்பெட்டியும், மிருதங்கமும், இல்லாது போனது போலவே... இவன் பற்றிய எதிர்வும் இல்லாது போய்விட்டது.

அப்பப்புவின் மரணவீட்டில் பழையகால எக்ஸ்மொடல் காரொன்றில் இடி மேளம் வந்து இறங்கியது.

படிப்பகம்

www.padippakam.com



காரின் டிக்கியில் இருந்து பாரிய ரம் ஒன்றும், சின்ன ரம் ஒன்றும் இறக்கப்பட்டன. அதனை வாசிக்கும் பொலிஸ் குரோப்கார கட்டை மனிதரும், குரங்குமுஞ்சி சின்ன ரம்மரும் இறங்கினார்கள்.

கையில் எக்காளம் என்னும் டிரொம்பொட்டை பிடித்தபடி வாய் வட்டமாக வெளிறிய நெடுத்த ஒரு மனிதனும், கிளரினட்கார வயோதிபரும் இறங்கினார்கள்.

இடிமேளம் முழங்க ஆரம்பித்தது.

எக்காள மனிதன் இவனிடம் தனது கையில் பச்சைகுத்தி இருந்த சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதரைக்காட்டி இறந்தவர் இந்த மதமா என்று கேட்டு "அன்புருவாய் என் மடியில் ஆசையுடன் வந்துதித்த" என்ற பாடலை வாசிக்கத்துவங்கியதும் இவனுக்கு ஞாபகத்தில் இருந்தது.

இலுப்பைமரச்சந்தியைத் தாண்டி வயல்வெளிக்குமப்பால் இடிமேளம் அதிர்ந்து ஒலிக்கத்தொடங்கி பாடல் முடிய நின்றது.

அந்த இடிமேளக்காரர்களையே இவன் முதல் முதல் முழுக்கால் சட்டையுடனும், சேட்டுடனும் கண்டிருக்கிறான். யாழ்ப்பாணத்தின் பெரிய கோவில் சுற்றாடலில் உள்ள ஒரு பகுதியில் அவர்கள் பல காலம் இருந்து வந்ததை அவன் பின்னர் அறிந்து கொண்டான்.

கண்கள் இரத்தம்போல் சிவந்து போகும் வண்ணம் அவர்களுக்கு அப்பு வீட்டின் கோடிப்புறம் கவனிப்புச் செய்தாலும், முகத்திலோ நடவடிக்கையிலோ எதுவித பதகளிப்பும் காட்டாத மிக நிதானமான வாத்தியக்காரர்கள் அவர்கள்.

சிவப்பு நிற கன்வஸ் சப்பாத்து. கிழிந்து போன காக்கி உடுப்பு... வாசிப்பு மட்டும் நேர்த்தி. மிக மிக நேர்த்தி.

"இயேசு நேசிக்கிறார்.... இயேசுநேசிக்கிறார். நீசனான எனையும் அதிகமாய் இயேசு நேசிக்கிறார்."

ஆட்கள் உள்வரும் நேரம் சடுதியென மேளம் ஒலித்து பிறகு சன்னமாக கீழ்ஸ்தாயியில் சுருங்கும்.

இலுப்பை மரத்திற்குக் கீழ் ஒப்பாரிகளைத் தவிர்த்து இவர்கள் விளையாடிக் கொண்டு இருக்கும் நேரம் குளம்போசை கேட்க, கல்லு நெரிசலில் சக்கரம் வீறுடன் சுழல, பிரேதவண்டில் கிராமத்துள் நுழைந்ததையும், ஆசனத்தட்டில் மெல்லிய ஒரு நரைத்தலை கிழவர் இருந்து வந்ததையும் இவன் அவதானித்தான்.

www.padippakam.com



அப்போது எல்லாம் வண்டிலும் குதிரையும் வேடிக்கைப் பொருளாகவே அவனுக்கும் அவனது நண்பர்களுக்கும் இருந்தது.

விபரம் புரிபட்ட காலத்தில் கிறேஸ்ரோபர் லீயின் டிரெகுலாப் படங்கள் பழைய பிரேத வண்டியையும் குதிரையையும் இவனுக்கு நினைவவூட்டி வந்தன.

அந்தக் காலம் போய் பின்னர் பிரேத வாகனங்களும், அந்திய கால சேவை நிலையங்களும் வந்து இடிமேளம் இல்லாது போய்..... சுதிமரியான் காலம் வந்து, அந்தக் குரங்குமுஞ்சி சிறிய டிரம்மர் சின்னக்கடைத் தெருவில் பிச்சை எடுத்துக்கொண்டு திரிந்தமையை அவன் அறிவான்

அவனுடைய அப்புவின் அப்புவின் தங்கைதான் அவனுடைய மாமனாரின் ஆச்சி. ஆச்சியபின் மரணம் பற்றி அவனுக்குத் தெரியாது. ஆனால் அப்பப்புவின் பிரேதம் தான் வரும் வரை காத்திருக்காமல் அடக்கம் பண்ணப்பட்டு விட்டதாகக் கூறி, வந்த உடனேயே சண்டை போட்டு கஞ்சி தண்ணிக்கு நிற்காமல் ஆச்சி புறப்பட்டும் போனமை இவனுக்குத்தெரியும்.

பின்னர் வந்த மரணங்களில் அந்த இடிமேளத்தையும், பிரேதவண்டியையும் அநேக தடவைகள் இவன் கண்டிருக்கிறான்.

ஆனால் பொன்னம்மானின் மரணம் இவனுக்கு ஒரு புதினமாக இருந்தது. பொன்னம்மானின் மரணத்தைத் தொடர்ந்து அந்தக்கிராமம் சிறைவைக்கப்பட்டமையும் அவனுக்கு விளங்கிக்கொள்ளமுடியாத ஒரு அனுபவமாக இருந்தது.

பல நாட்கள் அவனும், அவனது உறவுக்காரப் பையன்களும் பாடசாலைக்குச் செல்லவில்லை.

கிழக்கின் எல்லையோடு தெற்கு, வடக்கு, மேற்கென காவலில் கட்டுண்டு கிடந்தது கிராமம்.

சனிட்டரி இன்ஸ்பெக்டர்களும், பொலிசும் எல்லையில் விழித்திருந்து இவர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

அவனது அப்புவும், மாமனும் மட்டுமே பொன்னம்மானை அடக்கம்பண்ண சவக்காலைக்குப் போனார்கள்.

உறவுகள் எல்லாம் வேலிகளின் ஓரம் குந்தியிருந்து ஓலமிட... மர்மமான சவஅடக்கமாக அது நிகழ்ந்தது.

படிப்பகம்

www.padippakam.com



சுற்றிலும் சுண்ணாம்பு நிறைக்கப்பட்ட சாக்குகளால் பொதியப்பட்டு பொன்னம்மான் அடக்கம் செய்யப்பட்டதாக அப்பு பின்னர் ஒரு சமயம் கூறியமை அவனுக்கு விளக்கமாகியது.

இடிமேளமோ... கறுப்புப்போர்வை பிரேதவண்டிலோ... பிரிஸ்டம் பெருத்த சாம்பல் குதிரையோ இல்லாது அந்த மரண நிகழ்வு நடந்து முடிந்தது. நாட்களின் நகர்வில் ஊரின் மரணச்சடங்குகள் பலவகைத்தனவாக நிகழ்ந்து முடிந்து போயிருந்தன.

ஊர்கள் சிறையிடப்பட்டு, தெருக்கள்... வீதிகளில் மரங்கள் முளைத்து, வாழ்விடங்கள் காடுகளாகியமையும், பயணங்கள் நடையாகவும் சைக்கிள்களிலுமாக சாத்தியப்பட்டுப்போன காலத்தில் மாமனின் இந்த மரண நிகழ்வு.

அனுங்கும் சிறு விளக்கின் ஒளியில் அயல் மனிதர் சிலரின் வருகையில் அவன் முற்றத்திற்கு வந்தான்.

தொலைவில் சவுக்குமரங்களுக்கும், வெண்மணற் பரப்புக்குமப்பால் கிழக்கு புலரும் அறிகுறி.

"பந்தல் போட வேணும்... ஆக்களுக்கு அறிவிக்க வேணும்... என்ன செய்ய"

அக்கறையோடு விசாரிக்கும் குரல்கள்.

மைத்துனனும், மாமியும் அவன் அருகில் நெருங்கிவர அவன் கேட்டான்..

"சொந்தக்காரர் எல்லாருக்கும் சொல்லவேணுமோ? சொல்லத்தான் வேணும்"

கேள்வியோடு பதிலும் குரலில் தொனித்தது

"மச்சான் ஒண்டும் செய்யத்தேவையில்லை... வாற ஆக்களை கவனிச்சாப்போதும்"

மாமி தயங்க அவன் உறுதியானான்.

"ஒண்டுக்கும் யோசிக்கத்தேவையில்லை... இது என்ரைஊர் இது என்ரை கடமை..." அவன் துரிதமாகினான்.

மனைவியைப் பார்க்க அவனுக்குப் பாவமாக இருந்தது. மகன் பிறந்து 50வது நாள்.

"ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். நாங்கள் அகதிகள் தான். ஆனால் எல்லாம் நடக்கும்..."

படிப்பகம்

www.padippakam.com



"ஏதேனும் காசு தேவைப்படுமோ"...?

பக்கத்துவீட்டு சின்னராசா அவனிடம் மெதுவாகக் கேட்டார். அவரது கையில் ஒரு காசுச் சுருள்.

"இல்லை. தேவைப்பட்டால் நான் கேட்பன். நன்றி..."

அவன் தீர்க்கமாக அவருக்குப் பதிலுரைத்தான்.

மகன் பிறந்த செய்தி கிடைத்து புறப்பட்டு ஒரு வாரம் முந்தியே அவன் துறைமுக நகரத்திலிருந்து வந்திருந்தான். மனைவியையும், மாமன் மாமியையும், மனைவியின் சகோதரியையும், பிள்ளைகளையும், மைத்துனனையும் ஊரில் விட்டு... தனியே திரும்பி... ஒரு எட்டு ஒன்பது மாதங்கள் கழித்து மகன் பிறந்த செய்தி கேட்டு அவன் ஊர் வந்திருந்தான். மழை கொட்டும் ஒரு வெசாக் மாத காலத்தில் குழந்தையை குளிக்கவார்க்கும் பேசின் மற்றும் ஏராளம் சாமான்களுடன் வவுனியா வந்து, கால்நடையாக தாண்டிக்குளம் கடந்து சாந்தசோலையூடாக தலைச் சுமையோடு அவன் நடந்து வந்தான். சூப்பி ஊதும் ஒரு சிவப்பு நிற மோட்டார் சைக்கிள்காரனுடன் பேரம்பேசி பூநகரி... சங்குப்பிட்டியூடாக நள்ளிரவு கடந்து முதற் கோழி கூவும் நேரம் சரசாலையான் காட்டைத் தாண்டி கிழக்கூரின் எல்லைப்புறக்கிராமத்திற்கு அவன் வந்திருந்தான்.

தனது குழந்தையின் முகத்தை, தனது மனைவியை, தனது மாமன் மாமி மைத்துனரைக்காணவேண்டியே ஒரு நெடும் பயணத்தை மிகுந்த சிரமத்தோடு கடந்து அவன் ஊர் வந்தான். அவன் ஊர் வந்த அந்த இரவின் இறுதிக்கணங்களில் அவனை உடுக்கொலியும், காத்தான்கூத்து பாடல்களுமே வரவேற்றன. அடுத்து வரும் நாட்களில் ஒரு கூத்து மேடையேற்றப்படவிருப்பதை அவன் உணர்ந்துகொண்டான்.

மாமனாரின் மரணம் நிகழ்ந்த சமயம் அழுகையின் சன்னஒலி கேட்டு... கூத்தாடும் கூத்துப்பழகும் அயலவர்கள் தான் முதலில் உள் நுழைந்தார்கள். அவர்களே பந்தல் போட்டு உதவ முன்வந்தார்கள். விடிவதற்கு முன்னர் பல விடயங்கள் முடியவேண்டியிருந்தது.

"ஆராவது ஒரு மோட்டார்ச் சைக்கிள்காரனைப்பிடித்து எண்ணை அடிச்சால் விடிய ஆறுமணிக்குமுன்னம் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைக்கு எல்லாம் தகவல் சொல்லி முடிக்கலாம்"

படிப்பகம்

www.padippakam.com



சின்னராசாவே அந்த விசயத்தையும் சொன்னார்.

"ராசன் அல்லது நாதன் வந்தால் அவங்களே அதை செய்வாங்கள்... உங்கடை மகனை ஒருக்கால் சைக்கிள்ளை அனுப்பி நாதனை உடனடியாய் வரச்சொல்லுங்கோ. விடிவிடியெண்ணப் போகவேணும்"

"அதை நான் செய்யிறன்"

பாக்கியராசா விடயத்தைப் பொறுப்பெடுத்தார். கூத்துப்பழகிய பின் நூர்ந்து விட்ட பெற்றோமாக்ஸ் திரும்பக்கொளுத்தப்பட்டுக் கொண்டு வருவது வேலி இடுக்குக்குள்ளால் வெளிச்சத்தின் நகர்வில் தெரிந்தது.

"அங்கை செல்லத்தம்பி பெற்றோல்மாக்சோடை வாறான்... சண்முகத்தார் வீட்டையும் இன்னொரு பெற்றோல்மாக்ஸ் இருக்கு எடுக்கலாம்...மான்ரில் உடைஞ்சு கிடந்தது. இனி விடியத்தான். கடையில வாங்கவேணும். இப்ப இது போதும்..."

கடைசிப்புகையை இழுத்து குறையை வீசிவிட்டு கிணற்றடிப்பக்கம் நடந்த தங்கப்பழம் துலாக் கொடியை தாழ்த்தி தண்ணீரள்ளி முகத்தைக் கழுவினான். பக்கத்து வீட்டிலிருந்து வாங்குகளும் கதிரைகளுமாக ஆசனங்கள் பலது சேர்ந்து விட அவன் மட்டும் பெரும் யோசனையோடு அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தான். விடியலுக்கு நேரம் இருந்தது.

"பெட்டி எடுக்கவேணும் சுவாமியாருக்குச் சொல்லி சவக்காலையில் அடக்க நிலத்துக்கு அனுமதி பெறவேணும்... பிரேதம் எடுத்த பின்னரான கஞ்சிதண்ணிக்கு உணவுக்கு ஏற்பாடு பண்ணவேண்டும்..."

மகனின் பிறப்பிற்கு ஆசையோடு வாங்கிய நகை இருந்தது. அவனின் குறிப்பறிந்து மனைவி நடந்து கொண்டாள்.

தங்கப்பழம்... அவன்... இருவரும் வெளிக்கிட ஆயத்தமாக வெளியில் நாதனின் மோட்டார் சைக்கிள் வரும் ஓசை.

சொல்லவேண்டியவர்களின் பட்டியலை இவன் ஒப்புவித்தான்.

"நல்லூர் ஆனைக்கோட்டை சுழிபுரம் முதலிலை... பிறகுதான மட்டுவில் மீசாலை ஒருத்தரையும் தவறவிடவேண்டாம். எண்ணையை அடி. பிறகு கணக்கைச் சொல்லு..."

படிப்பகம்

www.padippakam.com



தம்பியார் நாதனின் கையில் ஐநூறு ரூபாய்த் தாளொன்றைச் செருகினான்.

"வேண்டாம் பிறகு பார்ப்போம்" என்றபடி இருளுக்குள் நாதனும் மோட்டார் சைக்கிளும் மறைய, பெரிய இரும்புக்கரியல் சைக்கிளுடன் தங்கப்பழத்தை பின்தொடர்ந்து ஒழுங்கைக்குள் இறங்கினான் அவன்.

சோழகம் வேகமாக அடித்து மணல்வீசி அடங்கியது.

"பெட்டி எடுக்க மந்திகைக்குத்தான் போகவேணும்... பெட்டிக்கடைக்காரன்... எந்த நேரமும் திறந்திருப்பான்."

தங்கப்பழம் சாதாரணமாகக் கூறியபடி பெடலை மிதிக்க, அவன் பின்தங்கி மெதுவாகத் தொடர்ந்தான். ரோட்டின் பள்ளங்கள் தங்கப்பழத்திற்கு அத்துப்படி.

"பஸ் ஓட்டம் குறைவு, சைக்கிள்ளைதான் ஆக்கள் வருவினம். வல்லைவெளி... காத்து அதிகம். வெய்யிலும்... சரியான கஸ்டமாய்த்தான் இருக்கும்"

தங்கப்பழமே கதைத்தபடி வந்தான். தும்பளை தாண்டி தொம்மையப்பர் கோயில் வாசலுக்கு அவர்கள் வந்த போது காலை ஆராதனைக்கு ஆயத்தம் நடந்துகொண்டிருந்தது.

கடல் புறம் புள்ளியிடும் சூள்லாம்பு வெளிச்சத்தில் தொலை தூரம்... சூடைவலைக் கட்டுமரங்கள்...

சங்கிலித்தாம் திருந்தாதி சொல்லி முடிக்க, அவன் கோவிலுக்குள் நுழைந்தான்.

"நாங்கள்! அகதியாக கற்கோவளத்திலை வந்து இருக்கிறம்! இரவு என்னுடைய மாமனார் செத்துப்போனார். அடக்கம் செய்யவேணும்.."பூசையும் வைக்க வேணும" இவன் நேரடியாக விசயத்திற்கு வந்தான்.

நிதானமாகக் கேட்ட சங்கிலித்தாம் "குரிசு மணி தரலாம்... எத்தினை மணிக்கு அடக்கம் எண்டால் எல்லா ஆயத்தமும்... நாங்க செய்யிறம். கிடங்கு வெட்ட ஆக்களை அனுப்பினால் போதும்..."

அவன் சற்று யோசித்து

"மூண்டரை மணிக்கு" என்றான்

படிப்பகம்

www.padippakam.com



கற்கோவளத்திலிருந்து மூன்று மைல் நடப்பதற்கு ஒரு மணித்தியாலம் தேவை. இரண்டரைக்கு எடுத்தாலும் மூண்டரைக்கு வந்து விடலாம்.

அவனது கணக்கு சரியாக இருப்பதை தங்கப்பழம் கவனித்துக் கொண்டான்..

"சுவாமியாரை சந்திக்கவேணுமோ"

"இல்லை, நான் எல்லாம் சொல்லுவன். நீங்கள் உங்கடை விசயங்களைப் பாருங்கோ."

கதையை சட்டெனமுடித்த சங்கிலித்தாம் பெற்றோல்மாக்ஸ் வெளிச்சத்தில் செபப்புத்தகத்தை விரித்து செபமாலை தியானத்தைத் தொடங்கினார்.

"இன்னும் விடியேல்லை. மாக்கற்றுக்குச் சாமான் வர ஏழு எட்டு மணியாகும்... இப்ப என்ன செய்யிறது"

"முதல்லை ஒரு பிளேன்ரியும் ஏதாவது புகைத்தலும் எடுப்பம். பிறகு மற்றதைப் பாப்பம்..."

சைக்கிளைத் தள்ளிக்கொண்டு கடற்கரை வீதிக்கு வந்தான் அவன். கடல் சலனமற்றுக்கிடந்தது.

வாடையில் குமுறும் அலையெறியும் பாக்குநீரிணை சோழகத்தில் சோம்பிக்கிடந்தது. இந்த வீதியும் கல்லூரி நண்பர்களது வீடுகளும்... உப்புக் காற்றும் கடற் குளிப்பும் இவனுக்கு ஞாபகம் வந்தது.

மரியாம்பிள்ளை மாஸ்ரர்... பாட்டுக்கார அன்னநாதன்... கையெழுத்துப் பத்திரிகை நடத்திய இருதயதாஸ்.

ரோட்டில் சைக்கிள் மிதிக்க மிதிக்க ஒவ்வொருவரது நினைவும்...

"பொம்பர் வராவிட்டால் எல்லாம் சரியாய் நடக்கும்..." தங்கப்பழமே இந்த விடயத்தை நினைவூட்டினான்.

பழைய தபாற்கந்தோர் சந்தியில் திரும்பி ரேவடிக்குச் செல்லாது தும்பளைரோட்டுக்கு அவர்கள் வந்த போது விடியத்தொடங்கியிருந்தது.

சாந்திகபேயில் ஒவ்வொரு பிளேன்ரியும், பிரிஸ்டலும் வாங்கி ஊதியபடி பஸ்டிப்போவின் எதிரில் முருகானந்தம் டிஸ்பென்சறி வாசலில் அவன் குந்தினான்.

படிப்பகம்

www.padippakam.com



சந்தைக்குள் வெற்றிலைக் கடைக்காரரும் பலகாரக்காரர்களும் மண்ணெண்ணைக் கடைகளும் பரபரப்பாகிக்கொண்டிருக்க ஒருவிதமான காலைப் பரபரப்பு. சங்குப்பிட்டி மோட்டார் சைக்கிள்களும், மினிவான்களும், தட்டிவான்களும், மண்ணெண்ணைப் புகையைக் கக்கியபடி புறப்பட ஆயத்தப்பட.... அவன் காத்திருந்தான்.

காய்கறி... தேங்காய்... வெற்றிலைபாக்கு... தூள்... உப்பு.... விறகு... பீடி... உர பாக் ஒன்றில் எல்லாம் கட்டி எடுத்து தங்கப்பழத்திடம் கொடுத்தபின்னர் அவன் கூறினான்,

"வேட்டி சால்வை பெட்டி நானெடுத்துக் கொண்டுவாறன்... நீர் இறைச்சி அல்லது மீனை வாங்கிக்கொண்டு உடனே வீட்டை போம். சீனி... நிவாரணம் எடுத்தது இருக்கு. மாப்பெட்டியும் இருக்கு. தேயிலை வாங்கி உரப்பைக்குள்ள வைச்சிருக்கிறன்... பாண் கொஞ்சம் வாங்கினால் புள்ளைகுட்டியைச் சமாளிக்கலாம். நீர் உடனே போம், நான் பிறகால வாறன்..."

தங்கப்பழத்தை அனுப்பியபின் இவன் மந்திகையை நோக்கி சைக்கிளை மிதித்தான். மகனுக்காக வாங்கிய நகைகள் விற்றபணத்தின் மீதி கனமற்ற அவனது இதயம் போல் இலேசாக...

"பெட்டி... நல்ல விலையாய் இருக்கும்" அவன் யோசித்தான், "அப்புவுக்கு எடுத்த பெட்டியைப்போல இல்லாமல் நல்லபெட்டியாய் எடுக்க வேணும்"

அவனது அப்பு இறந்த போது அவன் கொழும்பில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலையாக இருந்தான். எண்பத்துமூன்று கலவரங்கள் முடிந்து ஒருவித பதற்றம் நீங்கிய கொழும்பின் அதிகாலை.

ரேஸ்பேப்பர்காரனும், தெம்பிலி வண்டிலும் சத்தம்மெழுப்பும் ஒரு அதிகாலைநேரம் அவனது அண்ணன் தொலைபேசியில் பேசினான்.

"அப்புவுக்கு கொஞ்சம் கடுமை... உன்னைப் பார்க்கவேணுமாம் உடனைவா..."

அண்ணனின் குரல் தளதளப்பில் இவன் கேட்டான், "எப்ப எடுக்கிறதாய் உத்தேசம்...? "

தமயன் பெரும் குரலெடுத்து தொலைபேசியில் அழுதான்.

படிப்பகம்

www.padippakam.com



"ஏஜென்சிக்காரன் ஏமாத்தினதாலை ஒரு சதம் கூட இப்ப என்னட்டை இல்லை. நீ... காசோடை உடனே வா. உன்னைத்தான் நம்பியிருக்கிறன்..."

பக்கத்து அறையில் இருந்த கணக்காளரும் மனேஜரும் அருகில் வர இவன் குலுங்கி அழுதான்.

"நான் உடனை போகவேணும். எனக்கு காசு தேவை..."

"எவ்வளவு வேணும்"

"ஒரு மூவாயிரம் எண்டாலும் வேணும்"

"இல்லை... ஒரு... ஐயாயிரம் தாறம். உடனை வெளிக்கிடும்... லீவு போடும்... இப்ப யாழ்ப்பாணத்திற்கு பஸ் இருக்காது. அநுராதபுரம் போய் அங்கையிருந்து வவுனியாவுக்கு போய்த்தான் யாழ்ப்பாணம் போகவேணும்... உடனை வெளிக்கிடும்"

மால்போரோ பேக் ஒன்றில் ஒரு லோங்சையும் சேட்டையும் சாரத்தையும் திணித்தபடி அரசமரச்சந்திக்கு அவன் வர அநுராதபுர மினி பஸ் ஒன்று புறப்பட்டது.

அப்பர் பற்றிய நினைவுகள் மட்டும் மெல்லியதாய்...

அப்பர் குடிகாரனாக இருந்தாலும் அவர்களை ஒருகாலமும் கஸ்டப்படவிடவில்லை.

அம்மாவின் இறப்புக்குப்பிறகே அந்த மனிதனின் அசைவியக்கம் தடைப்பட்டது. சலரோகம் அதனைக்கவனிக்காத தன்மை கோமாவில் வீழ்த்தி இரண்டொருநாளில் மரணம்.

புறப்பட்ட மறுநாள் அதிகாலையில் அவன் ஊர் வந்த போது அவனை எதிர்கொண்டு அழும் உறவுகளோடு அவனால் அழமுடியாதிருந்தது.

மனம் ஒரு நாள் பூராவும் இறுகி மரத்துப்போயிருந்தது.

மிகமிகச் சாதாரணமான ஒரு சப்புப் பலகைப் பெட்டியில் அந்த பெருத்த சரீரம் நீட்டிக்கிடந்ததைப் பார்த்து அவனுக்கு ஒருவிதமான கூச்சம் கூட ஏற்பட்டது.

"அப்புவுக்கு ஒரு நல்லபெட்டிகூட எடுக்கவில்லை" அவனுக்கு அண்ணனில் ஆத்திரம் வந்தாலும், மூளியாக நிற்கும் அண்ணி பிள்ளைகளைப் பார்த்து ஆத்திரத்தை அடக்கிக்கொண்டான்.

படிப்பகம்

www.padippakam.com



"தம்பி என்ன செய்ய காசு கொண்டு வந்தனிதானே..."

பரிதாபமாக பார்க்கும் அண்ணனின் கையில் மூவாயிரம் ரூபாவை அவன் திணித்தான்.

அதன் பிறகே எல்லாம் நடந்து முடிந்தது. கடற்கரை வீதி பாவனையற்று கோவிலே புலம்பெயர்ந்து வந்துவிட்ட பழங்கோவிலடிச் சவுக்காலை போகும் வரை அவன் அழவேயில்லை. கிடங்குக்குள் அப்புவின் உடல் பெட்டியுடன் கீழ் இறங்கும்போது உள்மனப்பாரம் உடைந்து அவன் கதறினான்.

"ஐயோ என்ரை அப்பு..."

அவனது அழுகை அடங்க நெடு நேரம் எடுத்தது. அப்புவிற்கு நல்லபெட்டி ஒன்றை எடுக்கமுடியாத சோகமும் அதனோடு சேர அவன் நெடு நேரம் அழுதான். மாமனுக்கு ஒரு நல்ல பெட்டி எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இதனாலேயே அவனுக்குள் எழுந்தது.

"நல்ல பெட்டி... நாலு... அல்லது ஐயாயிரம்... அதற்கான பணம்?" அவன் எதிர்பார்த்தபடி நல்லபெட்டி ஏதும் விலைக்கேற்றபடி கிடைக்கவில்லை.

ஒரு பச்சை நிறச் சாதாரண பெட்டி...

இரும்புக்கரியல் சைக்கிளில் எடுத்த வேட்டி சால்வையை பெட்டியுள் மூடி பக்கவாட்டில் அதனை வைத்துக் கட்டினான்.ஏதோ ஒரு விழாவுக்காக நாட்டப்பட்ட வீதி மருங்கு கம்பங்களுக்குள்ளால் பெட்டியுடன் ஓடுவது சிரமமாக இருந்தது. பல இடங்களில் அவன் சைக்கிளில் இருந்து இறங்கி உருட்டியபடி நடந்தான்.

ஆனைவிழுந்தான் கிளைப்பனைச் சந்தி வரும்வரை இருந்த சிரமம் பின்னர் நீங்கியது. சோழகம் தள்ளிச் செல்ல மிக நிதானமாக அவன்பெட்டியுடன் சைக்கிள் ஓடினான்.

வெய்யில் ஏறி வந்தது. பசி வேறு. களைப்போடு வேலியின் சரிவுக்கூடாக அவன் வீட்டிற்குள் நுழைந்தான்.

எல்லாம் நல்லபடியாக செய்யப்பட்டிருந்தது. முன்புறம் சிறிய பந்தல்... அடுக்கப்பட்ட கதிரைகள் கூத்துப்பழகும் பெடியள் பாக்கியராசா, தங்கப்பழம்... சின்னராசா எல்லோரும் அவனை கனிவோடு வரவேற்க,

படிப்பகம்

www.padippakam.com



"ராசனையும் இரண்டுபேரையும் கிடங்கு வெட்ட அனுப்பியிருக்கு, எல்லாம் செய்திருக்கிறம். சமையல் பக்கத்து வீட்டிலை ஒழுங்கு செய்தாச்சு. வேறு என்ன?"

"ஆக்கள் வரத்தொடங்கியிட்டினம். நாதன் எல்லா இடமும் சொல்லியாச்சு எண்டு சொன்னான். இப்பத்தான் போறான்.. பொண்சாதிக்காரியை ஏத்திக்கொண்டு வாறதாம்..." பாக்கியராசா கிட்ட வந்து அவனிடம் சொல்ல,

"குளிப்பாட்டி வேட்டி சால்வை உடுத்து பெட்டிக்குள்ள வைக்கிறவேலையைப்பாருங்கோ. குரிசு மணி இப்ப வந்திடும். நாதன் வரயிக்கை எடுத்து வாறனெண்டு சொன்னவர்..."

தங்கப்பழம் அவசரப்பட பாக்கியராசா உதவிக்கு இரண்டுபேரை கூப்பிட்டபடி ஆயத்தமாகினார்.

அவனுக்கு பசியோடு தேநீர் தாகமும் ஏற்பட்டது.

மச்சான் பந்தலின் கீழ் அசையாத மனிதனாய்... சலனமற்று...

மனைவியின் அன்ரிஅம்மா அவனை பின்புறம் அழைத்துச் சென்று சொன்னா.

"காலமையும் ஒண்டும் குடிக்காமல் போனீங்களாம். பாண்கிடக்கு... கொஞ்சம் தேத்தண்ணி குடியுங்கோ அவள் பச்சைப் பிள்ளை வயித்துக்காரி குத்தி முறியிறாள்.. நீங்கள் களைச்சுப்போனீங்கள்... கொஞ்சமாய் சாப்பிடுங்கோ"

அவன் பாணில் ஒரு கடிகடித்து தேநீரைப்பருகி சிகரட் ஒன்றை மூட்டினான்.

வெயில் ஏறிவர வானத்தில் பொம்பர் இரையும் ஓசை. மந்திகைப்புறம் கிபீர் தாழப் பறந்து குத்தி மேலெழுந்தது.

குண்டோசை ஒரு கணம் நிலத்தை உலுப்பி ஓய, பிறிதொரு கிபீர் மாறிமாறி குண்டுகள் வானிலிருந்து கீழிறங்க மரண வீடு கலங்கியது. பீதி ஊரை வாட்டி ஓய பங்கரைதேடும் மனங்கள். சைக்கிளில் தொலை தூரம் இருந்து வந்தவர்கள் ஏக்கத்துடன் நிற்க கிபீரின் இரைச்சல் மெது மெதுவாய் அடங்கியது.

"எத்தனை மணிக்கு சவ அடக்கம்?" பெரும் கேள்வி பூதாகரமாய் அவனைச் சூழ்ந்தது.

படிப்பகம்

www.padippakam.com



"தொம்மையப்பர் கோவில் பக்கமும் குண்டு ஒண்டு விழுந்ததாம்" யாரோ சொன்னார்கள்.

"கிடங்கு வெட்டப் போன ராசனும் மற்றவர்களும்..?" அவன் பதறினான். ஒழுங்கையின் எல்லை வரை அவன் நடந்தான்.

தூர சைக்கிளில் ராசனும் இன்னும் இருவரும்.

இவனுக்கு நிம்மதிப் பெருமூச்சு.

"அண்ணன் கிடங்கு வெட்டியாச்சு... ஆனால் போஸ்ரோபிஸ் சந்தியிலை ஒரு குண்டு விழுந்திட்டுது. என்ன நடந்ததோ தெரியாது... நாங்கள் கடக்கரை ரோட்டாலை வாறம்".

பரபரப்போடு சைக்கிளை விட்டு குதித்தான் ராசன்.

பொம்பரின் உறுமல் நெடுநேரம் தொலைவில் ...

எங்கும் ஒரே ஏக்கம். பதற்றம். ஒப்பாரியற்று பீரிட்டெழும் உறவுகளின் அழுகுரல். என்ன செய்வது? வெய்யில் ஏறிவர கொஞ்சம் கொஞ்சமாக சைக்கிளிலும் நடையிலுமாக ஆட்கள் வரத்தொடங்கினார்கள்...

"மச்சான் என்ன செய்யிறது... எப்படியும் இரண்டு மணிக்கு எடுக்கவேணும் சரிதானே" அவன் மைத்துனனை அணுகி விசயத்தைக் கூறினான்.

"அப்படியெண்டால் இப்பவே செபஞ் சொல்லத்துவங்குவம்"

அன்ரிஅம்மா அவசரமா ஓடி வந்து அவனது மைத்துனனிடம் கூறினா.

"போன பொம்பர்... கொஞ்ச நேரம் கழிச்சு திரும்பி வரும்... உது அடிக்கடி நடக்கிறது தான்..."

தங்கப்பழம் நிதானமாக கூறினாலும் அவனது முகத்திலும் கிலி இருந்தது.

எரியும் குத்துவிளக்கு சோழகத்தில் அடிக்கடி நூர்ந்து விட, அவனது மனைவி எண்ணெய் வார்த்தபடி....

பெண்கள் நெருங்கி இருந்து செபம் சொல்லத் தொடங்கியதும் அழுகை அமுங்கி அடங்கியது. பொழுது வேப்பமர உச்சியில்...

காரணிக்கம் முடிந்து பிரார்த்தனையை அன்ரி அம்மா சொல்லத்தொடங்க பொம்பரின் ஓசை...

படிப்பகம்

www.padippakam.com



இப்போது. அது கடலின் அந்தியிலிருந்து கேட்கத் தொடங்கியது.

நிச்சயம் குத்தினால் கற்கோவளம் ஐஸ் பக்டரி பக்கம் தான்.

பிரார்த்தனைக் குரல்கள் நடுங்கத்தொடங்க...

"உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா."

"எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்..."

வந்த சனம் கலையத்தொடங்க... பொம்பர் தாழ்ந்து இறங்கி... எச்சமிட்டு மேலேறியது.

மணல்க் காடு எகிறிக்கலங்கியது. என்ன செய்யலாம்? எங்கு போவது...? யாரும் யாரிடமும் பேசவில்லை. சைக்கிள்கள் மெல்ல மெல்ல குறையத்தொடங்க...

"அப்புச்சி... அப்புச்சி... ஐயோ என்ரை அப்புச்சி..." அவனது மனைவியும், மச்சாளும் தொண்டை கமற அழத் தொடங்கினார்கள்.

மரணவீட்டில் ஒரு சிலர் மட்டுமே மீதமாய்...

அவன்... அவன்தம்பி ராசன், நாதன், தங்கப்பழம், பாக்கியராசா, கூத்துப்பழகிய கிராமத்துப்பையன்கள், சின்னராசா, மைத்துனன், அன்ரிஅம்மா, மாமி... பிள்ளைகள்.

"என்ன செய்யலாம்... பருத்தித்துறைக்கு எப்படிப் போறது?"

பொம்பரின் ஓசை, வானில்... வட்டம் வட்டமாக சிலநேரம்... பதிவதும், உயர்வதுமாக.

கிட்டத்தட்ட விட்டுவிட்டு பத்துக்குமேற்பட்ட வெடி அதிர்வு... பனைக்கூடலுக்குள் சூரியன் சரிந்து விழத்தொடங்கியது. ஏக்கமுடன் முகங்களை முகங்களைப்பார்க்கும் நிலை.

"அண்ணை இனிப்பாக்க ஏலாது.... பருத்தித்துறைக்கும்

போகேலாது.... அங்கை சவுக்கந்தோப்புக்கு அங்காலை... அடக்கத்தை முடிப்பம்"

அவனின் தம்பி ராசன் அவனைப்பார்த்துக் கூறினான்

ஒரு ஆசாரமான கத்தோலிக்க மனிதன். ஞாயிறு பூசையைத் தவறவிடாதவரின் அடக்கம் முறைப்படி நடக்காமல்....

படிப்பகம்

www.padippakam.com



அவனது மனைவி மைத்துனர் மாமியிடம் இக்கேள்வி மனதில் எழுந்தாலும் சந்தர்ப்பம்.... சூழ்நிலை... நிர்ப்பந்தம்...

பெட்டியை மூடி.... தோளில் தூக்கினான் நாதன். நாலுபேர் தோள்கொடுக்க.... மண்வெட்டியோடு முன் நடந்த ராசனை பின் தொடந்தான் அவன்.

"அப்புச்சி"... "அப்புச்சி" அழுகுரல் பின் தங்கியது.

பொம்பரின் இரைச்சலை மீறி சவுக்கு மரம் தாண்டி அழுகுரல் கேட்டபடி இருக்க....

முறையான செபத்துடன் கிடங்குக்குள் அவனின் மாமனாரின் பிரேதம் பச்சைப்பெட்டியுடன் இறங்கியது. ராசன் சவுக்கு மரக்கம்புகளால் சிலுவை ஒன்றைக்கட்டி தலைமாட்டில் நாட்டிக்கொண்டிருந்த போது அவனின் மைத்துனன் பெரிதாகக் கதறினான்.

"அப்புச்சி எங்களை விட்டிட்டுப் போட்டியே..."

மணலில் கால் புதைய சவுக்குமரக்காட்டைத் தாண்டி அவனும் மற்றவர்களும் வீடு திரும்பிய அந்த நேரத்திலும் கிபீர் விமானங்கள் குண்டு வீசும் ஒலி தொடர்ந்து கேட்டபடியேதான் இருந்தது.

ஒருகாலம் துறைமுகநகரத்தில் மரணவீடுகளுக்கும், வைபவங்களுக்கும் யாழ்ப்பாணத்தின் இடிமேளக்காரர்களைப் போல எக்காளம் வாசிக்கும் ஒருவராக இருந்த அவனது மாமனாரின் மரணம் மிகச்சாதாரணமாக நிகழ்ந்து முடிந்து போயிற்று.

யாழ்ப்பாணத்தின் அவல மரண நிகழ்வுகளில் ஆயிரத்தில் ஒன்றாக இது.

நாட்கள் நகர.... துறைமுக நகரம் திரும்பி மகன் வளர்ந்து பள்ளிக்கூடம் போகும் ஒரு நாளில் அவன் காதில் செய்தி ஒன்று வீழ்ந்தது.

"அவன் கொம்யூனிஸ்ட்காரன். அது தான் கோயில்ச்சடங்கு செய்யாமல் மாமனை சவுக்கு மரக்காட்டுக்குள்ளை தாட்டுப்போட்டான்."

அப்புவின் நாட்டுக்கூத்தில் கட்டியம் கூறுவது போல.... இதுவும் ஒரு கட்டியமாக... அவன் தனக்குள் சிரித்துக்கொண்டான்

வாய்விட்டுச் சிரித்துக் கொண்டான்.

படிப்பகம்

www.padippakam.com



எத்தனையோ இடிகள் இழப்புக்கள் அனர்த்தங்கள் எல்லாமே பொறுமையுடன் கழிந்து விட, அவனின் மகனுக்குத் தற்போது வயது பன்னிரண்டு. ஏழாம் ஆண்டு.

பாடசாலை வாத்தியக்குழுவில் அவனது மகன் ஒரு எக்காள வாத்தியக்காரன்.

அவனது அப்புவின் அப்புவின் மரண நிகழ்வில் எக்காளம் வாசித்த வாய் வெளிறிய நெடுத்த மனிதனைப்போலவும்...

சவுக்குமரத்தோப்புகளுக்கப்பால் சாதாரணமாக அடக்கம் பண்ணப்பட்ட அவனது மாமனாரான பேரனைப் போலவும்...

*சுட்டும் விழி 2003.

படிப்பகம்

www.padippakam.com

# விருட்சம்

வீட்டின் முன் சடைத்து, பரந்து கிளைவிட்டிருந்த மாமரம் பிஞ்சும் காயுமாக நின்ற அந்த நாட்களில் நவுக்கிரி மா சாக்காய்ச்சல் காய்த்ததாக அம்மம்மாவின் மரணத்திற்கு வந்தவர்கள் பேசிக் கொண்டதை அம்மா அடிக்கடி நினைவு கூர்ந்திருக்கிறார்.

வேதக்கோவில் சூழலை நிறைத்திருந்த நாவல் மரங்களும், தாமரைக்குளத்தடி மருதமரங்களும், நெல்லிமரம் சாட்சியாக நினைவில் நிற்கும் பள்ளிக்கூடமும் இவனுக்கு ஞாபகம்.

முனியப்பர் கோவிலில் விழுதோடு பரவி நிற்கும் ஆலமரம். பணிக்கர் கோவிலடி வாகை மரங்கள், நாச்சிமார் கோவிலடி அரசமரம், இவை யாவும் இவனுக்கு காலாகாலம் இளைப்பாற்றிக் கொடுத்த விருட்சங்கள்.

வீட்டின் மேற்குப்புற ஒழுங்கையும், வெள்ளவாய்க்கால் சந்தியும் இணையும் மூலையில் ஒரு பெரிய இலுப்பைமரம் நின்றதுவும் அந்த மரத்தின் கீழ் ஏதோ ஒரு குடும்பப் பகைமை காரணமாக கடைக்காரத் துரைச்சாமி உலக்கையால் பிடரியில் அடித்து கொல்லப்பட்டுக் கிடந்தமையும் இவனுக்கு மெல்லிய சலனமாக அடிக்கடி நினைவில் தென்படும்.

படிப்பகம்

www.padippakam.com



கேரளத்து மனிதர் ஒருவர் இவனது வளரிளம் பருவத்து பாடசாலை ஆசிரியராக இருந்திருக்கிறார். பல கணித பாடநூல்களும் இரசாயன நூல்களும் எழுதிய அவ்வாசிரியர் இவனுக்கும் இவனது சகமாணவர்களுக்கும் விஞ்ஞானம் கற்பிக்க பாடசாலைக்கு அருகில் இருந்த வேப்பமரத்தின் கீழ்...... "ஞான் இப்பொழுது கேள்வி கேட்கும். நீங்கள் சரியாக சொல்லாமல் விட்டால் ஞான் உங்களுக்கு அடிக்கும்" என்று கூறிக்கூறி விஞ்ஞான பாடத்தை ஊட்டியமை பற்றியும் இவன் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.

மரங்களின் தொடர்பு இவனுக்கு எப்போதும் இருந்திருக்கிறது. மரங்களைப் பார்க்கும்போது இவனுக்கு ஏற்படும் ஏதோ ஒருவகை பரவசம் தனக்கு மட்டும்தானா, அல்லது எல்லோருக்கும் இப்படித்தானா என்று இவன் யோசிப்பான்.

விருட்சங்களின் பெயர்களே ஊர்களுக்கும், இடங்களுக்குமாக நுட்பமாக நிலைத்துவிட்டமை பற்றியெல்லாம் இவன் சிந்திப்பதுண்டு. அரசடி, புளியடி, நெல்லியடி, பூநாறிமரத்தடி இப்படிக் கணக்கற்ற அடையாளங்கள்.

பெயரே இல்லாத மரம் ஒன்றுக்கு 'பெயரில்லாமரம்' என்ற பெயர் வந்து, பஸ்பிரயாணிகள் இறங்குகின்ற தரிப்பிடத்திற்கு 'பெயரில்லாமரத்தடி' என்கின்ற பிரபல்யமான ஒரு பெயராக நிலைத்து விட்ட தன்மையையும் இவனறிவான்.

சந்நிதி கோவில் சுற்றாடல் மரங்கள், வல்லிபுரக்கோவில் சூழலை செழுமைப்படுத்துகின்ற பெருவிருட்சங்கள், சுட்டிபுரத்து அம்மன்கோவில் மரங்கள், கரிக்கோப்புச் சுடலையின் சவுக்குமரங்கள் யாவுமே இவனுக்கு அற்புதமானவை.

நண்பர்களின் உறவு போல தனிமையின் சுகானுபவத் திளைப்பிற்கு மரங்களே இவனுக்கு தஞ்சமாகின காலம் ஒன்று முன்பு இருந்தது.

வாழ்வின் சலிப்பு சிலவேளைகளில் தன்னையே அன்னியமாக்கி, பிறரால் அன்னியமாக்கப்பட்டு சர்வமும் ஒடுங்கி தனிமைப்பட்டுப்போன காலங்களில் மரங்களின் நிழல்களே இவனுக்கு ஆதரவு தந்திருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



பெரும் புயலொன்றில் மாறம்புலப் பிள்ளையார் கோவில் முன்றலில் நின்ற ஆலமரம் வேரோடு சரிந்தமை இவனுக்குள் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது.

அந்த ஆலமரத்தின் கீழ் புதுவருடப்பிறப்பன்று போர்த்தேங்காயடியில் எத்தனையோ காலிக்கையான்கள் சிதறுண்டமையும் இவனுக்கு ஞாபகத்திலிருக்கிறது.

பூமாஞ்சோலையிலிருந்துவரும் வெடிப்பொன்னப்பா தன் கைபடச் செய்த பீரங்கிவெடி ஒன்றைக் கொளுத்தி போர்த்தேங்காய் அடியை ஆரம்பித்து வைப்பதுவும், அதே வெடிப் பொன்னப்பா விபத்தொன்றில் தனது வெடிகளினாலேயே போர்த்தேங்காய் போல சிதறுண்டு போனமையும் இவனுக்கு நினைவிலுண்டு.

ஷெல்லடி, ஆட்டிலறித்தாக்குதல், ஹெலித் தாக்குதல் போன்ற சம்பவங்கள் சாஸ்வதமாகிப் போய்விட்ட இன்றைய சூழலில் வெடிப்பொன்னப்பாவின் விபத்து மரணம் மிகமிகச் சாதாரணமாகிப் போய்விட்டாலும், அன்று அது மிக ஆச்சரியமானதும் அதிசயமானதுமான ஒரு நிகழ்வேதான்.

வெடிப்பொன்னப்பாவின் வீட்டின் வாசலில் பெரியதொரு கொய்யா மரம் நின்றதுவும், வெடிவிபத்தோடு அந்த மரம் செத்துப் போனமையும் பெரியதொரு துன்பியல் நிகழ்வாகவே இவனுக்குத் தெரிந்தது.

இவனும், செல்வம், நவம், ராசமூர்த்தி ஆகியோரும் அந்தக் கொய்யாமரத்தில் பலநாட்கள், பலமணித்தியாலங்கள

செலவிட்டமையும் இவனால் மறக்க முடியாதிருந்தது.

இவனது பாலியகால நண்பன் ஜெயக்கொடி மூன்று நாள் காய்ச்சலில் மரணித்துப் போனமைக்கு பொடுங்கர் வளவு விளாத்தி மரத்தில் குடிகொண்டிருந்த ஊத்தைகுடியன் பேயின் வேலைதான் காரணம் என்ற கசமுசப்பு கேட்ட காலமொன்றும் இவனுக்கு சித்தித்திருந்தது.

காலாகாலம் மரங்களோடு சம்பந்தப்பட்டதாகவே இவனது வாழ்வு கழிந்திருந்தது.

விசுவமடு காணிப்பட்டாளத்துக் காம்பில் கடமையாற்றிய போது தான் வீரை மரங்களும், பாலை மரங்களும் அறிமுகமாகின.

படிப்பகம்

www.padippakam.com



நண்பனொருவனின் பிரிவாற்றாமையைத் தாங்கிக்கொள்ள முடியாமலேயே இவன் காணிப்பட்டாளத்தில் தன்னை இணைத்துக் கொண்டான்.

கல்லூரிப்படிப்பின் முற்றுப்பெறுகையின் வெறுமை, தொழில் தேடலில் காணிப்பட்டாளமே கைகொடுத்தது. ஒட்டுச்சுட்டான், விசுவமடு என இரு காம்புகளில் பல நண்பர்கள் இணைந்து கொள்ள, ஒரு மழைநேரத்து மதியவேளையில் கூப்பன் அடிக்கட்டையுடன் பஸ்சேறி பரந்தன் சந்தியால் திரும்பி கண்டாவளை கடந்து கட்டிமுடிக்கப்படாத நெத்தலியாற்றுப் பாலத்தின் கீழாக பெருமரங்கள் சூழப் பெற்ற விசுவமடு காம்ப் வாசலில் இறங்கி.... பைஜாமா போட்ட ஓ.ஐ.சி.யின் முன் நின்றது இப்போதும் நினைவில் பசுமையாக உள்ளது.

ஒரு காலம் கல்லூரியின் சாரணர் படையில் சேர்ந்து காக்கி உடுப்புப் போட்டதன் பின்னர் காணிப்பட்டாளத்தில் தான் காக்கி அணியும் சந்தர்ப்பம் கிட்டியது. சிவப்பு நிற கன்வஸ் சப்பாத்து, இரண்டு காற்சட்டை, சோல்டர் வைத்த இரண்டு சேட், ஒரு பிரம்புக் கூடை, மண் அள்ளும் தாச்சி, மண்வெட்டி ஒன்று, சாப்பாட்டுத் தட்டு ஒன்று, தேநீர் குடிக்கும் கைபிடி அலுமினியக் குவளை ஒன்று என்பன கையொப்பமிட்டு இவனால் பொறுப்பேற்கப்பட்டன.

அதிகாலை எழுந்து, தேநீருக்கான வரிசையில் காத்து நின்று, புறப்படும் உழவு இயந்திரத்தில் தொற்றி ஏறி, தொலைவில் கீப் கணக்கில் மண் வெட்டி, கைகளில் கண்டல், கொப்புளங்கள் ஏற்பட்டு மாணிக்கப்பிள்ளையார் ஆற்றில் குளித்து, சிவப்பு நிறப் பீற்றூட்டுடன் சோறும் பாணும் சாப்பிட்டு...

இந்த வாழ்க்கை ஒரு மூன்று மாதங்களே நீடித்தது.

இன்று காப்டன், மேஜர், லெப்ரினற் கேர்னல் என்று பல மாவீரர்களைப் புதைத்தாகிவிட்டது. இவனோடு இருந்த காணிப்பட்டாளக்காரர்கள் சிலரும் இதில் அடங்கலாம்.

பாலை மரங்களின் கீழ்... வீரை மரங்களின் கீழ்... பெயர் தெரியாத பெரு விருட்சங்களின் கீழ்... சிநேகித பாவத்துடன் இவனோடு உணவருந்திய பட்டாளத்துப் பொடியள் பலரை போர்க்கோலத்தில் இவன் கண்டிருக்கிறான். தென்பகுதியிலும் '71'ன் ஆரம்ப காலத்தில் கிளர்ந்த ஒரு சம்பவத்தில் கணிசமாக

படிப்பகம்

www.padippakam.com



இணைந்தவர்களும், இறந்தவர்களும் இவனைப் போல் காணிப்பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதையும் இவன் அறிவான்.

அப்போது வன்னியின் பெருவிருட்சங்கள் எதிர்காலத்தில் போர்க்கருவிகளாக மாறும் சாத்தியம் ஏற்படும் என்பதை இவன் கிஞ்சித்தும் யோசித்திருக்கவில்லை. பெரும் பெரும் விருட்சங்கள் நிழல் தந்த காலம் போய் கிளைமோர்களைத் தாங்கி நின்று போர் புரிந்தமை உண்மையில் அதிசயமான ஒன்றுதான்.

அமைதியும், சாந்தமும், சிநேகமும், மனிதமும், நிறைந்த மக்கள் தமது குணாதிசயங்களிலிருந்து விடுபட்டுப் போக ஏதுவான நிர்ப்பந்தம் போலவே, விருட்சங்களுக்கும் நேர்ந்தமை தவிர்க்க முடியாத துன்பமாக இருந்தது.

யாழ்ப்பாணத்தின் பழைய பஸ்நிலையச்சூழலும் பெருவிருட்சங்களும் இளைப்பாற்று மண்டபமும், சிவசக்தி கூல்பாரும், சருகுத்தாளில் சுற்றப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அப்பிள் பழங்களும், கொத்துக் கொத்தாக தொங்கும் முந்திரிப் பழங்களும், குருவிச் சாத்திரக்காரரும், வடைவிற்போரும், நாய்க்குட்டி விசரியும் இவனுக்கு ஞாபகம் வருவதுண்டு.

புதிய பஸ் நிலையம் இடம் பெயர்ந்த பின் கொளுத்தும் வெயிலும், தகரக் கொட்டகையும் அக்காலத்திலேயே பழையபஸ் நிலையத்தின் நிறைவை அடிக்கடி நினைக்கத் தூண்டுவதுண்டு.

இப்படியேதான் பருத்தித்துறை பஸ்நிலையமும், மாக்கற்றும், புளியமரங்களின் நிழலும் சடுதியென ஏக்கத்துடன் மாறிப்போனமை கவலை தருவதாய் நிகழ்ந்தது. காணிப்பட்டாளக்காலம்போய் சிவப்பு அரசியல் சிந்தனைக்காட்படுவதற்கு சிலகாலம் முன்னர் விரும்பியோ விரும்பாமலோ நண்பர் சிலருடன் போதைவஸ்துவைப் பரிசோதிக்க விளைந்து, துன்னாலை மண்பிட்டி அரசமரம், புத்தரின் ஞான தீட்சையை நினைவுகூரத்தக்க அனுபவத்தை ஏற்படுத்தியமையும் இவனால் மறக்கமுடியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



வாழ்வனுபவ விரக்தியின் எல்லைதொட்டு, தற்கொலை செய்யும் மனோபாவத்தை நிராகரித்து, ஒரு துறவு வாழ்வுச் சூழலில் கழிந்த காலங்களில் ஆனைவிழுந்தான் சுடலையின் சவுக்கு மரங்களும், கிளைப்பனைகளும், மணற்குன்றுகளும் உறவுகளாகியமையும் இவனுக்கு நினைவிலுண்டு.

பனிகொட்டும் இரவில் போர்வையற்று வெற்றுடம்புடன் மரங்களின கீழ் மெய்மறந்து இவன் தூங்கியிருக்கிறான், அந்த நாட்கள் என்றும் இனிமையானவை. இன்று போல் அல்லாது அன்று எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம் மட்டுமே மனதை நிறைத்திருந்த தருணங்கள் அவை.

"கந்தையற்றை பொடியனுக்கு மூளை மாறாட்டம்"

ஊரில் இப்படி ஒரு கிசுகிசுப்பு அப்போது இருந்தது. அதையும் மீறி அவனது தீவிர சிந்தனைத் தெளிவு பின்னர் அவனுக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட ஏதுவாகியது.

போர்க்குணாம்சம், எதையும் தீவிரத்துடன் சீர்தூக்கிப் பார்த்தல், தவறு கண்டு கொதிக்கும் போக்கு.. இவை இவனுக்கு எதிரிகளை விட தோழர்களையே கூடுதலாக்கியது.

கஸ்தூரியார் வீதியில் ஒரு வானொலிப் பெட்டித் திருத்தகத்தில், இருபாலையில் ஒரு மில்லில், மட்டக்களப்பில் ஒரு தனியார் நிறுவனத்தில், மன்னாரில் ஒரு மீன் வாடியில், கொழும்பில் ஒரு ஏற்றுமதி நிறுவனத்தில் என மூன்று மாதம், நான்கு மாதம் என நிலைத்திருக்காமைக்கு இவனது நேர்மையும், விட்டுக் கொடுக்காத்தன்மையும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

மன்னார் பழையபாலத்தில் ஒரு மீன் வாடியில் இருந்தபோது வள்ளங்களில் ஏறிப் பயிற்சி பெறச் சென்றவர்களை இவனே வழியனுப்பி வைத்திருக்கிறான். ஒரு விருட்சத்தின் கிளைகள் இவையென இவன் எண்ணிய எண்ணம் பின்னர் பொய்த்துப் போயிற்று.

அம்மாவும் அப்பரும் இறந்துவிட்ட பின்னர் ஏதோ ஒரு விபத்துப் போல திருமலை வந்து, திருமணமாகி... அமைதிப்படை, அதிரடிப்படையாகி பின்னர் அக்பர் கப்பலில் அவர்கள் இந்தியா திரும்பிய பின்னர் திருமலையில் நிகழ்ந்த குழப்பத்தில் கால்

படிப்பகம்

www.padippakam.com



நடையாக மனைவியுடன் நடந்து பெருவிருட்சங்களின் கீழ் சமைத்துச் சாப்பிட்டு உறங்கி வள்ளத்தில் ஏறி செம்மலையில் இறங்கி கிட்டத்தட்ட முப்பது இரவுகளையும் பகலையும் மரங்களின் கீழேயே கழித்திருக்கிறான்.

இன்று இவனுக்கு ஒரு மகனும் மகளும். மகன் பிறந்தகாலத்தில் திருமலையில் இருந்து வன்னிப் பாதையூடாக யாழ் சென்று கிளாலியூடாக திரும்பத் தாமதப்பட்டு வேலையிழந்த நாட்களில் வல்லிபுரக் கோவில் விருட்சங்களே இவனுக்கு ஆறுதலாயிற்று. ஆகாயத் தாக்குதல்கள் வலுப் பெற்றிருந்த அந்த நாட்களில் வைரவர் கோவில் வேப்பமரத்தின் கீழ் உள்ள பதுங்கு குழியுள் இவனது மனைவியும், மகனும், இவனுமாக பல தடவைகள் வியர்த்துவிறு விறுத்தமையும் இவனுக்கு நினைவிலில்லாமலில்லை.

“இனிக்காணும். எப்படியாவது ஊருக்குப் போக வேணும்”

மனைவியின் பிடிவாதம் வென்று திருமலை திரும்பிய அந்த நாட்களும், வேலையற்று வீதியில் திரிந்த அந்த நிலைமையும் இன்று மீள வேலைபெற்று இயந்திரமாகிவிட்ட நிலையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட தொடர் நிகழ்ச்சியாக இவனுக்குள் இன்னும் இருக்கிறது.

திருகோணமலை 3ம் கட்டை திருச்சிலுவை வயோதிபர்மடமும் அதன் மருங்கில் நிற்கும் அரசமரங்களும், பழைய எழுத்தாளர் ஒருவர் அங்கு அகதியாக மரித்ததுவும் பெருஞ் சோகமாக அவனுள் இன்னமும் கலந்து கிடக்கிறது. பின்னர் அடித்த புயலொன்றில் சர்வோதய நிலைய வெளிவாயிலுக்கு அருகாமையில் நின்ற ஆலவிருட்சம் வேரோடும், வேரடி மண்ணோடும் சரிந்து விழுந்தமையும் இவனால் மறக்கமுடியாதது. யாழ்ப்பாணத்துக்காக பயணிக்கும் பலர் இவனிடம் இளைப்பாற்றி பெற்று பயணப்பட்ட காலம் போய் இன்று அரை நாள் பயணத்தில் யாழ் செல்லும் காலம் கனிந்திருக்கிறது. சகபயணிகளை ஒற்றராக கருதிப் பயணப்படும் போது பயமுறுத்தி நின்ற விருட்சங்கள் இன்று இலை அசைத்து வரவேற்பதுவும், விடை கொடுத்தனுப்புவதுமான நல்நிலையும் சித்தித்திருக்கும் சூழ்நிலை. ஏதோ ஒரு வகை உடன்பாடும் இசைவும் கொண்டு பேசி உறவுகொண்ட நண்பர்கள். இரத்த உருத்துக்கள் வித்தாகிப்

படிப்பகம்

www.padippakam.com



போய் விதைக்கப்பட்ட சூழ்நிலையில் இன்னதுதான் என எதிர்பார்க்காத ஒரு பேரமைதி..! இது நிலைக்குமா...? நிலைக்க வேண்டும்.

இவனது திருகோணமலை வீட்டின் பின் புறமான வேலியின் நடுவே பெரியதொரு மாமரம் நின்றது இவனுக்குத் தெரியும்.

மூன்று வருட அகதி வாழ்க்கை முடிந்து திரும்பிய போது, நிழலும்... காயும் கனியும்... எல்லையுமாக நின்ற அந்த மரம் இருந்த இடமே தெரியாது அயலகத்தவரால் வேரோடு பிடுங்கப்பட்டு.... எல்லையும் காணியும்... அபகரிக்கப்பட்டிருந்தது.

வீட்டின் முன்பக்கமாக நின்ற கத்தாப்புமரம் மட்டும் தனித்து விடப்பட்டது. சிதைந்தழிந்துவிட்ட வீடும், வளவும் அடையாளம் காணப்பட கத்தாப்பு ஒன்றே காரணமாயிற்று.

போர்க்காலத்திற்கு முன்னர் ஊரின் பெருவிருட்சங்கள் பல சிறு கோவில்களாக சூலங்களுடன் நின்ற நிலைமை மாறி ஆக்கிரமிப்பின் இன அடையாளங்களாக அரசமரங்களும், அதன் கீழ் புத்தர் சிலைகளும் உருவாகி விட்டமையை இவன் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.

விருட்சங்களே இன அடையாளங்களா...?

இவனது காரியாலய களஞ்சியத்தின் முன்பாக பெரும் அரசமரம் ஒன்றும், சிவப்புக் காவிக்கோடு போட்ட சிறு பிள்ளையார் கோவிலொன்றும் வெய்யிற் காலத்தின் மதியவேளைகளில் அவை இரண்டுமே ஊழியர்களுக்கு ஆறுதல் தருவதும் இவனுக்குத் தெரியும்.

ஏதோ ஒரு ஏதேச்சையான துரித நடவடிக்கை மூலம் காரியாலய ஊழியர்களே அப்பிள்ளையார் கோவிலை உருவாக்கியதாக இவன் பின்னர் அறிந்து கொண்டான்.

சுற்றிலும் உள்ள பௌத்தர்கள் கூட பிள்ளையாரைக் கும்பிட்டுப் போவதை இவன் அவதானித்துள்ளான்.

அரசமரம் காப்பாற்றப்பட்ட ஆச்சரியம் எப்போதும் இவனுக்குள் இருந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



அந்த விருட்சத்தின் கிளைகளில் வெசாக் கூடுகள் வருடத்தில் ஒரு முறை தொங்குவதும் பின்னர் அகல்வதும், பிள்ளையாரை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை.

அவரது இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதுமில்லை.

திருகோணமலையின் வெம்மைக்கு ஆறுதலாக இவ்வகை விருட்சங்களே இருந்துள்ளன.

நண்பர்களோடு சந்தோசமாக உரையாடுவதற்கு இம்மரங்களும் காரணமாக இருக்கலாம்.

தோப்பாக விரிய வேண்டிய உணர்வுகள் சுருங்கி தனிமைப்பட்டுப் போய் நத்தையாக ஊரும் உணர்வுகள். ஆயினும், அவற்றையெல்லாம் மீறி எங்கெங்கோ தனிமைப்பட்டுப்போனாலும், நோக்கத்தில் ஒன்றுபட்டுப்போன எண்ணங்களுடைய இளைய தலைமுறை வேரும் விருட்சமுமாக.

காரியாலய முன்வாயில் அரசமர இலைகள் மென்காற்றில் சலசலத்து ஓய்கின்றன.

புகைபோக்கிகளுடன் கம்பீரமாக சூழலை மாசுபடுத்தி நிற்கும் தனியார் நிறுவனம், சூழலைப் பாதுகாப்பதற்கு மரங்களை நாட்டுங்கள், என விளித்து எழுதிய ஸ்ரிக்கர் இவனது காரியாலய மேசைக்கு எதிர்ப்புற கண்ணாடியில்...

இவனுக்குள் மெல்லிய புன்னகையும், எரிச்சலும்.....

சமீப நாட்களாக காரியாலயம் கைமாறப் போவதாகவும், இடமாற்றம் வரப் போவதாகவும் எழும் சர்ச்சைகள்...

காரியாலயத்தைப் பொறுப்பேற்பவர்கள் பிள்ளையாரையும், அரசமரத்தையும் இவர்கள் போல் பேணுவார்களா...?

விடைகாண ஏங்கும் பலவித கேள்விகள்...?

இடம்மாறிப்போகும் காரியாலயத்தைச் சுற்றி பெருவிருட்சங்கள் நிற்குமா...?

இதேபோல் அரசமரம் ஒன்று நிற்பதற்கு பாத்தியதை இல்லை. வேப்பமரங்கள் நிற்கலாம்? நிற்காதும் போகலாம்!

ஆயினும் என்ன....? விருட்சங்கள் எங்குமே உள்ளன. அவற்றின் கீழ் இளைப்பாற யார் தடுப்பார்..?

படிப்பகம்

www.padippakam.com



இவனின் அம்மாவின் அப்புவின் சடலம் அடக்கம் பண்ணப்பட்ட சவக்காலை நாவல்மரங்கள் சூழப்பட்ட வேதக்கோவில் கிராமத்தைச் சேர்ந்தது.

இவனின் அம்மாவும், அப்புவும் அடக்கம் பண்ணப்பட்ட சவக்காலை பழங்கோவிலடி என்னும் வேப்பமரங்கள் சூழப்பட்ட ஒரு ஒதுக்குப்புற கிராமத்தைச் சேர்ந்தது.

இவனது அண்ணன் மின்சாரம் தாக்கி மரணப்பட்டபோது அடக்கம் பண்ணப்பட்டதும் பழங்கோவிலடியில் தான்.

ஒப்பிரேசன் லிபரேசன் காலத்தில் எத்தனையோ வீட்டின் பின்புறங்களும், வீதிகளும் மயானங்களாகின.

பூவரசமர விறகுகள் தேவைப்படாது. பழைய ரயர்களில் எரிந்தவர்கள் எத்தனையோ பேர்!

இப்போது இவனுள் ஒரு பெரு விருப்பு.....

அம்மாவின், அப்புவின், அண்ணாவின் பக்கத்தில் தானும் புதைக்கப்பட வேண்டும்.

பெரு விருட்சங்கள் சூழப்பெற்ற பழங்கோவிலடிச் சவக்காலையில் அடக்கம் பெறவேண்டும்.

இவனுள் எப்போதும் போல சலனமற்ற சிந்தனைகள்.

மகன் இயக்கத்துக்குப் போய்விட்டதாக எழுதும் தங்கையின் கடிதம்.

மகன் வெள்ளைக்காரியைக் கல்யாணம் முடித்து விட்டமைக்காக கவலைப்படும் நண்பனொருவனின் தொலைபேசி முனகல், ஊர் திரும்பும் ஆசையில் ஏக்கப்படும் வெளிநாட்டுவாசியாகிவிட்ட ஆசிரியர் ஒருவரின் புலம்பல்.

விரும்பாமலேயே வலிந்து விமானமேற்றி அனுப்பப்படும் அகதிப் புலம்பெயர் குடும்பங்கள்.....

நண்பர்களாய்.... தோழர்களாய் அன்போடு பழகியவர்களின் இழப்புகளும்.... பிரிவுகளும்....

தோழர் சிவராசா, தோழர் சிவஞானம்.

ஆயினும், வாழ்வு நம்பிக்கை வேரூன்றி கிளைத்து விருட்சமாகவே நிற்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



காலம் மாறிப் பெய்யப் போகும் மழை நேரத்து அறிகுறி.

துளிர்விட்டிருக்கும் அரசமரத்தின் இலை அசைவு...

சென்ற வருடத்திற்கு முந்தைய வருடம் வீசிய புயலில் வேரோடும் வேரடி மண்ணோடும் புரட்டப்பட்ட விருட்சங்கள் போல்.... இவ்வருடமும் புயல் வீசுமா.....? மரம் சரியுமா..?

நிகழலாம்...... நிகழாதும் விடலாம்.

இவன் மனம் இலேசாகியது....

யாழ்ப்பாணம் புலம்பெயர்ந்து வன்னிக்கு வந்தபோது..... மனிதர்களுக்கு ஆறுதல் தந்தவை. விருட்சங்கள் மட்டுமே.

மழை.... வெய்யில்.... பனி.... குளிர்

மனிதர்களுக்கு.... ஆறுதல்.... இளைப்பாற்றி எல்லாமே..... விருட்சங்கள். விருட்சங்கள் மட்டுமே... நெஞ்சுக்குள்...... இனம் தெரியாத சுகம்.

பழங்கோவிலடியின் வேப்ப மரங்கள்...... முனியப்பர் கோவில் ஆலமரம்.... ஆனைவிழுந்தான் கிளைப்பனைகள்... வீட்டின் மேற்குப்புற இலுப்பைமரம்.... வேதக் கோவில் நாவல் மரங்கள்.... பணிக்கர் கோவிலடி வாகை மரங்கள்... பூதாத்தை வெட்டையின் புளியமரம்....

விருட்சம் என்னவோ இங்கு தான்...

வேர்கள் மட்டும்.....?

*தூண்டி – 2004

படிப்பகம்

www.padippakam.com

**"ஒரு நாள் அவர்கள் எங்களைப் போல**
**வேதங்களை ஆக்கிக் கொள்வார்கள்"**
**சமூக இலக்கியப் போராளி நந்தினி சேவியர்**

-செல்லத்துரை சுதர்சன்

*நந்தினி சேவியரின் 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' 1993 இல் வெளிவந்தது. அவர் எழுதிய எட்டுச் சிறுகதைகளின் தொகுதியிது. கவிஞர் ஜபார் மூலம் அத்தொகுதி கிடைத்தது. வாசித்திருந்தேன். ஆனால் 1996 இல் தான் சேவியரை நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கவிஞர் ஜபாருடன் திருமலையில் உள்ள சேவியரின் வீட்டில் சேவியரைச் சந்தித்தேன். கலை, இலக்கியத்தை விடச் சமூகப் பிரச்சனைகள், அரசியற் பிரச்சனைகள் பற்றியே அதிகம் பேசினார். அன்று மட்டுமல்ல நான் அவரைச் சந்தித்த பல தடவைகளில் அவரது பேச்சு சமூகம் பற்றியதாகவே இருந்தது. அவரிடம் இருந்த சமூகம் பற்றிய அக்கறையும், சமூகத்தைக் கூர்ந்து நோக்கும் பார்வையும், விமர்சன மனப்பாங்கும் அவரது எழுத்துக்களைச் சமூகச் சார்புடையதாக்கின.*

*1967 இல் இருந்து எழுதத் தொடங்கியவர் சேவியர். சிறுகதைகள், நாவல், குறுநாவல், கட்டுரைகள், பத்திகள் எனப் பல்வேறு வடிவங்களில் சமூகம் பற்றிய தன் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். இருப்பினும் இவர் ஈழத்து இலக்கிய உலகில் சிறுகதைப் படைப்பாளியாகவே பரவலாக அறியப்பட்டுள்ளார்.*

*இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனச்சார்பு) வாலிப சங்க இயக்கத்தில் இணைந்து செயற்பட்ட சேவியர் அதன் தொடர்ச்சியாகப் பல முக்கிய சமூகப் போராட்டங்களில் பங்கு பெற்றவர். அடக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போராடியவர்களுள் சேவியரும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர். மார்க்ஸியக்*

படிப்பகம்

www.padippakam.com



கொள்கையில் பற்றுடைய இவர் அந்நோக்கில் சில கட்டுரைகளையும் பத்திகளையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நந்தினி சேவியரின் சிறுகதைகள் சமூகப் பிரச்சனைகளை உள்ளடக்கமாகக் கொண்டவை. தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடான 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' என்ற சேவியரின் தொகுதியில் உள்ள சிறுகதைகள் பற்றி இ.முருகையன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'நந்தினி சேவியரின் கதைகள் ஆயிரத்தில் ஒருவரான அற்புதத் தனியாள் ஒருவரைப் பற்றியோ, அவருடைய விசித்திர குணாதிசயங்களைப் பற்றியோ பேசிவிட்டு நிறுத்திக் கொள்ளும் தன்மையை உடையன அல்ல. கால ஓட்டத்தில் இடையீடின்றி மாறிக் கொண்டிருக்கும் வாழ்நிலைகளின் இயக்கத் திசைகளை நுணுக்கமாக நோக்குவதற்கு நமக்கு உதவி செய்யும் வல்லமை வாய்ந்த கலைக்கருவிகள் அவை. அதனாலேதான் இந்தக் கதைகளை வியக்க வைக்கும் சாதனைகளாக நாம் இனங்காண்பதில்லை. நமது அநுபவ விரிவுக்கும் வாழ்க்கை விளக்கத்துக்கும் துணை போகும் திறன் கொண்ட, நயந்து திளைப்பதற்கு ஏற்ற ஏதுக்களை நிறையவே கொண்டுள்ள -- சீரிய படைப்புக்களென உணர்ந்து போற்றுகிறோம்" (முருகையன் : 1993) வெறும் புளிச்சல் ஏவறைகளுக்கும், அரண்மனை இலக்கியக் கொட்டாவிகளுக்கும் அவரது கதை உலகில் இடம் இல்லை. சிறுகதைகளைப் போலவே அவரது நாவல்கள் (மேகங்கள், கடற்கரையில் தென்னை மரங்கள் நிற்கின்றன) குறுநாவல் முதலியனவும் சமூகச் சார்பான

படிப்பகம்

www.padippakam.com



இலக்கியப் படைப்புக்களே ஆகும். சேவியரின் கதைகளில் மண்வாசனை அதிகம் புலப்படுகிறது. புவியியற் சித்திரிப்பிலிருந்து மொழிக் கையாளுகை வரை கதைப் பின்னலிலிருந்து கதை மாந்தர் வரை அர்த்த புஷ்டியுடன் நிலைபெற்றுள்ளன. வெகு லாவகமாகக் கதையை நகர்த்திச் சென்று கதையின் முடிவில் வாசகனை அதிர்வோடு சிந்திக்க வைக்கும் தன்மையே சேவியரின் பலமாகும். நீட்டி முழக்காமல் சொற் செட்டாய் அமையும் புனைக்கதை வெளிக்குள் தனது கதை மாந்தர்களை உருவாக்கி நடமாடவிட்டு முரண்பட வைத்து கதை சொல்லியும் கதை மாந்தராய்க் கலந்துவிடும் தன்மையை அவர் நிகழ்த்திக் காட்டியுள்ளார். சேவியரின் கட்டுரைகளில் 'கடந்த நூற்றாண்டில் ஈழத்து மார்க்சிய இலக்கியம்' (2000) என்பது குறிப்பிட்டுச் சொல்லக் கூடியது. ஈழத்தில் நடைபெற்ற முற்போக்கு இலக்கிய விவாதங்களின் பின்னணியில் அரசியல், சமூக இயக்கங்களினதும், இலக்கியத்தினதும், இலக்கியப் படைப்புக்களினதும் வளர்ச்சியை அக்கட்டுரையில் அவர் விரிவாக நோக்கியுள்ளார்.

ஈழத்து இலக்கிய உலகில் நடைபெற்ற இருட்டடிப்புக்கள், இலக்கியத் திருடல்கள், வெளித் தெரியாத பூடகங்கள் முதலியவற்றை அவர் 'தெரிந்ததும் தெரியாதவையும்' என்ற தலைப்பில் எழுதிய பத்திகள் விபரிக்கின்றன. இப்பத்திகளை அவர் வ.தேவசகாயம் என்ற பெயரில் எழுதினார்.இவற்றை விட 'எழுத்தாயுத வீரர்களும் திடசங்கற்பமும்' (தினகரன் - 2006) 'இலக்கியச் சஞ்சிகைகளும் சர்ச்சைகளும்' (வீரகேசரி – 2006) முதலிய கட்டுரைகளையும் குறிப்பிட்டுச்

படிப்பகம்

www.padippakam.com



சொல்லலாம். முற்போக்கை எதிர்த்தும் மறுத்தும் எழுதும் சாரரை இவர் பின்வருமாறு எழுதுகிறார். 'நாய்கள் குரைத்துக் கொண்டிருக்கும், வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கும்' (10.12.2006 வீரகேசரி) இக்கட்டுரைகளைத் தாவீது கிறிஸ்ரோ என்ற பெயரில் எழுதியுள்ளார்.

சேவியரின் சினிமா தொடர்பான கட்டுரைகளும் அதிகம் சிலாகித்துப் பேச வேண்டியவை. அவற்றில் வெளிவராதவையும் உள்ளன. வெளிவந்த கட்டுரைகளை அவர் தாவீது கிறிஸ்ரோ என்ற பெயரிலேயே எழுதியுள்ளார். 'துறைசார் ஒளிப்பதிவாளர்களும், சிறந்த திரைப்படங்களும் குறும்படங்களும்' 'தமிழ் சினிமாவில் தமிழ் எழுத்தாளர்கள், "இனிது பெற என்றொரு குறும்படம்", "ஆவணப்படமொன்றும் குறும்படம் இன்னொன்றும்", முதலிய கட்டுரைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நாடகம், கூத்துத் தொடர்பான இவரது சில கட்டுரைகள் குறிப்பிடத் தக்கன. அக்கட்டுரைகளில் சமூக வரலாற்றோடு தன் அநுபவத்தையும் கலந்து பல வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார். ஈழத்தின் கலை வரலாறு இன்னும் சரியாக எழுதப்படாத நிலையில் இவரது கட்டுரைகள் விடுபட்ட வரலாறுகளை இட்டு நிரப்பிச் செல்வதாக அமைகின்றன. உதாரணமாக 'வடமராட்சியின் இசை – நாடகம் - கூத்துக்கள் பற்றிய சில சுருக்கக் குறிப்புகள், (தினக்குரல் - 2006) என்ற கட்டுரையைக் குறிப்பிடலாம். இக்கட்டுரையில் 'வடமராட்சியின் கலைப் பாரம்பரியம் பற்றி ஆராயும் ஆராய்ச்சி மாணவர்கள். நாடக விக்ககர்கள் நாடகம்

படிப்பகம்

www.padippakam.com



அரங்கியலும் கற்றவர்கள் இவை பற்றி விரிவாக ஆராயவேண்டும். எழுத வேண்டும் என்பதுவே எனது விருப்பம். என்று குறிப்பிடுகிறார். வடமராட்சியின் கலைப் பாரம்பரியம் முழுமையாக ஆராயப்படாமல் இருப்பது யாவரும் அறிய வேண்டிய உண்மை என்பதும் இவ்விடத்தில் நினைவிற் கொள்ளத்தக்கது.

கலை, இலக்கியங்களில் பரிசோதனை முயற்சிகள் நடைபெற வேண்டும் என்று விரும்பியவர்களில் சேவியரும் ஒருவர். 'ஈழத்து இலக்கியத்தில் பரிசோதனை முயற்சிகள்' (தினக்குரல் - 2006) என்ற அவரது கட்டுரை குறிப்பிடத்தக்கது. இதில் அவர் கவிதை, சிறுகதை, ஆகிய இலக்கிய வடிவங்களில் காலந்தோறும் செய்யப்பட்ட பரிசோதனை முயற்சிகள் பற்றி விபரித்து, செய்யப்படவேண்டிய முயற்சி தொடர்பான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

சேவியர் எழுதிய விமர்சனக் குறிப்புக்கள் தாக்குவதை நோக்கமாகக் கொண்டவையல்ல. அவை படைப்பையும், படைப்பாளியையும், சமூகத்தையும் அடிப்படையாக வைத்து கலையாக்க முறைமைக்குப் பின்னான சமூக இயங்கியலை விபரிப்பவை. அவரது 'புதுமைப் பித்தனை மீறிய கதை சொல்லும் இலாவகம்' (தினக்குரல் 12.11.2006) என்ற ஜெயகாந்தன் பற்றிய கட்டுரையை இங்கு குறிப்பிடலாம். அக்கட்டுரையின் ஓரிடத்தில் அவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

ஜி.நாகராஜனின் கதைகளில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வு இரத்தமும் சதையுமாக வெளிப்பட்டது. அவர் கதைகளில் அவ்வாழ்வின் அருவருப்புக்கள

படிப்பகம்

www.padippakam.com



அனைத்தையும் மிக வெறுப்போடு படைப்பாக்கினார். வாசகனிடத்தில் அவ்வாழ்க்கையின் மீதான கொடூரத்தனங்களை அருவருப்போடு அம்பலமாக்கினார். ஒரு விதத்தில் இது புதுமைப்பித்தனை அண்மித்த கைங்கரியம். ஜெயகாந்தனிடம் இது மறுதலையாக வெளிப்பட்டது. விளிம்பு நிலை மக்களது வாழ்வு, அவர்களது சுற்றுச் சூழல் என்பன மிகவும் அழகியலுடன் வெளிப்பட்டு அவ்வாழ்வு வெறுப்புக்குரியதல்ல, விருப்புக்குரியதென வாசகர்களை நம்ப வைத்து அவர்களது வாழ்வு மாற்றப்பட வேண்டும் எனும் தார்மீகக் கோபத்தை எழுப்பத் தவறிய (பெரும்) தவறை அவரது சிறுகதைகள் செய்திருக்கின்றன, (தினக்குரல் - 12.11.2006 ப.39) இவ்விமர்சனம் பற்றி விரிவாக விவாதம் செய்ய வேண்டிய தேவை உள்ளது.

சேவியரின் ஈழத்துச் சமூகம், குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகம் தொடர்பான வரலாற்றை விரிவாகக் காட்டுவனவாக அவருடன் செய்யப்பட்ட நேர்காணல்கள் விளக்குகின்றன. தலித் இதழ் 'ஓடும்போது இருக்கும் சமத்துவம் உணவு பரிமாறிக்கொள்வதில் இல்லை' என்ற தலைப்பில் வெளியான நேர்காணல் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டியது. இந்நேர்காணலைச் செய்தவர் ரவிக்குமார். இந்நேர்காணலில் ஈழத்தில் சாதி, சாதிப் பிரச்சனைகள், சாதியத்துக்கெதிரான போராட்டங்கள், சாதியப் பிரச்சனைகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள், அவற்றை ஆக்கியவர்கள், அப்படைப்புக்களில் காணப்படும் சமூகம் பற்றிய தவறான செய்திகள் எல்லாவற்றையும் மிகவும் விலாவாரியாக சேவியர் எடுத்துரைத்திருந்தார். அந்த நேர்காணலில் சில உண்மைகளைக் கூறியிருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com


சாதியத்துக்கெதிராகக் களத்தில் இறங்கிப் போராடியவர்கள் பற்றிக் குறிப்பிடுகையில் பலரைக் குறிப்பிட்டு 'டொமினிக் ஜீவாவைப் பொறுத்தவரை அவர் டானியல் அளவுக்குக் களத்தில் நின்றவரல்ல, (பக்.21) என்று கூறுவதும், டானியல் கொஞ்சம் கூடுதலாகக் காட்டினார். கோபத்தைக் காட்டுவதற்காக, ஒரு ஆபிரிக்க எழுத்தாளர் இருந்தாராம். அவர் வெள்ளைக்காரப் பெண்கள் அனைவரையும் சோரம் போனவர்களாகவே காட்டினாராம். அந்தத் தன்மைதான் டானியலிடம் இருந்தது' (பக்.22) என்று கூறுவதும் அவரது நடுநிலைத் தன்மையைக் காட்டுகின்றன.

இன்னும் "ரோம் நகரம் எரிய பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோ மன்னனாக எம்மால் இருக்க முடியாது" என்ற தலைப்பில் சுட்டும் விழி (2004) இல் வந்த நேர்காணலும், "எழுத்தாளர் நந்தினி சேவியருடன்" என்ற தலைப்பில் கலைமுகத்தில் (கலை – 15, முகம் : 01;02) வந்த நேர்காணலும் இவரது சமூகம் மற்றும் இலக்கிய வளர்ச்சியையும் முரண்பாடுகளையும் விரிவாக விளக்குவனவாய் அமைகின்றன. வி.கௌரிபாலன் செய்த 'நந்தினி சேவியர் - ஓர் இடைமறிப்பு' என்ற விரிவான நேர்காணல் வெளிவரவில்லை. வெளிவருதல் பயனுடையது. இவரது நேர்காணல்கள் அனைத்தும் சிறிதொரு நூலாக வெளிவர வேண்டும். அது சமூகவியல் ஆய்வு மாணவருக்கு மிகுந்த பயனுடையதாய் அமையும்.

தமிழில் மொழிபெயர்ப்புத் தொடர்பாக வரலாற்று ரீதியில் அவர் சிந்தித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு

படிப்பகம்

www.padippakam.com



குறிப்புகள் சில எழுதினார். தமிழில் மொழி பெயர்ப்பு முன் முயற்சிகள் பற்றி அவர் எழுதிய "தமிழில் மொழிபெயர்ப்புக் கலையும் முன் முயற்சிகளும் பற்றிய ஒரு நோக்கு" என்ற கட்டுரை குறிப்பிட்டுச் சொல்லத் தக்கது.

சேவியருடன் உரையாடுவதும் ஒரு சுவையான அநுபவம். ஒரு முறை நானும், சேவியர், கவிஞர்சு.வில்வரத்தினம் ஆகியோரும் உரையாடிக் கொண்டிருந்தோம். அப்போது நிறையப் புதிய செய்திகள் வெளிவந்தன. மறைந்த. மறைக்கப்பட்ட செய்திகளும் தான்.

வடமாகாணக் கல்வியமைச்சில் இருவரின் இழப்பை எந்தக் கலாச்சார உத்தியோகத்தராலும் ஈடு செய்ய முடியாது. ஒருவர் கவிஞர். சு.வி.மற்றவர் சேவியர். சு.வி.மறைந்துவிட்டார். சேவியர் ஓய்வு பெற்று நம்மத்தியில் வாழ்கிறார். வடமாகாண கல்வியமைச்சின் கலை இலக்கியச் செயற்பாடுகளிற்குத் தன்னாலான பங்களிப்பை மறைமுகமாகவும் நேரடியாகவும் வழங்கிய சேவியரின் ஓய்வு யாரும் இட்டு நிரப்பமுடியாத வெற்றிடம். சேவியர் பற்றிய வெளிவந்த எழுத்துக்கள் மிகக்குறைவு. இலக்கிய வரலாற்று நூல்களில் ஆங்காங்கு பெயர்ப்பதிவுகள் மட்டும் வழமைபோல் காணப்படுகின்றன. விரிவாக வெளிவந்தவற்றுள் கலாநிதி செ.யோகராசாவின் கட்டுரை குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com



மல்லிகையில் அக்டோபர் 2007 சேவியரைப் பற்றிய அட்டைப்படக் குறிப்பாக அது வெளிவந்துள்ளது. இவற்றைவிட, பேராசிரியர்எம்.ஏ.நு; மான் 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' பற்றி 1993 டிசம்பர் இலங்கை வானொலி தேசிய சேவை கலைக்கோலம் நிகழ்ச்சியில் ஆற்றிய காரசாரமான விமர்சன உரையும், முஹ்சீன் எழுதிய 'நந்தினிசேவியர் கதைகள் கருத்தியல்களின் பதிவுகள்' என்ற கட்டுரையும் குறிப்பிடத்தகுந்தவை. இவரின் எழுத்துக்களைத் தொகுக்கும் முயற்சியில் 'ஒப்பனை நிழல்' வி.கௌரிபாலன் இறங்கியுள்ளார். அவரின் முயற்சியில் வெளிவராத நாவல்கள், குறுநாவல்கள் வெளிவருதல் நன்மை பயக்கும்.

சதா நேரமும் அடக்கப்பட்ட மக்களைப் பற்றிச் சிந்தித்தும், எழுதிக் கொண்டும், உரையாடிக் கொண்டும் இருக்கும் நந்தினி சேவியருக்கு ஞானத்தின் சார்பில் நாம் என்ன கூறலாம்? சேவியரின் 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' கதையில் வரும் பின்வரும் முடிவையே கூறலாம். 'ஒருநாள் அவர்கள் எங்களைப் போல் வேதங்களை ஆக்கிக் கொள்வார்கள்.

*ஞானம் - நவம்பர் 2009

படிப்பகம்

www.padippakam.com

## நந்தினி சேவியர் - எதிர் நீச்சல் போடும் படைப்பாளி

-லெனின் மதிவானம்

கடந்த சில நாட்களுக்கு முன்னர் எமது அலுவலக பணிக்காகத் திருகோணமலை சென்றிருந்தேன். என்னை எதிர்பாராத விதமாகச் சந்தித்த "நீங்களும் எழுதலாம்" சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம், ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளராகிய நந்தினி சேவியரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். நந்தினி சேவியரின் சிறுகதைகளை, கட்டுரைகளை சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னரே வாசித்திருக்கின்றேன். அவரது எழுத்தில் முனைப்புற்றிருந்த சத்திய வேட்கையும் உண்மைத்தேடலும் இயல்பாகவே அவரது எழுத்தின் மீதான தொற்றை ஏற்படுத்தியிருந்தன. எதிர்பாராதவிதமான சந்திப்பாக இருப்பினும், எமது உரையாடல்கள் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருவனவாய் அமைந்திருந்தன. தமிழ் இலக்கியத்தின் இன்றைய செல்நெறி, அதன் வளர்ச்சி, தொய்வு குறித்தும் இன்றைய இடதுசாரி இயக்கத்தின் போக்குகள், எதிர்காலத்தில் செய்யக் கூடியவை- செய்ய வேண்டியவை என்பன குறித்தும் பலவாறாக எமது உரையாடல்கள் பரந்து சென்றன. ஓர் உண்மைக் கலைஞனுக்கு இருக்கக் கூடிய மனிதாபிமானத்தைப் பெற்றவர் நந்தினி சேவியர். இளம் எழுத்தாளர்கள் பால் மிகுந்த அன்பும், பரிவும் கொண்டு, அவர்களது ஆக்கங்களைப் படித்து முன்னேற ஊக்கமளிக்கின்ற உயரிய தார்மீகத்தை அவரிடத்தே அவதானிக்க முடிந்தது. இத்தகைய தன்னலமற்ற தொண்டின்

படிப்பகம்

www.padippakam.com



விளைவாக, திருக்கோணமலை பிரதேசத்தில் பல அருமையான இளம் எழுத்தாளர்கள் உருவாகிவந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. வளரும் முற்போக்கு இலக்கியத்திற்கு நந்தினி சேவியர் ஆற்றி வரும் தலைசிறந்த பணிகளில் இதுவும் ஒன்றாகும். இவையாவும் விவரித்து விளக்கப்பட வேண்டியதொன்று என்ற போதிலும் இந்த சந்தர்ப்பம் அதற்கு ஏற்றதன்று.

சந்திப்பு ஏற்படுத்திய உந்துதல் மீண்டும் நந்தினி சேவியரின் கதைகளை வாசிக்க வேண்டும் என்ற அவாவை ஏற்படுத்தியிருந்தது. மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் அவரது 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பைத் தேடிப் பெற்றேன். அத்தொகுப்பை மீண்டுமொரு முறை வாசித்த போது ஏற்பட்ட வாசக அனுபவத்தை பதிவாக்க முனைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நந்தினிசேவியர் தமது இளமைப்பருவ முதலே தமது சிந்தனை செயற்பாடு, நடைமுறை என்பவற்றை பொதுவுடமை இயக்கத்துடன் இணைத்துக் கொண்டவர். அந்தவகையில் அத்தகைய இயக்கத்தின் பின்னணியிலிருந்தே தமது படைப்புகளையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

நந்தினி சேவியரின் படைப்புகள் தெளிவான பார்வையுடன் இன்னும் சரியாக மதிப்பிடப்படவில்லை என்றே தோன்றுகின்றது. அதற்கு அன்னாரின் எழுத்துக்கள் யாவும் முழுமையாக தொகுக்கப்படாமையும் ஒரு காரணமாகும். குறுக்கு வழித் திறனாய்வு முறையும், ஆழ்ந்த தேடலின்மையும் இந்நிலையை மேலும் வலுவாக்கியுள்ளது. இன்னொரு புறத்தில் குழு நிலைப்பட்ட இலக்கியகாரர்களின் இழுபறி நிலைகளும் நந்தினி சேவியரின் கலைப்படைப்பின் பெறுமானத்தைத் புரிந்து கொண்டு தொடரத் தெரியாமையை தோற்றுவித்திருக்கின்றது. இந்நிலையில் நந்தினி

படிப்பகம்

www.padippakam.com



சேவியரின் கலைப்படைப்பின் ஆளுமையை நேர்மையை இன்றைய விமர்சகர்கள் முழுமையாக வெளிக்கொணரத் தவறிவிட்டனர்.

இவ்வாறான சூழலில் நந்தனி சேவியரின் அயல்கிராமத்தைச்சேர்ந்தவர்கள் என்ற சிறுகதைத் தொகுப்பின் ஊடாக அவரது கலை அனுபவம்-நேர்மை குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. இதற்கு பிறிதொரு காரணமும் முக்கிமானதொன்றாகிறது. தமிழ் இலக்கிய உலகில் நந்தனி சேவியர் கட்டுரையாளர், நாவலாசிரியர், கவிஞர் என வேறு பல ஆளுமைகளைத் தம் எழுத்தின் ஊடாக வெளிக்கொணர்ந்த போதும் சிறுகதைகளே அவரை கணிப்புக்குரியவராக்கியது.

நிலவுடமைச் சமூகவமைப்பு சிதைவுண்டு முதலாளித்துவ சமூகவமைப்பு தோற்றம் பெற்றது. இந்தச் சூழலில் நிலபிரபுத்துவத்தின் உண்மை முகம் எப்படியிருக்கின்றது என்பதை, அதன் கொடூரத்தை எடுத்துக் கூறுவதற்காக தோற்றம் பெற்ற இலக்கிய வடிவமே நாவலாகும். அவ்வாறே, முதலாளித்துவ சமூகவமைப்பில் அது தோற்றுவிக்கக் கூடிய தனிமனித அவலங்கள், நெரிசல்கள், சலனங்கள் என்பனவற்றினை வெளிப்படுத்தக் கூடிய இலக்கிய வடிவமாக சிறுகதை தோற்றம் பெற்றது. நாவல் வாழ்க்கையை எடுத்துக் காட்ட சிறுகதை அதன் மறக்க முடியாத பாத்திரங்களை நிகழ்வுகளை எடுத்துக் காட்டுகின்றது. நாவலுக்கும் சிறுகதைக்கும் இடையிலான பாரிய வேறுபாடு இதுவாகும்.

சிறுகதை சமூகவுறவுகளில் வெளிப்படும் மனித நிலைகளை பின்புல உறைப்புடன் எடுத்துக் காட்டுகின்றது. இன்றைய உலகில் சிறுகதை பற்றிய சிந்தனைகளும் போக்குகளும் பல புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்திருக்கின்றது. தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலும

படிப்பகம்

www.padippakam.com



இதன் பாதிப்பு நிகழாமல் இல்லை. வ.வே.சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரத்தில் ஆரம்பித்து! நமது யுகத்து ஆற்றல் மிக்க சிறுகதையாசிரியரான நீர்வைப் பொன்னையனின் "காலவெள்ளம்" சிறுகதைத் தொகுப்பு வரை பலரும் பலவழிகளில் சோதனைகள் செய்து பார்த்துத் தான் இந்தப் புதிய திசை வழியைக் கண்டடைந்துள்ளனர். புதிய திசை வழி என்பதன் அர்த்தம் மக்களால் மக்களுக்கான இலக்கியம் என்ற அம்சத்தைச் சுட்டி நிற்கின்றது. பல ஆண்டுகளாக வளர்ந்த இயக்கம், போராட்டம், செயல் என்பனவற்றின் ஊடாக வளர்ந்து வந்ததொரு இலக்கியச் செல்நெறியாகும். இந்தப் பின்னணியில் சிறுகதை பற்றி நோக்குகின்ற போது அது வாழ்க்கையின் அவலங்களை துன்பங்களை எடுத்துக் காட்டுகின்றது. தனி மனித வாழ்வில் ஏற்படும் அவலங்கள் துன்பங்கள் வெளிக்கொணரப்படாவிட்டால் அவற்றினை அழித்து விட முடியாது. எனவே சிறுகதை மக்களின் வாழ்க்கை அவலங்களை துன்பங்களை மட்டும் சித்திரிப்பதாக அன்று அதனைத் தீர்ப்பதற்கான உந்துதலையும் வழங்குகின்றது என்பதை சிறுகதை வரலாற்றினை ஊன்றிக் கவனிப்பவர்களால் உணர முடியும்.

நந்தினி சேவியர் தமது இளமைக் காலத்தில் யாழ்ப்பாண கிராம சூழலில் சந்திக்க நேர்ந்த சமூகப் பிரச்சினைகள் தொடக்கம் பின்னாட்களில் இடதுசாரி சிந்தனையாளராக செயற்பாட்டாளராக வளந்த காலத்தில் தாம் சந்தித்த அனைத்து சமூகப் பிரச்சினைகளையும் சிறுகதைகளாக்கியுள்ளார்.

இத்தொகுப்பில் இடம்பெறுகின்ற "வேட்டை" என்ற கதை தம்பர் என்ற முதியவர்க்கும் அவர் வளர்க்கும் வெள்ளயன் என்ற நாய்க்கும் இடையிலான உறவு குறித்து சித்திரிக்கின்றது. இது தொடர்பில் நந்தினி சேவியரின் உணர்வுகள் இவ்வாறு பிரவாகம் கொள்கின்றது.

www.padippakam.com



"தம்பரும் நாயும் ஒரே மாதிரி. அந்த நாய்க்கும் வயது கடந்து விட்டது. மெலிந்து எலும்புகள் உடலைப் புடைத்துக் கொண்டு வெளியில் தெரிய, முன்னங்கால் ஒரு பக்கம் சாய்ந்து தம்பரைப் போலக் கம்பீரமாக நடக்கும் ஒரு அலாதி.... நாய்தான் தம்பர்...தம்பர்தான் நாய்"

என தம்பருக்கும் நாய்க்கும் இடையிலான உறவைக் காட்டும் நந்தினிசேவியர் ஒரு படி மேலே சென்று நாய் இறந்த போது தம்பர் அடைந்த வேதனையை அவர் இவ்வாறு தீட்டுகின்றார்.

"தம்பர் கதறினார். அவரது தாயும் தகப்பனும் இறந்த போதும், மனைவி மக்கள் வீடு விழுந்து மடிந்த போதும் எப்படி அழுதாரோ அதேபோல...இது அவரது கடைசி நிமிடம். அவரது உணவுக்கு வழி செய்யும் அந்த உயிரின் நாடித் துடிப்பு மெதுவாக அடங்கிக் கொண்டிருக்கின்றது."

மானுட நேயம் என்பது அர்த்தமுள்ளதாக மாறுகின்றபோது, இந்த நேயம் சக மனிதனில் மட்டுமல்ல தனக்குப் பிரியமான விலங்குகள், பறவைகள் மரங்கள் மீதாகவும் படர்ந்து விரிகின்றது. இந்த நாகரிகத்தின் பின்னணியில் தான் பாரதியும் "காக்கை குருவி எங்கள் ஜாதி", "வாலைக் குழைத்து வரும் நாய்தான் -அது மனிதனுக்கு தோழனடி பாப்பா" என்றும் பாடினார். பாரதி வழி வந்த நந்தினி சேவியரிலும் இந்த நாகரிகம் துளிர்விட்டு கிளைப்பரப்புகின்றது. கிராம வாழ்க்கையின் உன்னதங்களை அழகுற எடுத்துக்காட்டிய சிறுகதையாசிரியர், தன் கண் எதிரே உறுத்திக் கொண்டிருக்கும் வாழ்க்கையின் குரூரங்களையும் அவலங்களையும் மனதைப் பிழியும் துன்பக் காட்சிகளையும் கண்டு தூர விலகி காட்டியவரல்லர். ஆண் பெண் காமவேட்டையிலும் இருபாலரின் சதைப் பசியையும் இலக்கியமாக்கி அதனூடே தமது வயிற்றுப் பிழைப்பிற்கும் கம்பீரத்திற்கும் வழித் தேடிக் கொண்ட

படிப்பகம்

www.padippakam.com



நாளில், நந்தினி சேவியர் அத்தகைய வாழ்க்கைக்குள் காணப்படுகின்ற இன்னல்கள் முரண்பாடுகள் மோதல்கள் என்பனவற்றினை எடுத்துக் காட்டுகின்றார். அவரது தொகுப்பில் அடங்கியுள்ள அனைத்துக் கதைகளிலும் வேட்டையாடுதல், மில்லில்வேலை செய்தல், கிணறுவெட்டுதல், கல்லுடைத்தல், சைக்கில் ஓட்டுதல் பட்டறையில் உழியும் கையுமாக இருக்கும் கொல்லர், என பல கிராம தொழில்களின் மேன்மையை காட்டுகின்றார்.

அதே சமயம் கிராமப் புறத்து வாழ்க்கை இன்பலோகமாக மட்டும் அமைந்துவிடவில்லை: வாழ்க்கை அங்கும் போராட்டந்தான். இந்த அடிப்படையை உணராதவர்கள் தமக்குப் பிடித்தமான இன்பமான வாழ்க்கையை தந்தனர்.சமுதாயத்தில முரண்பாடுகளும் மோதல்களும் தோன்றி மாற்றத்தைத் வேண்டி இலக்கிய கர்த்தாக்கள் சமுதாயத்தில் உள்ள இன்னல்களையும் முரண்பாடுகளையும் அதனடியாக் எழும் கருத்தோட்டங்களையும் சித்திரித்துக் காட்டத் தவறவில்லை. இந்த புதிய பார்வையை, ஆழமான விசாலமிக்க நாகரீகத்தை நந்தினி சேவியரின் சிறுகதைகளில் காணமுடிகின்றது.

நந்தினி சேவியரின் தனித்துவங்களில் ஒன்று தான் கட்சி இலக்கியம் பற்றிய அவரது படைப்புகளாகும். கட்சி இலக்கியம் என்பது மனிதனை அவனது ஆக்கபூர்வமான செயலுக்கு இட்டுச் செல்லக் கூடியது. மனிதர் உணவை மனிதர் பறிக்கும் சமுதாயத்தை மாற்றுவதற்கான இயக்கமொன்றினை அடிப்படையாக கொண்டு படைக்கப்படும் இலக்கியமாகும். அவ்விலக்கியமானது மக்களை அமைப்பாக்கம் செய்வதுடன் அது சமூகமாற்றத்திற்கான ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட போராட்டங்களையும் வலியுறுத்தி நிற்கின்றது. தேசிய-பாலின-வர்க்க-சாதி ஏற்றத்தாழ்வுகளைத் தகர்த்துப்

படிப்பகம்

www.padippakam.com



பொதுவுடைமைப் புத்துலகம் படைக்கும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் போராட்டங்களைச் சரியான திசைமார்க்கத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கான தளம் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். இதுவே கட்சி இலக்கியத்தின் அடிப்படை இலட்சியமாகும்.

இதற்கு மாறாக, கட்சி இலக்கியம் கட்சியை உச்சமாகக் கொண்டு கட்சி உறுப்பினர்களைப் புனிதர்களாக காட்டுவது அல்ல. அவ்வாறே கட்சிக்குள் நடைபெறக் கூடிய விவாதங்களையெல்லாம் வெகுசன தளத்திற்குக் கொண்டு வந்து அவ் அமைப்பின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவதும் கட்சி இலக்கியமாகா. அது எதிர்புரட்சிகரமான செயலாகும். மாஓ, கட்சி உறுப்பினர்களிடையேயான முரண்பாடுகள் குறித்தும் மக்கள் மத்தியிலான முரண்பாடுகள் குறித்தும் தெளிவானதோர் நிலைப்பாட்டினை முன்வைத்தார். தமிழ் சூழலில் கட்சி இலக்கியம் என்பது தமது அமைப்பு சார்ந்தவர்களை உச்சமாக காட்டுவதற்கும் தமது அமைப்பு சாராதவர்களை எல்லாம் எதிரியாக காட்டவும் பயன்படுகின்ற இலக்கியப் போக்காகவே வளர்ந்து வந்துள்ளதைக் காணலாம். பலர் புனைப்பெயர்களை தமக்குச் சாதகமான வகையில் பயன்படுத்திக் கொள்கின்றனர். புரட்சிகரமான சமுதாய மாற்றங்களை விரும்பும் எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் இந்த அறிவு ஜீவிகள் குழப்பவும் செயலற்றவர்களாக காட்டவும் முனைகின்றனர். முதலாளித்துவ சித்தாந்தத்திற்கும் தொழிலாளி வர்க்க சித்தாந்தத்திற்கும் இடையிலான போராட்டத்தில் இவர்கள் முதலாளித்துவத்துடன் கைகோர்த்து நிற்பவர்களாவார். இந்த முழக்கங்களின் பின்னணியில் வாசகர்களையும் பொது மக்களையும் ஏமாற்ற முயல்கின்றனர்.

மார்க்சியர் என்ற வகையில் நோக்குகின்ற போது அவர்கள் இரு விதங்களில் சுரண்டல், அதிகாரம்,

படிப்பகம்

www.padippakam.com



ஒடுக்குமுறைகளுக்கு எதிரானவர்களாகவும் சமூக செயற்பாட்டாளர்களாகவும் காணப்படுகின்றனர். ஒன்று கட்சி அமைப்பைச் சார்ந்த மார்க்சியர்கள்.இவர்கள் அமைப்பு சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களாக காணப்படுவர். அமைப்பு சாராத மார்க்சியர்கள் மக்களை விழிப்படைய செய்வதுடன் அவர்களை ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போர்க்குணம் கொண்டவர்களாக மாற்றுவர். சீன இலக்கிய முன்னோடி லூசுன் இதற்குத் தக்க எடுத்துக் காட்டாகும். நமது சூழலில் சிலர் தமது தத்துவத் தெளிவின்மை காரணமாக இதனைக் கண்டு கொள்ளத் தவறியுள்ளனர். தமிழில் கட்சி இலக்கியம் சார்ந்த படைப்புகளை படைப்பாளுமையுடனும் நேர்மையுடனும் வெளிக் கொணர்ந்த படைப்பாளிகளில் நந்தினி சேவியர் முக்கியமானவொருவர். அவரது "நீண்ட இரவுக்கு பின், "மத்தியானத்திற்குச் சற்று பின்பாக", "ஆண்டவருடைய சித்தம்" ஆகிய சிறுகதைகள் இதற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும். அவரது கட்சி இலக்கிய படைப்புத்திறனுக்கு உதாரணமாக நீண்ட இரவுக்கு பின் என்ற கதையில் வரும் பின்வரும் பந்தியை எடுத்துக் காட்டலாம்:

'மச்சான் பாத்தியே ரத்தினபாலாவைப் போலையும் உன்னைப் போலையும் எத்தினை தமிழ் சிங்களச் சீவன்கள் கஷ்டப்பட்டு வந்ததோ தெரியாது, நாங்கள் கதைச்சதாலை எங்களுக்குப் பிரச்சினை விளங்கிச்சுது... மற்றதுகள்?"

"குலம் உத்தியோகம் கிடைக்காது என்கிறதாலை மட்டும் நான் இந்த முடிவுக்கு வரயில்லை. நீங்கள் படுகிற கஷ்டத்தைப் பார்த்த பிறகும் இந்த நாட்டிலை இருக்கிற பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு நீங்கள் சொல்கிற மார்க்கந்தான் சரி எண்டு எனக்கு விளங்கி விட்டது. நானும் வரதனோடை சேர்ந்து உழைக்க வேணும். இண்டைய நிலையில் அது கூடக் கிடைக்குமோ தெரியாது.

www.padippakam.com



ரத்தினபாலா போல நானும் விடிவுக்கான மார்க்கத்தைக் காண உழைக்கப்போகிறேன். அந்த நிலை வந்தால்தான் விடிவும் இந்த நிலைக்கு முடிவும் வரும். என்னை நம்பு நான் திருந்தியிட்டன்."

நந்தினிசேவியரின் கதைகளில் இனம் மதம் மொழி சாதி கடந்த மானுட விடுதலைக்கானச் சிந்தனையும் அதனை அடைவதற்கான அமைப்பாக்க சிந்தனையும் முனைப்படைந்திருப்பதைக் காணலாம். இவ்வுறவுகள் கோட்பாடாக விவரிக்கப்படாமல் பாத்திர படைப்புகளின் ஊடாக, அதன் அழகியல் குன்றாத வகையில் சித்திரித்துள்ளமை அவரது தனித்துவமாகும்.

பிரெஞ்சுப் புரட்சியின் போது, புரட்சிக்காரர்களை அரசு கில்லட்டனில் வைத்து ஈவிரக்கமற்ற நிலையில் கொன்று குவித்தது. இதனைப் பார்த்துப் பார்த்து மரத்துப் போன மனித உள்ளங்கள்- சில வேளைகளில் அதனைப்பார்த்துக் கொண்டே பெண்கள் எம்பிராய்ட் செய்தார்களாம். இன்று எமது சூழலில்- நகர வாழ்க்கையின் அவலங்களையும் இன்னல்களையும் பார்த்துப் பார்த்து மரத்துப் போன மக்கள் எவருக்காகவும் உதவ முன்வராத பண்பு வளர்ந்து வருவதைக் காணலாம். இதன் தாக்கம் கிராம புறங்களையும் பாதிக்காமல் இல்லை என்ற போதிலும் ஆங்காங்கே மனித நேயம் குடி கொண்டிருப்பதை அவரது "ஒரு பகற் பொழுது" என்ற சிறுகதை சித்திரிக்கின்றது.

இந்நாட்டிலே இனவாதம் குமிழ்விட்டு மேற்கிளம்பிய போது அது தோற்றுவிக்கக் கூடிய பரிமாணங்கள், வாழ்க்கை கோலங்கள் சமுதாய அவலங்கள் அதன் பின்னணியில் காணாமல் போகும் மனிதர்கள் பற்றி கூறுவதாக "தொலைந்து போனவர்கள்" என்ற சிறுகதை அமைந்திருக்கின்றது. இக் கதை இன்றுவரை காணாமல் போனவர்களை ஞாபகப்படுத்துகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



இவ்விடத்தில் முக்கியமான பிறிதொரு விடயம் பற்றிய தெளிவும் அவசியமனதாகும். அதாவது நந்தினி சேவியர் இலக்கிய உலகில் காலடி வைத்த காலத்தில் தான் இலங்கையின் வடக்கில் சாதிய எதிர்ப்புப் போராட்டம் துளிர் விட்டு உச்சத்தை அடைந்திருந்தது. டானியல் இப்போராட்டம் சார்ந்த இயக்கத்திலும் போராட்டங்களிலும் பங்கு பற்றிய காலங்களில் எழுதிய சிறுகதைகளில் சாதியம் கடந்த வர்க்க உணர்வே முனைப்புற்றிருந்தது. இடதுசாரி கட்சியிலிருந்தும் இப் போராட்டங்களிலிருந்தும் அவர் தூர விலகிய பின்னர் வர்க்க சிந்தனையை விட சாதி தீவிரமே அவரது படைப்புகளில்முதன்மைப்படுத்தப்பட்டது. அந்தவகையில் டானியல் ஊடாக தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வும் போராட்ட உணர்வுகளும் வெளிக்கொணரப்பட்டன என்ற போதினும், மக்கள் இயக்கங்களையும் இலக்கியங்களைத் தாக்குவதற்கும் தகர்த்துவதற்கும் கூட அத்தகைய படைப்புகள் காரணமாக அமைந்தன. இவ்வகையில் நந்தினி சேவியரின் படைப்புகளை நோக்குகின்ற போது தேசிய ஜனநாயக சக்திகளின் குரலாகவே அவரது படைப்புகள் அமைந்து காணப்படுகின்றன. இறுதி வரை நந்தினி சேவியர் இத்தகைய இயக்கத்தோடு இணைந்திருந்தமை இதற்கான அடிப்படையெனக் கூறுவது தவறாகாது.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள கதைகளை ஒட்டு மொத்தமாக நோக்குகின்ற போது முக்கியமானதொரு விடயம் பற்றிய கவனம் செலுத்துதல் அவசியமானதாகும். அதாவது நமது சிறுகதை எழுத்தாளர்கள் படைப்பாளிகள் திரும்பத் திரும்ப ஒன்றையே கூறுவதற்கான காரணம் அவர்களது சமூக தரிசனம் பற்றிய தெளிவின்மையாகும். நமது சிறுகதைப் படைப்பாளர்கள் சிலர் தத்துவார்த்த தெளிவு அல்லது அறிவு பெற்றிருப்பினும் அவர் அதனை கதை நிகழ் சூழலுக்கேற்ப தமிழ் மரபிற்கேற்ப பொருத்திப்

படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பதில் இடறுகின்றனர். இந்த சமூக அனுபவம் விஸ்தரிக்கப்படாமையால் கலைப்படைப்புகளில் காலத்திற்கேற்ற உள்ளடக்கத்தினை அதன் வடிவம் சிதையாதவகையில் வெளிக் கொணரத் தவறிவிட்டனர். அந்தவகையில் நந்தினி சேவியரின் கதைகள் மனிதாபிமானமுள்ளவர்களின் இதயத்தை நெருடும் சக்தியாக பொழிந்து கிடக்கின்றது. கதையில் வரும் பாத்திரங்கள் உயிருள்ள ஜீவன்களாக இருக்கின்றன. அவை மனிதாபிமானமுள்ளவர்களின் ஆத்மாவை உலுக்கும் சக்தியாக பொழிந்து கிடக்கின்றன. ஈழத்து தமிழ் மரபை பேணி உலக இலக்கியத்தில் இடம்பெறத் தக்க சிறுகதைகளைப் படைக்க நமது நாட்டு எழுத்தாளர்களாலும் முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவனவாக நந்தினி சேவியரின் சிறுகதைகள் அமைந்து காணப்படுகின்றன.

தேசியம், மண்வாசனை என்ற கோட்பாட்டுப் போராட்டங்கள் இயக்க ரீதியாக முன்னெடுக்கப்பட்ட போது மக்களின சமகால வாழ்க்கை இலக்கியமாக்கப்பட்டன. பிரதேசம் சார்ந்த மொழிநடை பழக்கவழக்கங்கள் புதிய அழுத்தங்களுடன் இலக்கிய உலகில் சஞ்சரித்தன. இந்த இலக்கியப் போக்கினை நந்தினி சேவியர் கடைப்பிடித்திருந்தார் என்பதை இத் தொகுப்பில் அடங்கியிருக்கின்ற சிறுகதைகள் எடுத்துக் காட்டுகின்றன. கவிஞர் இ.முருகையன் வழங்கியுள்ள முன்னுரையும் நந்தினி சேவியரின் படைப்பாளுமையை சிறப்பான முறையில் மக்களுக்கு அறிமுகம் செய்கின்றது.

**'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்'** என்ற தொகுப்பை சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்தார் தேசிய கலை இலக்கிய பேரவையுடன் இணைந்து வெளியிட்டுள்ளனர்(1993). விலை- 12 ரூ. (இந்திய விலை)

**நன்றி: இனியொரு.கொம்.(2010- டிசம்பர்)**

படிப்பகம்

www.padippakam.com



## நன்றிகள்!

*பிரசுரித்தோர், தேடித்தந்தோர்,*
*எஸ்.ஆர்.தனபாலசிங்கம், முகைதீன் சாலி,*
*வ.கிறிஸ்ரோப், உடுவில் அரவிந்தன்,*
*ரவிக்குமார், செ.யோகராசா,*
*செல்லத்துரை சுதர்சன்,*
லெனின் மதிவானம்,
*வதிரி.சி. ரவீந்திரன், மேமன்கவி,*
*மல்லிகை, ஞானம், இனியொரு.கொம்,*
*அகளங்கன், தோழர்கள் அருள், மார்க்கு.*
*கொடகே நிறுவனத்தார், வாசகர்கள்.*

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



நந்தினி சேவியர்

குரலை உயர்த்தாமலேயே
கொதிப்பை வாசகனுக்குக் கடத்த முடியும்
என நிரூபிப்பவை இவரது சிறுகதைகள்.

—ரவிக்குமார்—
தலித் இதழ் ஜன் – 2003

350/-

ISBN 978-955-30-3146-4

எஸ். கொடகே சகோதரர்கள்
675, பீ. டி எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904
godageem@slt.lk www.godage.com

9789553031464

Nellimarap Pallikkoodam

அட்டை வடிவமைப்பு - மேமன்கவி

படிப்பகம்